KALKI 12.3.95 ரூ. 3.00

கல்கி



வீரப்பன் கோட்டைக்கு ஒரு விசிட்!

சர்வோ® ஜீவனை அதிகரிக்கும்.

இந்தியா



ஊறுகிறது.



சர்வோ®. இந்திய நிலைமைக்கு ஏற்று, சோதிக்கப்பட்டு இந்திய விஞ்ஞானிகள் அளிப்பது இந்தியன் ஆயில்.

சர்வோ. இருபது ஆண்டுகளாக இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உயிர்நாடி. இரயில்வேக்களிலும், பாதுகாப்பிலும், இரும்பிலும், சுரங்கத் தொழிலிலும், சக்தியிலும், விமானத்துறையிலும், சிமெண்டுத் துறையிலும், விவசாயத் துறையிலும், ஆலைகளிலும் வண்டிகளிலும்—**சர்வோ.** இந்தியாவில் உள்ள இந்த ஒரு பிராண்ட் பேரதிய சர்வோ செயல்களிலும் உறுதுணையாக நிற்கிறது.

வேறு என்ன வேண்டும் மிக அதிக அளவில் உயர்ந்த திறனுள்ள 400 க்கும் மேற்பட்ட லூப்ரிகெண்ட்களும் கிரீஸும் **சர்வோ** வழங்குகிறது.
சர்வோ—பரிதாபாதிலுள்ள ஆசியாவின் மிக முன்னேற்றமடைந்த ஆர் & டி சென்டரிலுள்ள நமது இந்திய விஞ்ஞானிகளால் குறைவறச் செய்யப்பட்டது.



சர்வோ®. இந்தியாவில் மிக அதிக அளவில் விற்பனையாகும் எஞ்சின் ஆயில்.

IOC-285/94 TAM B

வைகோவுடன் இணைந்த எம்.ஜி.ஆர். ரசிகர்கள்!



● தமிழ் மாநாட்டுக்குப் பிறகு தஞ்சை மறுபடியும் குலுங்கியது. மார்ச் முதல் தேதி வை.கோ. தலைமையிலுள்ள ம.தி.மு.க.வுடன் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்களின் கூட்டமைப்பு இணைந்தபோது தான். டிராக்டர்களிலும், லாரிகளிலும், 'புரட்சிப் புயல் வை.கோ. வாழ்க!' என்றபடி வாலிபப் பட்டாளம். எம்.ஜி.ஆரும் வை.கோவும் ஆளுயர போஸ்டர்களில் நகரை ஆக்ரமித்திருந்தார்கள். அறுபதடி உயரத்தில் ஒரு கட்-அவுட். ஆமாம்! எம்.ஜி.ஆர்.தான். மன்னாதி மன்னன் போஸ். ரொம்ப நாளைக்குப் பிறகு எம்.ஜி.ஆர். கட் அவுட்டைப் பார்த்த எம்.ஜி.ஆர். ரசிகர்கள் வாஞ்சையோடு பார்த்து கொண்டே இருந்தனர்.

● தலைமை வகித்த எல். கணேசன், பேச்சாளர்களை ஐந்து நிமிடத்துக்கு மேல் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். ஆனால் கூட்டத்தைக் கண்ட ஆர்வத்தில் வெளுத்துக் கட்டினார்கள் பேச்சாளர்கள். அதிலும் குறிப்பாக நாஞ்சில் சம்பத், கவிஞர் குடியரசு (கொஞ்சம் ஆபாசமும் உண்டு) கூட்டத்தை விழித்திருக்க வைத்தார்கள். மதுராந்தகம் ஆறுமுகம் அச்சப் பிச்க என்று இரண்டு, மூன்று இங்கிலீஷ் வார்த்தைகளை எடுத்து விட்டவுடன் கூட்டத்தில் நகைச்சுவை அனல் பரவியது. வை.கோவும் வாய் விட்டுச் சிரித்தார்.

● பெரும்பாலான பேச்சாளர்கள் கலைஞரை ஒரு பிடி பிடித்தார்கள். ஜெ. இரண்டாம்பட்சமாகி விட்டார். எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ததைப் பற்றி சபாபதி மோகன் என்ற பேச்சாளர் குறிப்பிட்ட போது கூட்டத்தில் ஆரவாரம். யாரும் தப்பித் தவறிக் கூட 'நடப்பு' விஷயமான மத்திய சிறையிலிருந்து புலிகள் தப்பித்துச் சென்றது பற்றிக் கண்டு கொள்ளவில்லை!

● 'வெறும் நான்கு மாவட்டத்தைச் சேர்ந்த ரசிகர்கள்தான் இப்போது இணைகிறார்கள்' என்ற விவரத்தைச் சொன்னார் எஸ்.ஆர்.ராதா.

● பேச்சாளர்கள், அழகு திருநாவுக்கரசின் பெயரைக் குறிப்பிட்டபோதெல்லாம் கூட்டத்தில் கரகோஷம். ''அவர் தொகுதியிலிருந்து கணிசமான ஆட்களைத் திரட்டி வந்திருக்கிறார்'' என்று உள்ளூர் நண்பர் காதைக் கடித்தார்.

● "இன்றைக்கு உள்ள தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களில் லஞ்ச - ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகாதவர் வைகோ. அவர்கள்தான். ஆகவேதான் அவருடன் இணைகிறோம்!" என்றனர் அழகுவும், ஜி.வி.யும். அது சரி இவர்களுடன் இருந்த ராஜாராம் என்ன ஆனார்? ''வை.கோ.வைத் தலைவராக ஏற்றுக் கொள்ளலாமா?'' என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம். தலைமுறை இடைவெளிதான் காரணம் என்று பேச்சு!

● வை.கோ. இரவு 12.30- க்குப் பேசத் துவங்கினார். ''1972-ல் எம்.ஜி.ஆர். கட்சியை விட்டுப் பிரிந்து போன பிறகு எம்.ஜி.ஆரைத் தாக்கிப் பேசியிருக்கிறேன். அதற்குக் காரணம் அப்போது நான் ஏற்றுக் கொண்டிருந்த தலைமையின் தூண்டுதல்தான். ஆனால் 1986-ல் மக்கள் திலகத்தின் மனிதாபிமானத்தை உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்பின் எம்.ஜி.ஆர். அவர்களை நான் தாக்கிப் பேசியதே கிடையாது. தவறை ஒப்புக் கொள்வதில் தவறேதும் கிடையாது!'' என்று பேசினார் வை.கோ. எம்.ஜி.ஆரை 'புரட்சித் தலைவர்' என்று குறிப்பிடவில்லை அவர். பேசியது தஞ்சை மண் என்றபடியால், ராஜராஜன், விஜயாலயன் என்று சோழர் வரலாற்றை உணர்ச்சியுடன் விவரித்தார் வை.கோ. கூட்டம் முடிந்து பல மணி நேரம் வரை சோழர்கள் நம் காதுகளை விட்டு அகலவில்லை.


- ப்ரியன்

படம் : ராஜன்



நேற்றைய குற்றம்; இன்றைய நியாயம்; நாளைய சட்டம்!

சமீபத்தில்
கமல்—ஷங்கர்—ரகுமான்
காம்பினேஷனில்
பூஜை போடப்பட்டு ஊரெல்லாம்
ஒட்டப்பட்ட 'இந்தியன்'
போஸ்டரில் காணப்பட்ட
வாசகம் இது!
வித்தியாசமாகப்
பட்டதால் கொஞ்சம் தமாஷ்
பண்ணத் தோன்றியது!





பால்ய விவாகம் நடத்துறது தப்புன்னு தெரியாதா? நடங்க ஸ்டேஷனுக்கு...
லவ் பண்ணா என்ன தப்புங்கறீங்க? வாங்க ஸ்டேஷனுக்கு...
21 வயசுக்குள்ளே திருமணம் பண்ணக் கூடாதுன்னுதான் சட்டம் இருக்கு! இதுக்கெல்லாம் சட்டம் கிடையாது...
அம்மா
இப்ப அடிவை அடிக்கறதை நிறுத்தப் போறியா இல்லையா?...
ஹா... ஹா... ஹா...
ஐயோ பாவம், மன்னிச்சு விட்டுடுப்பா...
ஐயோ
அம்மா
வரதட்சணை வாங்கறது தப்புன்னு தெரியாதா? உங்க மேல கம்ப்ளைண்ட் கொடுக்கப் போறேன்!
முதல்லயே எங்கப்பாகிட்ட அவ்வளவு விடாம கேட்டு வாங்கிட்டீங்க! கல்யாணத்துக்கு பிறகு டபாய்க்கறீங்க!
அரசாங்க விலைப் பட்டியல் வரதட்சணை
தொழில் | ரொக்கம் | நகை
டாக்டர் | 3 லட்சம் | 200 பவுன்
என்ஜினியர் | 2 லட்சம் | 150 பவுன்
ஆபீஸர் | 1.5 லட்சம் | 100 பவுன்
கிளார்க் | 75,000ரூ | 75 பவுன்
பியூன் | 50,000ரூ | 50 பவுன்
கூலி | 30,000ரூ | 25 பவுன்

கவர் ஸ்டோரி


வீரப்பன் கோட்டைக்கு ஒரு விசிட்!

ஏன் இன்னும் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை? பிரேமானந்தா, கிட்னி, கம்ப்யூட்டர் கடத்தல் என்று புதிது புதிதாக எத்தனை பரபரப்பு வந்தாலும் இந்தக் கேள்வி இன்னும் அதே புது மெருகுடன், முடிச்சவிழ்க்காத கிரைம் நாவல் மர்மம் மாதிரி நீடிக்கிறது.

வீரப்பன் ராஜ்ஜியம் என்று சொல்லப்படுகிற சத்தியமங்கலம் தரைப்பகுதியிலிருந்து ஆரம்பித்து, பண்ணாரி, தாண்டி மலைப் பாதையில் திம்பம், ஆசனூர், தாளவாடி வரை சமீபத்தில் ஒரு விசிட் அடித்ததில் மாறுபட்ட அனுபவங்கள் சில கிடைத்தன.

வீரப்பன் வேட்டைக்கு வருஷக்கணக்கில் செலவாகிக் கொண்டிருக்கிற கோடி கோடி மக்களின் கோடி கோடிப் பணம் பற்றிய தார்மீக வருத்தச் சிந்தனை ஒருபுறமிருக்க, வீரப்பன் இதுகாறும் சிக்காததன் காரணமான இந்த மலைப் பரப்பின் ஜியாகரபியைக் கொஞ்சம் கூர்ந்து நோக்குவது அவசியம்.

மிகவும் கரடு முரடான, ஒன்றன் பின் ஒன்றாக உயரத்தில் அதிகரித்துக் கொண்டே போகிற மலைகள். திடும் திடுமென்று ஆயிரம் அடிச் சரிவுகள். பாதம் தப்பினால் பாதாள லோகம்!



• வீரப்பன் கோட்டை


வீரப்பன் புண்ணியத்தில் ஒழுங்காகச் சாலை போட்டிருக்கிறார்களோ, தப்பித்தோம். மற்றபடி கொளுத்தும் பகலிலும் இருட்டு சாம்ராஜ்ஜியம். சாலையோர மரக்கிளைகளில் கிஷ்கிந்தா வாசிகள்.

நினைத்துக் கொண்டாற்போல் சலசலவென இறங்கும் காட்டு ஓடைகளுக்கு யானைகள் நித்ய விஜயம். இரவுகளில் கரடி வரும் என்று மலைவாசிகள் சொல்கிறார்கள்.

வீரப்பன் வருவானா? "வருவார்" என்று விகுதியை அழுத்திச் சொல்கிறார்கள்.


மலைச் சரிவுகளில் சுமார் 2000 மீட்டர் உயரங்களில் இருபது, முப்பது வீடுகள் முளைத்து, கிராமம் என்று அங்கங்கே பெயர் பெற்றிருக்கின்றன. நெல், கம்பு, துலுக்க சாமந்தி (சென்ட் ஃபாக்டரிக்காக) பூண்டு பயிரிடுகிறார்கள். இயற்கை வேலியாக சந்தனச் செடிகள்!

தேவாரம் பொறுப்பேற்றுப் போன புதிதில் இக்காட்டுப் பகுதியில் அங்குலம் அங்குலமாக அலசி எடுத்து விட்டாராம். இரவு, பகல் பாராமல் மலைவாசிகளின் கிராமங்களில் விசாரணை வேட்டை. இதற்குப் பயந்து பலர், கீழே இறங்கி, கோபி செட்டிப்பாளையம், பொள்ளாச்சி பக்கம் நடைபெறுகிற ஷூட்டிங்குகளுக்கு உதவி செய்யப் போய்விட்டிருக்கிறார்கள். வேறு சிலர்



• ஆசனூர் அம்மன் கோவில்





திம்பம் மலைப்பகுதி

பால் வியாபாரம், பஸ் ஸ்டாண்ட் கூலி என்று தத்தம் வழி பார்த்துக் கொள்ள, காலப் போக்கில் வேட்டை வீரியம் குறைந்து விட்டது.

அதிரடிப் படையினர் மேல் இருந்த பயமெல்லாம் போய் 'அண்ணே, டீ சாப்டறீங்களா?' லெவலுக்கு வந்திருக்கிறது. வீரப்பனோடு தொடர்பு, தகவல் பரிமாற்றம், உணவு இன்னபிற அத்தியாவசியப் பொருட்கள் சப்ளை எப்படி இம்மலை வாசிகளால் நடைபெறுகிறதோ, அவ்வண்ணமே அதிரடிப் படையினருக்கும் இம்மக்களின் ஆதரவு வேண்டியிருக்கிறது. அடித்துப் போட்டால் கேட்க நாதியற்ற மலைக் காட்டில் அ. படையினருக்கும் வேறு வழியில்லை.

2000 - 3000 அடி உயரத்தில், திம்பம் - ஆசனூர் - தாளவாடி (த.நா. எல்லை) சுற்று வட்டாரத்தில்தான் மக்கள் - காவல்துறை நடமாட்டமெல்லாம்.

"வீரப்பன் உலவுவது 3000 அடிக்கு மேலேயும் உட்புறம் 2000 அடிக்குக் கீழேயும்தான். இங்கேயே சுற்றிச் சுற்றி வந்து வீரப்பனைப் பிடிக்கப் போகிறேன் என்றால் எப்படி?" என்று கேட்கிறார் ஆசனூர் இளைஞர் ஒருவர்.

வீரப்பன் உலவும் இடம் குறித்துப் பலர் சிண்டைப் பிய்த்துக் கொண்டாலும் முன் சொன்ன கிராமங்களுக்கு அவன் அடிக்கடி வந்து போவதை வேறு பலர் ஒப்புக் கொள்கிறார்கள்.

திம்பம் பகுதியில் ஒரு சாலையோர ஹோட்டலில், "அண்ணன் போன மாசம் கூட வந்து போனாருங்க. மாறு வேசம் தான்! ஆனா வேசம் போட்டு மறைக்கக் கூடிய முகமா அது! 'தில்'லா போலீஸ்காரன் எதிரயே உக்காந்து சாப்பிட்டு, பில்லு கொடுத்து, மீதி சில்லறை வாங்கிட்டுத்தான் போவாரு. எத்தினியோ வாட்டி நடந்திருக்கு. யாருக்குத் தெரியும்?"

தெரிந்தாலும் தெரியாதது போல் இருந்து விடுவார்கள் என்பது உள்ளூர் மக்கள் தரும் மற்றொரு தகவல்!

"வீடு, புள்ளைகுட்டியெல்லாம் விட்டுட்டு காட்டுல வந்து இருக்காறுங்க. (காவல் படையினர்.) உசிரோட திரும்பிப் போவணும்னு பயம் இருக்

‘‘வீரப்பனுக்கு அதிர்ஷ்டம் கைகொடுக்கிறது!’’

வீரப்பன் தனது முதல் எதிரியாகக் கருதும் கூடுதல் டி.ஜி.பி. தேவாரத்தை அவரது ராஜாஜி ஹால் புதிய அலுவலகத்தில் சந்தித்துப் பேசினோம்.

"வீரப்பனை இதுவரை பிடிக்க முடியாமல் இருப்பதற்கு அவன் சாமர்த்தியம், திறமை காரணம் என்பதில்லை. அவன் சுற்றும் இடம் காரணம். யோசித்துப் பாருங்கள். ஐந்தாயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள மலைக்காடு. நமது எதிரிகள் மொத்தம் இப்போது ஐந்தே பேர். எப்படி லொக்கேட் பண்ணுவது? ஏரியா மிகப் பெரியதாக இருப்பதால் அவனை ட்ரேஸ் பண்ணுவது சிரமமாயிருக்கிறது. இருப்பினும் ஒரு நாளைக்குக் குறைந்தது 40-50 கிலோ மீட்டராவது காட்டுக்குள் புகுந்து தேடுகிறோம். அதிர்ஷ்டம் மட்டும்தான் அவனை இதுவரை காப்பாற்றி வந்திருக்கிறது."

‘‘மலைவாசி மக்கள் ஆதரவால்தான் அவன் சிக்காமலிருக்கிறானா?’’



படம்: ராஜ நாராயணன்

"ஆதரவா? மக்களா? மனப்பூர்வமாக யாரும் அவனுக்கு உதவுவது கிடையாது. பயம்தான் காரணம்! கையில் துப்பாக்கியோடு போய் மிரட்டினால் வேறு வழியில்லாமல் உதவித்தானே ஆக வேண்டும்! மேலும் உதவி என்று நான் குறிப்பிடுவது உணவு வகையில்தான். அரிசி, ராகி போன்ற

காதா?’’ - இப்படி உண்மையிலேயே மனசில் ஈரம் கசிய உள்ளூர்வாசிகள் காவல் துறைக்கு ஆதரவாய்ப் பேசுகிறார்கள்.

காவல் படையினர், வீரப்பனை அவ்வப்போது பிடிக்கக் கிடைக்கும் வாய்ப்புகளை நழுவவிடுவது கிராம மக்களிடம் வேறு விதமாகவும் விஸ்வரூபம் எடுக்கிறது. பாராவுக்கு வந்தது போல் இல்லாமல் காவல் துறையினர் ஏதோ பிக்னிக் வந்தது போல் இந்தச் சூழலை அனுபவித்துக் கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள்.

"இங்கே விளையற முள்ளங்கி, சாத்துக்குடி, இளநீர், மாங்காய்னு எல்லாத்தையும் ஒண்ணு விடாம சாப்பிடறாங்க. போதாததுக்கு காட்டுல முயலையும் மானையும் வேற அடிச்சுச் சாப்பிடறாங்க. இதையே நாங்க செய்தா பெரிய குத்தமாயிடுது...." என்று அலுத்துக் கொள்கிறார்கள்.

தர்மபுரி காட்டுப் பகுதிகளில் பழங்குடி பெண்களைக் கற்பழித்ததாக காவல் துறை மற்றும் காட்டிலாகா அதி காரிகள் பேரில் குற்றம் சாட்டப்பட்டு, சென்னை உயர்நீதி மன்றம் சி.பி.ஐ. விசார ணைக்குக் உத்தரவு பிறப்பித்துள்ளது. நல்ல சிவன் (சி.பி.ஐ. எம்.) தாக்கல் செய்த மனுவின் பேரில்தான் இந்த விசாரணை உத்தரவு பிறப்பித்துள்ளது. சந்தனக் கடத்தல் போன்ற குற்றங்களில், காவல்துறையினருக்கும் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கூட பங்கு உண்டு என்றும் நல்லசிவன் கொடுத்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

காவல் துறையினர் மக்கள் பார்வையில் வில்லனாகும் போது விபரீதமான விளைவுகள் ஏற்படுகின்றன.

உண்மையில் வில்லன்களான வீரப்பன் போன்றோர் அவர்களுக்கு ஹீரோக்களாகவே தோன்றுகிறார்கள்! போதாக் குறைக்கு யார் வந்தாலும் வீரப்பனை உயிரோடு பிடிக்க முடியப்போவதில்லை என்கிற எண்ணம் உருவாகி விட்டது! அவன் பெயரை உச்சரிப்பதிலேயே தன்னால் ஒரு மரியாதை பிறக்கிறது.

"அண்ணன் அனாவசியமா யாரையும் கொல்லமாட்டாருங்க!" என்று ‘சர்ட்டிஃபிகேட்’ தருகிறார்கள்!

எப்போதும் வீரப்பன் வரலாம் என்பதனால் மிகவும் உள்தள்ளிய காட்டு வாசிகளின் குடிசைகளில் கூடுதலாக ஒரு சாப்பாடு எப்போதும் இருக்கும் என்று சொல்கிறார்கள்.

இத்தகைய உதவிகள் நிரந்தரமாகக் கிடைக்க வீரப்பன் பல நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் சொல்கிறார்கள்.

வற்றை மக்களிடம் விலை கொடுத்தே வாங்கிப் போகிறான். மற்றபடி போலீஸிலிருந்து தப்புவதற்கோ- தகவல் கொடுக்கிறதோ- இந்த மாதிரி உதவிகளை மக்கள் இப்போது செய்வதில்லை."

"ஆசனூர், திம்பம் கிராமங்களில் உள்ள சாலையோர ஓட்டல், டீக்கடைகளுக்கு மாறுவேடத்தில் வீரப்பன் வருவதாக அங்குள்ள மக்களே சொல்வது...?"

"சாத்தியமேயில்லை. மாறுவேடமாவது, ஒன்றாவது! சில வருடங்களுக்கு முன் நடந்தவையாக இருக்கலாமே தவிர இப்போது நிச்சயம் இயலாது. உணவுப் பொருட்களுக்கே கூட அவன் ஆட்களை அனுப்புவதும் நின்று விட்டது. எப்போதாவது ஆடு, மாடு மேய்ப்பவர்களை மிரட்டி மொத்தமாக 50-100 கிலோ வாங்கிச் சேமித்துக் கொண்டு, வெளியே வருவதையே நிறுத்தி விட்டான்."

"அதிரடிப் படையினரின் வேகம், ஆர்வம் முன் இருந்ததைப் போல இப்போது இல்லை என்று சொல்லப்படுவது குறித்து? தவிர, நீங்கள் ஃபீல்டில் இல்லாத சமயங்களில் பணி நடைபெறுவதில்லை என்கிறார்களே?"

"அதெல்லாம் சும்மா. கோவை எஸ்.பி. சஞ்சய் அரோரா மிகத் திறமையாகச் செயல்படுகிறார். மேலும் என்னால் எப்போதும் அங்கேயே இருக்க முடியாதல்லவா! மற்ற பணிகள் இருக்கின்றனவே! மெஸேஜ் வந்தால் இதுமாதிரி- நூறு கி.மீ. சுற்றளவில் வீரப்பன் இருக்கிறான் என்று உறுதியான தகவல் வந்தால்- உடனே போய் விடுகிறேன். நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பணி தடங்கலின்றி நடைபெறுகிறது."

"அதிரடிப் படையினர் காட்டில் மான்களையெல்லாம் அடித்துச் சாப்பிடுவதாக கிராம வாசிகள் சொல்வது பற்றி...?"

"ஒரு வேளை கர்நாடக போலீஸாக இருக்கலாம். நம் ஆட்கள் நிச்சயம் செய்யமாட்டார்கள். நானே தேவலை.. எஸ்.பி. சஞ்சய் அரோரா மிகவும் கண்டிப்புக்காரர். வன விலங்குகளை அடிக்கிறார்கள் என்று தெரிந்தால் இது நாள் வரை வேலையில் விட்டு வைத்திருக்க மாட்டார்."

"பண்ணாரி முகாமில் வீரப்பன் மனைவிக்கு காவலர்களால் தொல்லை என்று பேச்சு அடிபடுவது குறித்து..."

"வெறும் வதந்தி. அந்தப் பெண்ணை நாங்கள் ஒன்றும் கைது பண்ணி வைத்திருக்கவில்லை. பாதுகாப்புக்காக அவளேதான் வந்திருக்கிறாள்."

"அப்படியா?"

"பின்னே? வீரப்பனால் கொல்லப்பட்ட எத்தனையோ பேரின் உறவினர்களால் ஆபத்து நேரலாம் என்பதால் அந்தப் பெண்ணேதான் போலீஸ் பாதுகாப்பில் வந்து இருக்கிறாள். தேவையில்லை என்றால் போகட்டுமே! எங்களிடம் அவள் மேல் கேஸ் எதுவும் இல்லை."

"உங்கள் தேடுதல் பணியின் அடுத்த கட்டம்...?"

"ஒவ்வொரு நிமிஷமும் முயன்று கொண்டுதானிருக்கிறோம். பிடித்து விடுவோம்."

நம்பிக்கையில்தானே வாழ்க்கையே இயங்குகிறது!

பேட்டி: **பா.ராகவன்**

மலைவாழ் மக்களின் வீட்டு விசேஷங்களுக்கு அன்பளிப்பு (ஆயிரக்கணக்கில்!) அனுப்புவதும் அவ்வப்போதைய தேவைகளுக்கு உதவுவதும் வீரப்பனின் வெற்றி ரகசியம்.

தவிர, மழை-மலைச்சரிவுக்காலங்களில் பயிரான பொருட்களை கீழே இறக்க வழியில்லாமல் பாதை அடைபடும் சந்தர்ப்பங்களில் தம் ஆட்களோடு உள்ளூர் இளைஞர்களுக்கு உதவியாக சரக்கு இறக்க ஒத்துழைப்பதாகவும் ஆசனூர் வாசிகள் தயங்கிச் சொல்கிறார்கள்.

ஒரு நாளில் குறைந்தது ஐம்பது கிலோ மீட்டர்களுக்கு மேல் காட்டுப் பாதையில் பயணம் போய்க் கொண்டிருப்பவன் வீரப்பன். ஆனால் அவன் எங்கிருந்தாலும் மலை கிராமங்களுடனான தொடர்பு எப்போதும் நிச்சயம் இருக்கும் என்று திம்பம் செக் போஸ்ட் பகுதியில் பேசிக் கொள்கிறார்கள்.

தேவாரம் சமீபத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்தத் தொடர்பு மந்தப் பட்டிருப்பினும் சில நாட்களாக மீண்டும் மாடு மேய்ப்பவர்கள் மூலமும் தேன் அடிப்பவர்கள் மூலமும் தகவல் வட்டம் பலப்பட்டிருப்பதாக மலையடிவாரத்தில் சொல்கிறார்கள்.

மலைவாழ் சிறுவர்கள் மத்தியில் வீரப்பன் பற்றிய பேச்செடுத்தால் நமக்குக் கிடைக்கிற அனுபவம் வெகு விநோதம்.

"வீரப்பனா? யாருங்க?" என்று அப்பாவியாய்க் கேட்கிறார்கள். கொஞ்சம் நோண்டினால், "அதெல்லாம் பேசக் கூடாதுன்னு சொல்லிருக்காங்க!" என்கிறார்கள். இன்னும் துருவினால் "நீங்க போலீசா?" என்று மிரள்கிறார்கள். கொஞ்சம் அதட்டி விசாரித்தால் ஓடியே போய் விடுகிறார்கள்!

வீடுகளில் அத்தனை 'ஸ்ட்ரிக்ட் இன்ஸ்ட்ரக்ஷன்' என்று நம்மோடு வந்த கார் டிரைவர் சொன்னார்!

ஆசனூர் அம்மன் கோவிலுக்கு வீரப்பன் வருவான் என்று திம்பம் பகுதியில் கேள்விப்பட்டதை வைத்துக் கொண்டு அங்கே போனதில், "அதெல்லாம் இல்லீங்களே! பார்த்ததே இல்லீங்களே!" என்று பூசாரி அப்பாவியாய்ச் சொல்லி விட்டு, பின்புறம் திரும்பிச் சிரித்துக் கொள்கிறார். "தண்ணி சாப்பிடறீங்களா?" என்று நைஸாக ஜகா வாங்கி வீட்டுக்கு ஓடி, வேறொரு பையனிடம் நீர் கொடுத்து அனுப்புகிறார்!

— கிச்சா

அட்டை வண்ணப்படம், படங்கள் : **ராஜு"நாராயண்**

வீரப்பன் ஓவியம் : **அரஸ்**

ராஜா, ரகுமான் ஆதிக்கம் சரிகிறதா?



• மணி ஒளி



• லட்சுமி குமார்



• கணேஷ் ராமண்ணா

சினிமாவில் இன்று எக்கச்சக்க புது இசையமைப்பாளர்கள் வந்திருக்கிறார்கள்.

ரகுமானின் 'ரேட்' மற்றும் 'லேட்' தவிர, இளைய ராஜாவின் சமீபத்திய பாடல்கள் அவ்வளவாக ஹிட் ஆகாததும்தான் புதியவர்களுக்கு வாய்ப்புத் தந்திருக்கிறது என்று கோடம்பாக்கத்தில் குரல் கேட்கிறது. இதுகுறித்துச் சில புதியவர்களிடம் கேட்டோம் :

கே. எஸ். மணிஒளி

('வள்ளி வரப் போறா') :

நீங்கள் கூறும் காரணங்களை ஒட்டுமொத்தமாக ஏற்க முடியாது. உழைப்பும் திறமையும் யாரிடம் இருந்தாலும் வாய்ப்பு எப்படியும் வரும். தவிர, தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் இப்போது ஒரேவிதமாக அல்லாது மாறுபட்ட இசை வடிவங்களை விரும்புவதுதான் என்போன்ற புதியவர்கள் வரக் காரணம் என்று கருதுகிறேன்.

லட்சுமி குமார்

('உள்ளேன் ஐயா') :

ஒருத்தர் தாழ்வதனாலும் இன்னொருத்தர் உயர்வதனாலும் தான் புதியவர்களுக்கு வாய்ப்பு என்பதில்லை. யாராயிருந்தாலும் சரி, தனித்தன்மையோடு தம் திறமையை வெளிப்படுத்தினால் போதும். மக்கள் விரும்பும் இசையைத் தரமுடியுமானால் யாரும் முன்னுக்கு வந்துவிடலாம்.

கணேஷ் ராமண்ணா

('கிழக்குமலை') :

நீங்கள் சொல்லும் காரணம் ஓரளவு உண்மை; ஆனால் அதுமட்டுமே காரணமல்ல. ஒவ்வொரு கால கட்டத்திலும் மாற்றம் நடந்து கொண்டிருக்கிறது. புதுமை விரும்புகிறார்கள். எங்களாலும் அதைத் தரமுடிவதால் முன்னுக்கு வர முடிகிறது.

— துளசி

Kalki Shopping Page

ADYAR

STUDENTS XEROX

Quality that is close to perfection

XEROX
LASER PRINTING
WORD PROCESSING
DTP
ELECTRONIC & MANUAL TYPING
BINDING & LAMINATION

RANEE SAREES

OTHER SUNGUDI SAREES
BENGAL COTTON SAREES

BEST QUALITY


ATTRACTIVE DESIGNS
VARIOUS COLOURS

VISIT
MADURAI TEXTILES

2, SIVAPRAKASAM ROAD,
PONDY BASAAR,
MADRAS-17

(Nearer to Vegetable Market)

இல்லத்தரசிகளுக்கு 8in1 உபயோகம்



இணைப்புகள்:
1. வெட் கிரைண்டர் 2. சப்பாத்தி பூரி மாவு பிசைதல்
3. தேங்காய் துருவுதல் 4. பழரசம் பிழிதல்
5. காய்கறி வெட்டுதல் 6. சிப்ஸ் வெட்டுதல்
7. காய்கறி துருவுதல் (சிறியது)
8. காய்கறி துருவுதல் (பெரியது)

சிறப்பம்சங்கள்: மாவு டில்டிங் மற்றும் தானாகவே வெளியேறும் வசதி 100% Stainless Steel ஆல் ஆனது. Nylo Tuf gear transmission பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மோட்டார். குறைந்த இடத்தையே ஆக்கிரமிக்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட டபுள் பால் பேரிங்ஸ், அகன்ற பாகம் கொண்ட உருளைக் கற்கள் இயக்குவதும் பராமரிப்பதும் எளிது. விரைந்து செயலாற்ற வல்லது.
கொள்ளளவு: மாவு அரைத்தல் 2 ltr. சப்பாத்தி மாவு பிசைதல் 1kilo

Universal எதையும் செய்யக்கூடிய வித்தியாசமான கிட்சன் மெஷின்

Marketed by : SAN DOMESTIC APPLIANCES (P) LTD. 182, 100 Feet Road, Tatabad, Coimbatore - 641 012. ph : 446925. **DISTRIBUTORS FOR MADRAS** : ESSARR AGENCIES : 9, South West Boag Road, T. Nagar, Madras - 600 017. ph : 4347005; **COIMBATORE** : Video Spectrum, ph : 234453; VPR Video Vision, ph : 447877; **SALEM** : Ramco Agencies, ph : 447171, **MADURAI** : Anantha Stores, ph : 30281; Mercantile Agency, ph : 24469; **VELLORE** : Srinivasa Agency, Sri Lakshmi Agencies, ph : 20389; **ATHUR** : Lakshmi Electronics, ph : 40576; **PONDICHERRY** : Lakshmi Agencies, ph : 34736; **CUDDALORE** : Lakshmi Agencies, ph : 20853; **VILLUPURAM** : Lakshmi Agencies, ph : 3067, **TUTICORIN** : Sathya Agency Stores, ph : 24985; **KARAIKAL** : Lakshmi Enterprises, ph : 2597; **DELHI** : SRI RAMA STORES, ph : 652476; Madras Stores, ph : 5722798.

DEALER ENQUIRIES SOLICITED

Kalki Shopping Page



Let the twinkling stars be the only rival to the lustre of our pearls

முத்து ஆபரணங்கள், பவழம், அமெரிக்கன் டைமன்ட்ஸ், குந்தன் ஆபரணங்கள், துளசி செட்ஸ் (துளசி செட்ஸ் குந்தன் ஆபரணங்களுடன்) Hyderabad goldfoil beeds எல்லாம் ஹைதராபாத் விலைக்கே கிடைக்கும்.

Special offer for everybody for repairs even if you have purchased anywhere.

Narayana Pearls,


4, Basement, Kasi Arcade,
116, Thyagaraya Road, T. Nagar,
Madras - 600 017.
☎ : 8258714

WE INVEST SECURED BUSINESS OF YOUR DEPOSITS

ஸ்ரீ ராமபிரானுக்கு பாலம் அமைக்க சின்னஞ்சிறு அணிலும் மண் சுமந்தது. உங்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கு பாலம் அமைக்க நாங்களும் உதவமுடியும்.

நடராஜ்

90 நாள்



ஃபைனான்ஸ் அளிக்கும்

லாபகர திட்டம். (24% +) 4% பரிசுகளுடன்


■ விரும்பினால் மீண்டும் ரினிவல் செய்து கொள்ளலாம். ■ ஒவ்வொரு ரினிவலுக்கும் பரிசு உண்டு. ■ 36-மாத இரட்டிப்புத் திட்டம். ■ 3 சவரன் தங்கம் பெறும் 'GOLDEN OPPORTUNITY' — திட்டம். ■ 'நடராஜன்' என்ற பெயர் உள்ளவர்களுக்கான ஒரு கிராம் தங்கக்காசு திட்டம். ■ சீட்டு குரூப்பில் சேர்கிறவர்களுக்கு கடன் வசதி திட்டம். ■ மாதத் தவணையில் 'பண்ணைவீடு' சொந்தமாகும் திட்டம். ■ கி.பி. 2000-க்கான லாபகர திட்டம்.

மேலும் விபரங்களுக்கு : Phone 4342098, 4840150

NATARAJ FINANCE & INVESTMENTS
NATARAJ CHITS (TAMILNADU) Pvt. Ltd.,
NATARAJ ESTATES – FARM HOUSE PROMOTERS
"Shanthi Complex", 3rd Floor, 26, Ranganathan St.,
T. Nagar, Madras – 600 017.

NATARAJ OIL MILLS & NATARAJ EXPORTS OVERSEAS (Regd. Office)

adchoice


சட்டம் ஒழுங்கு சீர்கேடு
புலிகள் தப்பி ஓட்டம்
வீரப்பன் சாம்ராஜ்யம்
தமிழக அரசு
அமெரிக்கா வேலையைப் பார்னு சொல்லவும் முடியல... வேலையை விட்டு அனுப்பவும் முடியல.. பெரிய பேஜாரா போச்சு!
பிரதமர்
சமாதான
காயமடைந்த புலிகள்
சந்திரிகா
ஏய்
?
ரொம்ப நாளாச்சு! அடுத்த குறி இதுதான்
தடை செய்யப்பட்ட விஷ்வ இந்து பரிஷத்
காசி
அயோத்தி
மதுரா
மதத் தீவிரவாதம்



ஸ்ரீ

கல்கி



1995
மார்ச் 12
பவ
மாசி 28
மலர் : 53
இதழ் : 32

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

மேரி மாதாவும் அம்மன் தரிசனமும்!

தமிழகத்தில் உள்ள கிறிஸ்துவப் பெருமக்கள் ரொம்ப துரதிர்ஷ்டசாலிகள். ஜெயலலிதாவை மேரி அன்னையாகவே பாவித்து பிரார்த்தனை செலுத்தும் அரிய வாய்ப்புக்களை அவர்கள் இழக்கப் போகிறார்கள்! தமிழ்நாட்டு ஹிந்துக்கள் தாம் பாக்கியசாலிகள். அவர்கள் தொடர்ந்து ஜெயலலிதாவை கருமாரி அம்மனாகவும் ஆதிபராசக்தியாகவும் கண்குளிரக் கண்டு கன்னத்தில் போட்டுக் கொள்ளலாம்!

சென்னை ஆர்ச் பிஷப் புனிதர் அருள்தாஸ் ஜேம்ஸ், 'ஜெயலலிதாதான் மேரி அன்னை, மேரி அன்னை ஜெயலலிதாவே' என்று உணர்த்தும் போஸ்டர்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப் போக 'ஜெ'யும், 'அப்படியெல்லாம் இனி போஸ்டர் அச்சடித்து ஒட்டாதீர்கள்' என்று தமது பக்தகோடிகளுக்கு அறிவுரை வழங்கி விட்டார்.

ஆனால் ஹிந்து மதத் தலைவர்களாக எத்தனை மடாதிபதிகள் இங்கே இருக்கிறார்கள்? யாராவது ஒருவராவது ஆதிபராசக்தி ஜெயலலிதா போஸ்டருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களா? கடந்த இரண்டு ஆண்டுகளாகவே சிம்மவாஹினியாக விளங்கும் 'ஜெ'யின் மகிமை அவர்களுக்குத்தான் தெரிந்திருக்கிறது!

'ஹிந்து அறநிலையத்துறை சமாச்சாரமெல்லாம் தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குள்தானே இருக்கிறது; நமக்கேன் வம்பு' என்று இவர்கள் ஒதுங்குவதாக யாரும் எண்ணக் கூடாது! இவர்கள் மெய்யான ஹிந்து மதத் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்கள். அதன்படி சகலத்திலும் இறைவனைக் காண்பவர்கள், 'ஜெ'யின் திருவுருவ போஸ்டரில் ஆண்டவனைத் தரிசிக்க மாட்டார்களா என்ன? அவ்வாறிருக்க, சினிமா திரையில் பராசக்தி வேஷத்தில் வரும் அபிமான நட்சத்திரத்துக்கு சூடம் கொளுத்தும் நம் மக்களின் அறியாமையை நீக்க மடாதிபதிகள் முயற்சி மேற்கொள்வது மகாபாவமல்லவா!

சிறைச்சாலை லஞ்சம் பெருக்கும்!

சிறைச் சாலை என்ன செய்யும் என்று ஒரு பயல் பல்லின் மேல் நாக்கைப் போட்டு இனி கேட்டு விட முடியாது! 'சிறைச்சாலையில் லஞ்சம் கொழிக்கும்' என்று 'பட்'டென்று பதில் வரும்!

சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து ஒன்பது விடுதலைப் புலிகள் தப்பிச் சென்று, 'ஜெ' அரசுக்குப் புதிய பெருமை தேடித் தந்துள்ளனர். ஆட்டோ சங்கர் தப்பிச் சென்றதும் நியமிக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன் அறிக்கை, குளிருக்கு அடக்கமாக, தூசுப் போர்வைக்கு அடியில் கோட்டையிலே உறங்க, இப்போது புலிகள் தப்பியதற்கு இன்னொரு விசாரணைக் கமிஷன் போட்டு, கண் துடைப்பு நாடகத்தை 'ஜெ' அரசு வெற்றிகரமாக அரங்கேற்றி விட்டது.

'புலிகளுக்குச் சிறையிலே எப்படி துப்பாக்கிகள் கிடைத்தன; எவ்வாறு சயனைடு குப்பிகள் வந்து சேர்ந்தன; மதில் மீது பெட்ஷீட் கயிறுகளைப் பொருத்துகிற இரும்புக் கொக்கிகள் எங்கிருந்து தோன்றின; அவர்களின் சிறைக் கதவுகள் ஏன் பூட்டப்படாமல் இருந்தன?' என்றெல்லாம் துப்பறிய ஓர் உயர்நீதிமன்ற நீதிபதி தேவையில்லை. பச்சைக் குழந்தை கூறும் 'லஞ்ச ஊழல்தான் காரணம்' என்று.

அரசுப் பணியாளர்கள் அனைவருமே அச்சமின்றி லஞ்ச ஊழலில் ஈடுபடுகிற சூழ்நிலை இன்று நிலவுகிறது எனில் எதனால்? முதல்வரிடம் அமைச்சர்கள் லட்ச லட்சமாக அள்ளித் தரும் காட்சியைப் புகைப்படமெடுத்து, பெருமிதத்துடன் நாளிதழ்களில் போட்டுக் கொள்ளும் போது, எல்லோருக்குமே குளிர் விட்டுப் போவதில் வியப்பில்லை. 'அவன் வாங்க, இவன் வாங்க, நான் மட்டும் ஏன் ஏமாளியாக இருக்க வேண்டும்?' என்ற எண்ணம் பரவி விட்டது.

கோட்டைக்குள் முதல்வர் ராஜாஜியின் கார் நுழையும்போது, ஹாரன் ஒலித்ததுமே அவரவரும் தத்தம் இடத்தில் பயபக்தியுடன் மரியாதையாக எழுந்து நின்ற காலம் ஒன்று இருந்தது என்பது, ஒரு கனவு போல் தோன்றுகிறது இன்று!

கடிதம்

இன்று சனிக்கிழமை என்பது விஜயகுமார் குட்டி போட்ட பூனை மாதிரி அலைந்ததிலிருந்து புரிந்தது.

விஜயகுமார் இரண்டு மாதமாக எனது ரூம்மேட். தஞ்சாவூர் பக்கமிருந்து சென்னைக்கு என் கெமிக்கல் பேக்டரிக்குப் புதிதாக வேலைக்கு வந்திருந்தான்.

இனிய நண்பன்தான்... ஆனால் அவனுடைய சனிக்கிழமை மர்மம்தான் பெரும் ஆர்வத்தை உண்டு பண்ணியது.

சனிக்கிழமை இருவருக்குமே செகண்ட் ஷிப்ட்தான் என்றாலும், காலை சீக்கிரமே விழித்து விடுகிறான்.

நான் விழிக்கும் போது அவனுடைய இலக்கில்லாத அலைச்சல்தான் என் கண்களில் படும்.

வேலை இல்லாவிட்டால் ஏதாவது ஒரு வார இதழைப் புரட்டிக் கொண்டிருப்பவன், சனிக்கிழமையானால் இதழில் மனம் பதியாமல் சலிப்படைவான்.

இதற்கெல்லாம் காரணம் சனிக்கிழமை தோறும் வரும் அந்த கடிதம். போஸ்ட் மேனிடம் இருந்து கடிதத்தை வாங்கியவுடன் கட்டிலில் சாய்ந்து விடுவான். கடிதத்தைப் படிக்க, படிக்க அவன் முகம் மாறும். சில சமயம் வெட்கத்தால் செம்மை கொள்ளும். அவன் முகபாவங்களிலிருந்து அது காதல் கடிதமாக இருக்கலாம் என மட்டுமே என்னால் யூகிக்க முடிந்தது.

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் என் முகத்தை நிமிர்ந்து கூட பார்க்காமல் பதில் கடிதம் எழுத ஆரம்பித்து விடுவான். கடிதம் யாரிடமிருந்து வருகிறது என அவனாகச் சொல்வான் என்று எதிர்பார்த்தேன். ஏமாற்றமே மிஞ்சியது. நானாகக் கேட்பதற்கும் தயக்கமாய் இருந்தது. அவன் காதலிதானா? யார் அவள்? அவன் ஊரா? அல்லது பக்கத்து ஊரா? தெரிந்து கொள்ள மனம் வண்டாய்க் குடைந்தது.

சடாரென்று அந்த 'ஐடியா' தோன்றியது.

"விஜய்... தெருமுனை வரைக்கும் போய் தம்மடிச்சிட்டு வந்திடறேன்..." என்று புறப்பட்டேன்.

தெருமுனைக் கடையில் ஒரு சிகரெட் வாங்கிப் பற்ற வைத்தேன். போஸ்ட்மேன் வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தேன். தினம் ஒன்பது மணிக்கே வந்து விடுபவன் இன்று பார்த்து, சொல்லி வைத்த மாதிரி வராமல் சோதனை செய்தான்.

போஸ்ட்மேன் வரும்வரை சும்மா நின்றால் ஏதாவது நினைப்பார்களோ என்று மீண்டும் ஒரு சிகரெட் வாங்கிப் பற்ற வைத்தேன்.

தூரத்தில் போஸ்ட்மேன் வருவதைப் பார்த்தவுடன் இன்பமான படபடப்பு ஏற்பட்டது. என்னைக் கண்டவுடன் சைக்கிளை நிறுத்தினான்.

"என்ன பிரபு சார்... இங்க நிக்கறீங்க?"

"சும்மா ஸ்மோக் பண்ணலாம்னு வந்தேன்... ஏதாவது லெட்டர் இருக்கா?"

"உங்களுக்கு ஒன்னும் இல்லை... விஜய்சாருக்கு இருக்கு...."

"சரி கொடுங்க, கொடுத்திடறேன்..."

கடிதத்தை வாங்கும்போது விரல்கள் நடுங்கின.... ஃப்ரம் அட்ரஸ் எழுதாமல் வெறுமையாக இருந்தது. போஸ்ட்மேன் போனவுடன் இன்லண்ட் லெட்டரை விரித்து இடுக்கு வழியாகப் படித்தேன்.

பெண் கையெழுத்துதான்...

...கவிதை அருமையாக இருந்தது. இனி வாரம் ஒரு கவிதை எழுதுங்களேன்... சென்ற கடிதத்தில் உங்களது நண்பர் பிரபு பற்றி எழுதியிருந்தது ஆச்சரியம் தந்தது. இரண்டு மாதமாக உங்கள் ரூம்மேட் ஆக இருந்தும், நான் எழுதும் கடிதங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட கேட்கவில்லையா? இப்படிப்பட்ட நல்ல மனிதரிடம் நம் காதலைப் பற்றிக் கூறலாமா? என்று கேட்பானேன். தாராளமாய்ச் சொல்லலாம்.

நல்ல பெற்றோரையும், நல்ல மனைவியையும் கூட எளிதில் பெற்று விடலாம். ஆனால் ஒரு நல்ல நண்பனை அடைவது மிகவும் சிரமம். ஒவ்வொருவரும் மற்றவர்கள் அந்தரங்கத்தை அறியத் துடிக்கும் இந்தக் காலத்தில், நாகரிகம் மிகுந்த உங்கள் நண்பர் என் மனத்தில் உயர்ந்தோங்கித் தெரிகிறார்....

அதற்கு மேல் என்னால் படிக்க முடியவில்லை...



மாங்குடி ஜெய்சங்கர்

'டிஷ் இருக்கு; டீ.வி. எங்கே?'

டீ.வி. இலவசமாகக் கொடுத்தால் வேண்டாம் என்று சொல்வாங்களோ? சொன்னார்கள்! அப்படிச் சொன்னதால் எத்தனை சட்டச் சிக்கல், சங்கடங்கள்!

கேரள சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் அன்பளிப்பாக டீ.வி. வழங்குவது என்று அரசு முடிவு செய்து அதனைச் சட்டப் பேரவைத் தலைவர் தங்கச்சனே அறிவித்தார்.

எதையும் எதிர்க்கும் எதிர்க்கட்சிகள் சும்மா இருக்குமோ? "வீண் செலவு" என்று பல எம்.எல்.ஏக்கள் எதிர்த்தனர்! தங்களுக்கு வந்த டீ.விக்களைத் திருப்பி அனுப்பினர்.


''வேண்டாம்னா போயேன்'' என்று அரசாங்கம் அவற்றைத் திரும்பப் பெற்று, சமூக நலத்துறை மையங்களுக்கு இலவசமாக அனுப்பி வைத்தது.

இதைப் பார்த்துவிட்டுச் சில எம்.எல்.ஏக்கள், ''ஹைய்யா ஜாலி'' என்று தங்களுக்கு இலவசமாக வந்த டீ.வி. பெட்டிகளைத் தங்கள் தொகுதிகளில் உள்ள கலாசார மையங்களுக்குப் பரிசாக வழங்கி, நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டனர்.

ஆனால் இதையெல்லாம் நியமதுல்லா பார்த்துப் பற்களைக் கடித்துக் கொண்டிருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரியாது! ஆலுவாயிலுள்ள பெரியார் நல இயக்கத்தின் தலைவர் நியமதுல்லா பெரிய ஆளு! அவர் மக்களின் வரிப்பணம் வாரி இறைக்கப்படுவதாக நீதிமன்றத்தில் முறையிட்டார்.

நீதிமன்றத்துக்குப் பதில் கூற வேண்டிய நிலையில் கேரள அரசு ரொம்ப சாமர்த்தியமாக, ''டீ.வி. பெட்டிகள் எம்.எல். ஏக்களின் அறைகளில் நிறுவப்பட்டுள்ளன எனில், அவை சட்டமன்ற விடுதியின் சொத்துதான். தனி நபர்களுக்கான அன்பளிப்பு அல்ல'' என்று வாதாடியது. வழக்கு தள்ளுபடி!

நியமதுல்லாவா கொக்கா! அவர் நேரே சட்டமன்ற விடுதிக்குச் சென்று, எத்தனை எம்.எல்.ஏக்களின் அறைகளில் டீ.வி. உள்ளது என்று கணக்கு எடுத்தார்! 'ஓரிரு அறைகளில் தான் இருந்தன. ''டீ.வி. பெட்டிகள் காணாமல் போனதன் மர்மமென்ன? நீங்கள் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்கு உள்ளாவீர்கள்'' என்று சட்டசபைத் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு எச்சரிக்கை விடுத்தார்!



பயந்து போன சட்டமன்ற அலுவலகம், டீ.வி. பெட்டிகளைத் திரும்பவும் அவரவர் அறைகளிலேயே கொண்டுவந்து வைக்கும்படி எம்.எல்.ஏக்களுக்குக் கோரிக்கை விடுத்தது.

எம்.எல்.ஏக்கள் மட்டுமின்றி அரசாங்கமும் கூட நன்கொடையாக வழங்கிவிட்ட டீ.விக்களை எப்படித் திரும்பக் கேட்பது என்று புரியாமல் தவிக்கிறது!

இதற்கிடையில் சட்டமன்ற அலுவலகம், மொட்டை மாடியில் ஒரு டிஷ் ஆன்டன்னா வைத்துவிட்டால் ஸ்டார் டீ.வி.யும் ஜி டீ.வி.யும் பார்க்க ஆசைப்பட்டு டீ.விக்களை எம்.எல். ஏக்கள் திரும்பக் கொண்டுவந்து விடுவார்கள் என்று எண்ணி, திட்டத்தைச் செயல்படுத்தியது.

இப்போது எதிர்க்கட்சியினர் உள்பட எம்.எல்.ஏக்கள் எல்லோருமே, "டிஷ் இருக்கு; டீ.வி. எங்கே?" என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்!

கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை இதுதானோ?

திருவனந்தபுரத்திலிருந்து : **ந. சுந்தர்**

விஞ்ஞான யுகத்தை வெட்கிப் படுத்தாதே!

முட்டாள் சோதரனே!
எந்த நம்பிக்கையை
ஏற்றுவதற்காக - நீ
சொந்த உடல்
வெந்து சாகிறாய்?

மகாத்மாக்களையே நம்பிடாத
இம் மண்ணில் -
சில அற்பர்களுக்காக
அக்னிப் பிரவேசமா?

உன்னதச் சுதந்திரத்துக்காக
உயிர் விதைத்தவர்களே
மறக்கடிக்கப்படுகிற
இப் பூமியில் -

உன் தலைவனின்
வெறிக் கொள்கைக்கு
எரிகிற உன்னை
எந்த வரலாற்றில்
எழுதப் போகிறார்கள்?

ஆயிரம் தலைவர்கள்
உனக்குக் கிடைப்பார்கள்?
உன் குடும்பத்திற்கு?

எவனுடைய பெரும்புகழுக்கு
உன் முகவரியைச் சிதைக்கிறாய்?

நெருப்பாபிஷேகத்தில் நீ;
பட்டாபிஷேகத்தில் உன் தலைவன்.

நாற்காலிச் சுகத்தையே
நாடும் தலைவனின்
கொள்கைக்காக
நின்னைக் கொளுத்தாதே!

மானிடனின் மகத்துவத்தை
விஞ்ஞான யுகத்தில்
இருந்து கொண்டு
வெட்கப்படுத்தாதே!

— பாமணி



பூனைகள் ராஜ்ஜியம்

4

முகத்தை மூடியிருந்த கரங்களை ராஜ்கமல் வெகுநேரத்துக்கு நீக்கவே யில்லை. 'மந்திரி மாரிசாமி தன்னை இவ்வளவு சுலபமாக ஏமாற்றி விட்டாரே!' அவமானம் பிடுங்கித் தின்ன, உள்ளங்கைகளுக்குப் பின்னால் உதடுகள் அசைந்தன.

''ஆக, ஆணும் பெண்ணுமா அந்த ரெண்டுபேருமே இவரோட அடியாட்கள் தான். ஆனா அவங்க புலிகள்னு போலீஸ்ல ரிகார்ட் ஆகிற மாதிரி ஒரு நாடகமாடியிருக்காங்க. ஏன்?''

அதைத்தான் காந்திமதிகிட்டே கேட்டேன். பேசவே பயப்படறாங்க. 'ஸி.எம்.ஆசியோடதான் இவர் இந்த மாதிரி பெரிய திட்டம் போட்டிருப்பார். தானாகவே செயல்பட தைரியம் வராது'ன்றாங்க.''

''பெரிய திட்டம் மட்டுமில்லே நளின். பயங்கர திட்டம். புலிகள் மேல பழியைச் சுமத்தி இவங்க தப்பிக்க நினைக்கிறாங்கன்னா, அது ஏதாவது கொலைபாதகச் செயலாகத்தான் இருக்கணும்.''

அப்படித்தான் காந்திமதியும் நினைக்கிறாங்க. 'அவர் ஆபீஸ் அறையில் ஒண்ணும் கிடைக்காது. பி.ஏ.க்குக் கூடத் தெரியாமத்தான் காரியம் பண்ணிக்கிட்டிருப்பார். பெட்ரூம்ல ஏதாச்சும் தடயம் அகப்படுமா பார்க்கிறேன்'னாங்க.''

''ஏதோ பெரிய விபரீதம் நடக்கப் போறது தெரிஞ்சும் அதைத் தடுக்க வழி தெரியாம இருக்கிறது எவ்வளவு தவிப்பு!'' என்றான்.

''டி.ஜி.க்கு ஃபோன் பண்ணி சொல்லிடுங்க. உங்க பொறுப்பு தீர்ந்தது.''

''அப்படி கை கழுவிட என்னால் முடியாது நளின். ஸி.எம்.மே கூப்பிட்டு என்னை சஸ்பெண்ட் பண்ணுமாறு சொன்ன பிறகு என்ன ஆக்ஷன் எடுப்பாங்க? எப்படி தைரியம் வரும்?''

''அவங்களாலேயே முடியாதுங்கறப்ப நீங்க ஏன் பரபரக்கறீங்க?''

''இத்தனை காலமா யூனிஃபார்ம் அணிந்திருந்த பழக்கத்தாலதான். இப்ப அதைக் கழற்றி வைச்சுட்டாலும் கைலி கட்டின சாதா குடிமக்கன்கிற முறையிலயாவது ஏதாவது செய்யத் துடிக்கிறேன்.''

இரவு சரியான தூக்கமில்லை. அப்பப்போ உறக்கம் இழுத்துக் கொண்டு போனாலும் பயங்கர சொப்பனம் கண்டு திடுக்கிட்டு விழித்தான்.

காந்திமதி தானே காரை ஓட்டிக் கொண்டு புறப்பட்டபோது, கேட் அருகே பார்த்துக் கொண்டிருந்த செக்யூரிட்டி, 'நிறுத்துவதா வேண்டாமா' என்று யோசித்து கடைசியில் குறுக்கே நின்றான்.

'எங்கே போறீங்க?' என்று கேட்பது அபசகுனம்; அவள் சீறலாம். ''எதுக்குத் தனியா? டிரைவரை அனுப்பறேனே'' என்றான்.

''தேவையில்லை; ஷாப்பிங்தான் போறேன், விதானுக்கு.''

''எடுபிடி ஆட்கள் எட்டுப்பேர் இருக்காங்க..''

''நானே போய்த்தான் செலக்ட் பண்ணணும்.''

''மந்திரிக்குத் தெரியுமா?''

''மிஸ்டர்! டி.வி.ல சொல்ற மாதிரி இதெல்லாம் பொம்பளைங்க சமாசாரம். எல்லாத்துக்கும் அவர் பர்மிஷனைக் கேட்டுட்டிருக்க முடியாது, நகருங்க.''

தோள்களைக் குலுக்கிக் கொண்டான். ''நான் எச்சரிக்கலைன்னு என்பேரிலே தப்பு வரக்கூடாது பாருங்க.''

காபினுக்குத் திரும்பி ரிஜிஸ்தரைப் புரட்டினான். கடிகாரம் பார்த்து, ''11 a.m. காந்திமதி வெளியே போறிறார்- தனியே- எச்சரிக்கப்பட்டார்'' என்று குறித்தான்.

ஏதோ நினைத்துக் கொண்டவன் போல், முதல் நாள் பக்கத்தைப் புரட்டினான். ''3 p.m காந்திமதியைப் பார்க்க கல்லூரி சிநேகிதை.''

''மந்திரி விரும்பினா ஒண்ணும் ஒண்ணும் இரண்டுன்னு முடிவுக்கு வரட்டும். ரிஜிஸ்தரைக் கேட்டா கொடுத்துட்டுப் போறேன்'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.



நளினி இன்னொரு நாள் லீவு போட்டாள். ''ரொம்ப ஸாரி பாஸ். என் ஹப்பிக்கு பயங்கர ஜுரம். மலேரியாவா, டைஃபாய்டான்னு டெஸ்ட் பண்ணணும். நாளைக்கு

நிச்சயம் வந்துடறேன்."

"பார்த்துக்கிட்டு வாங்க" என்றார் பரிவுடன்.

நகம் கடிக்காமல் காத்திருந்தார்கள். ஒவ்வொருமுறை ஃபோன் ஒலித்த போதும் உடல்கள் முறுக்கேறி, உள்ளங்கள் டென்ஷனாயின. சாரமற்ற மூன்று ஃபோன்கால்களுக்குப் பிறகு, "நளினி இருக்காங்களா?"

தேகம் முழுதும் ஜிவ்வென்று சூடேற, "நான்தான், நான்தான்; ஆபீஸுக்கு லீவு போட்டுட்டு உங்க ஃபோனுக்காகத்தான் காத்திருக்கேன்."

"நீங்க கேட்டுக்கிட்ட மாதிரியே வெளியே வந்து பப்ளிக் பூத்லேருந்து பேசறேன். இதில் ஃபோன் டாப்பிங் இல்லாட்டாலும் வேற ஆபத்து இருக்கு. வழக்கத்துக்கு மாறா நான் தனியே வெளியே போறதை ஸெக்யூரிடிலே நோட் பண்ணியிருக்காங்க. மந்திரிக்கு ரிப்போர்ட் போச்சுன்னா என் கதி என்ன ஆகுமோ?"


• "ஸோ ஸாரி... விஷயம் ஏதாச்சும் தெரிய வந்துதா? தெரிஞ்சிருக்கும். அதனால்தானே ஃபோன் பண்றீங்க."

"ஆமா, இன்னிக்கு மக்கள் கட்சி பொதுக்குழு கூட்டம் நடக்குது. முதல்ல குளோஸ்ட் டோர் மீட்டிங்; அப்புறம் பிரஸ் கான்ஃபரன்ஸ்; கடைசியா பொதுக் கூட்டம். பொதுக் கூட்டத்துக்கு, முன் வரிசைகள் சிலவற்றை ரிஸர்வ் பண்ணி, இன்விடேஷன் அனுப்பியிருக்காங்க. அதுல ஐந்தாறு இன்விடேஷன்கள், இவரோட பெட்ரூம்ல டிரெஸ்ஸிங் டேபிள் டிராயரில் இடைச்சுது. எல்லாமே 'I'ரோ."

"ஞாபகம் வருது. பேப்பர்ல பார்த்தேன். புவனேசுவரி கல்யாண மண்டபத்திலதானே? 'I'ரோ இல்லியா? தாங்க்ஸ்!"

"முழு விவரமும் கேட்டுக்க. அதே டிராயர்ல ஒரு இங்க் பேடும், ரெண்டு ரப்பர் ஸ்டாம்பும் இருந்துச்சு. ஒண்ணுல 'V'என்ற

கி. ராஜேந்திரன்



எழுத்து இன்னொன்னுல 'P'என்ற எழுத்து. ரெண்டு ரப்பர் ஸ்டாம்ப் தயாரிச்சதுக்கு இருபத்தி நாலு ரூபா பில். பாக்கிய நீயே யூகிச்சுக்கலாம். வைக்கட்டுமா? சீக்கிரமா ஷாப்பிங் முடிச்சுக்கிட்டு நான் திரும்பணும். ஞாபகமா ரெண்டு பிரா, ஒரு பாக் ஸானிடரி நாப்கின்ஸ் வாங்கிட்டுப் போகணும். பை!"

யோசனையுடன் ரிஸீவரை இறக்கி, ஏராள கேள்விக்குறி தேக்கி நின்ற கணவனுக்கு விளக்கினாள்: "எதிர்க்கட்சிக் கூட்டத்துக்கான இன்விடேஷன்கள் சிலவற்றை சம்பாதிச்சு, I வரிசையை VIPவரிசையா ரெண்டு அழைப்பிதழ்கள்ல மாற்றி, அடியாளுங்க கிட்ட கொடுத்து அனுப்பறாரு."

"முன் வரிசைல அவங்க கலபமா புகுந்து மக்கள் கட்சித் தலைவரைத் தீர்த்துக் கட்டப் போறாங்க!" பரபரப்பாக நாளிதழ் புரட்டி நேரங்கள் பார்த்துக் கொண்டான். 'மாலை 4.30-பத்திரிகையாளர் சந்திப்பு. 5.30-பொதுக்கூட்டம்."

நாலு மணிக்கு முன்பே யூனிஃபார்ம் அணிந்து நளினிக்குத் தைரியம் சொல்லி விட்டு புல்லெட்டை நெருங்கும்போது கறுப்புப் பூனை குறுக்கே போனது. "சை! நம்பிக்கை இல்லாதவனுக்குக் கூட சகுன நம்பிக்கை வந்துடும்" என்று எண்ணினான். "சிங்கம், புலி, சிறுத்தை எல்லாமே பூனைக் குடும்பம்தான்" என்று பள்ளிக் கூடத்தில் படித்தது நினைவு வந்தது. "விலங்கினங்கள் தேவலாம்; நம்மோட பூனைகள் ராஜ்யத்துல புலி எது, பூனை எதுன்னே புரியலே" என்று உள்ளூரச் சிரித்துக் கொண்டு புறப்பட்டு, பன்னிரண்டு நிமிஷங்களில் புவனேசுவரி மண்டபத்தில் இருந்தான்.

நளினியின் ஆட்சேபணைகள் அவனிடம் செல்லுபடியாக வில்லை. " என்னை சஸ் பெண்ட் செய்திருப்பது இன்னும் யாருக்கும் தெரியாது. நான் பத்திரிகைக் காரங்களுக்கு, பதில் ஸ்டேட்மெண்ட் எதுவும் தரு வேன்கிறதால அடக்கி வாசிக்கிறாங்க. நான் ஸ்பாட்ல இருந்தா டிபார்ட் மெண்ட் ஆளுங்க உள்பட யாரும் சந்தேகிக் கப் போற தில்லே..."

அவன் கணக்கு தப்பாயிற்று. அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இருவரும் மண்படத்துக்குள் நுழைந்த அதே நேரத்தில் டெபுடி கமிஷ்னர் அலுவலகத்தில் அவனுடன் பணியாற்றிய சகா, "மிஸ்டர்! வாட் ஆர் யூ டூயிங் ஹியர்!" என்றான்.

"டியூடில இருக்கேன்."

"ஐ ஆம் இன்சார்ஜ் ஹியர், யூ கிளியர் அவுட்."

அந்த இருவரும் வி.ஐ.பி. வரிசைக்குள் புகுந்தது கடைக்கண் பார்வையில் தெரிந்தது.

"உன் டியூடிய நீ-பாரு. என் கடமையை நான் செய்யறேன்" என்று மேடை நோக்கி நகர்ந்தான்.

அவனை முந்திக் கொண்டு, "உனக்கு இந்த யூனிஃபார்ம் போடவே உரிமை இல்லே; எந்த அடிப்படையிலே நீ டியூட்டி பார்க்கறே?"

மக்கள் கட்சி தலைவர் மேடை ஏறி, கை கூப்பி தலைக்கு மேல் உயர்த்திட, கரகோஷம் செவி பிளந்தது.

"இந்த நாட்டின் ஒரு நேர்மையான குடிமகன்கிற முறையிலே." ராஜ்கமல் வேறு வழியின்றி சகாவை ஒதுக்கி விட்டு விரைந்தான்.

"வாழ்க" கோஷங்களுடன் ஆளும் கட்சித் தலைவரும் அவர் ஆட்சியும் ஒழியவும் கோஷங்கள் எழ, எல்லோரும் உணர்ச்சி வசப்பட, ஒதுக்கப்பட்டவன் கோபம் கொண்டு, ராஜ்கமல் நெஞ்சில் கரம் பதித்துத் தடுத்து நிறுத்தி, "ஐ ஸே கெட் அவுட்!"

விண்ட் சீட்டர் ஜாக்கெட்டின் ஜிப் இறக்கி அடியாட்களின் இரு வலக்கரங்கள் உள்ளே நுழைய,

ராஜ்கமல் தன் சகாவை முரட்டுத் தனமாகத் தள்ளித் தடாலென விழச் செய்து விட்டுப் பாய்ந்தான். கூடவே இடை ரிவால்வர் கரத்துக்கு இடம்மாறி இயங்க, "டுமீல்! டுமீல்!"

இருவரும் தொடையில் அடிபட்டுச் சரிய, கூட்டத்தில் ஒரே களேபரம்... பயத்திலே எழுந்த வீல்... நாற்காலிகள் கவிழும் படார்... வியப்பிலே எழுந்த ஆ... பீதியிலே ஐயோ... தடதடவென்று மக்கள் வாசலை நோக்கித் தப்பி ஓட, அந்தக் கும்பலில் மிதிபட்டு நசுங்கிய சகா... மேலதிகாரியின் உத்தரவு இல்லாததால் செயலற்று நின்ற போலீஸ்...


வேதனையில் துடித்த இருவரிடமிருந்தும் துப்பாக்கிகளைப் பறிப்பது ராஜ்கமலுக்கு எளிதாக இருந்தது.

தலைவர் நன்றியோடு பார்த்துக் கை கூப்பியபோது அவர் கரங்கள் அவரையும் மீறி நடுங்கத்தான் செய்தன.

"மக்கள் கட்சித் தலைவரைக் கொலை செய்ய முயற்சி: விடுதலைப் புலிகள் பிடி பட்டனர்!"

காலை நாளிதழில் தலைப்புச் செய்தி பார்த்து, "அக்கிரமம்" என்றான் ராஜ்கமல்.

"அநியாயத்துக்குத் துணைபோகத்தானே அதிராம பட்டினத்திலிருந்து ஆரம்பித்து அமைச்சர் வீடுவரை சாட்சியங்களை உருவாக்கினாங்க" என்றாள் நளினி, காப்பி கோப்பையை எதிரே வைத்து.



கலைந்த தலையும் நெகிழ்ந்த நைட்டியு மாக இருந்த அவளை கண்களாலேயே கடித்துத் தின்றான். விரல்கள் விளையாட ஆரம்பிக்குமுன் டெபுடி கமிஷனர் ஃபோன் செய்தார். "உன் ஸஸ்பென்ஷன் உத்தரவை வாபஸ் வாங்கியாச்சு; டியூடில சேரு.!"

"யெஸ்ஸார்" என்றான். "ராஜினாமா செய்யற உத்தேசமில்லே. உள்ளிருந்தபடியே தர்ம நியாயத்துக்குப் போராடுவேன்."

"பிபிப்பிபீ! அறப்போர்!" என்று முழங்கி கிண்டலடித்தார். "தமிழ்நாடு என்ன, இந்தியா என்ன? உலகத்தையே திருத்திப் பிடுவே!"

"எனக்கு நம்பிக்கை இருக்கு ஸார்."

"நம்பு நம்பு! ரெண்டு பேரும் ஒரு நாள் கூட ஜெயிலுக்குப் போகப் போறதில்லே. ஆஸ்பத்திரியிலே இருக்காங்க. பெய்ல்ல வருவாங்க. பிராஸிகியூஷன், கேஸ் நடத்தாம ஆறப்போடும்."

"தெரியும்; தப்பித்தவறி ஜெயிலுக்குப் போனாலும் 'எஸ்கேப்' ஆயிருவாங்க."

"ஏராளமா பணம் பண்ணிட்டாங்க. உனக்கு மட்டும் நம்பிக்கை தளராது.!"

ஒரு மாதம் சென்று ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் போலீஸ் தடகள விளையாட்டுக்கள் நடந்து முடிந்து. பிற்பகலில் வீரதீர பராக்கிரமங்களுக்காக எட்டு பேருக்கு மெடல் குத்தினார் ஸி.எம். கான்ஸ்டபிள் முதல் எஸ்.பி.வரை பலரும் இடம் பெற்ற அந்தப் பட்டியலில் கடைசி: ராஜ்கமல்.

"நீதான் ராஜ்கமலா?" என்றார் ஸி.எம். அழுத்தமாக. மெடல் குத்தும்போதே அவர் பற்களை நறநறவென்று கடிப்பது ராஜ் கமலுக்குக் கேட்டது.

"ஆமாம் நான்தான்" என்றான் கம்பீர மாக.

அன்று மாலைப் பத்திரிகையில் முதல் பக்கத்திலேயே "வீர சாகசத்துக்கு விருது" என்ற தலைப்பின் கீழ் ராஜ்கமலுக்கு ஸி.எம். மெடல் குத்துகிற படம் பிரகரமாகியிருந்தது.

அதற்கு அடியிலே மனைவியைப் பறி கொடுத்த மந்திரி மாரிசாமி கண்கலங்கி நிற்க, காந்திமதி உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார், முதல்வர்!

'சமையலறை கூாஸ் விபத்தில் கருகி இறந்து போன'. காந்திமதியின் முகம் மட்டும் என்றுமில்லாத சோபையுடன் படத்தில் ஒளிர்வது போல் ராஜ்கமலின் நீர்த்திரை யிட்ட கண்களுக்குத் தோன்றியது.

"அது தியாகத்தின் அழகுங்க" என்று சொல்லிவிட்டு, கணவன் மார்பில் முகம் புதைத்து விம்மி விம்மி அழுதாள் நளினி.

(கதை முடிந்தது; கதை மட்டும்!)

அன்னப் பறவை

ஓர் அழகிய கவிதை முடிவுறுவது போல் அவள் மரணம் நிகழ்ந்தது.

பூர்ண சந்திரன் தேய்பிறைப் பருவமின்றி, முழுசாய் அப்படியே மறைந்தது போல், முன்தின இரவு தோழிகளுக்காக முகத்தில் மலர்ந்த புன்னகை மாறாமல், அவள் மரணம் நிகழ்ந்தது.

'வாழ்க்கையில் அழுவதற்கு நேரமில்லை. புகார் சொல்லிப் புலம்பிக் கொண்டிருக்க நேரமில்லை. மனசில் குப்பை சேர்த்துக் கொண்டே போனால், அதைப் பெருக்கிச் சுத்தம் செய்ய நேரமில்லை' என்று சொன்ன தற்கேற்ப வாழ்ந்த குப்பையற்ற வாழ்க்கை. அந்த நிர்மலமான முகத்தில் பிரதிபலித்தது. அதனால்தானோ என்னவோ ஐம்பத்திரண்டு வயதிலும் நரை சுருக்கமின்றி இளமை பொலிய ஒரு தேவதை மரணமுற்றது போல் அவள் மரணம் நிகழ்ந்தது.

கல்லூரியின் சக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், என் போன்ற மாணவ மாணவிகள் மேடத்தின் வீட்டில் கூடியிருந்தோம். கல்லூரி முதல்வர் கூட ஒரு ரோஜா மாலையைக் காலடியில் வைத்து கணநேரம் மௌனமாய்த் தலைகுனிந்து நின்று விட்டுப் போனார். தமிழ்த்துறைப் பேராசிரியை குழலி மேடம் என்றால் எல்லாருக்கும் அத்தனை மரியாதை. எனக்கும்தான். அதாவது, இப்போது. நான்கு மாதம் முன்பு வரையில் கூட இல்லை.

நான்கு மாதம் முன்பு...

என்னுடன் படிக்கும் மாணவியோடு நெருக்கமாக இருந்த நேரம், கல்லூரி காண்டீன் பின்புறம் மூலையின் புளியமர ஒதுக்கத்தில் அநாவசியமாகக் குழலி மேடத்தின் பார்வை குறுக்கிட்டது. காதைப் பிடித்து எழுப்பி நிறுத்தாத குறைதான். மாணவப் பருவத்தின் ஒழுக்கத் தேவையைப் பற்றி ஒரு குட்டி லெக்சரே அடித்து விட்டார்.

கடைசியில் பொறுமையிழந்து என் கூட்டாளி ஏளனமாய்ச் சொன்னான் :

"கிளாஸில் எங்களுக்குத் தமிழ் இலக்கியம் சொல்லிக் கொடுக்கறீங்களே! அப்போ இலக்கிய மரபுப்படி களவியல் காதல் பண்றவங்க மேல ஏன் கோபம் வருது மேடம்? உங்க மகன் இப்படிப் பண்ணினால் கூட கோபம் வருமா?"

"ஒழுக்கம்னா இளக்காரமாயிருக்காம்மா உனக்கு?" என்றார் மேடம்.

"புருஷனை விவாகரத்து பண்ணவங்களெல்லாம் எங்களுக்கு ஒழுக்கம் பத்தி உபதேசம் செய்ய வேணாம்" - இது நான்.

மேடம் முகத்தில் மாற்றமே இல்லை. அந்த அமைதி மனசைப் பளாரென்று அறைவது போல் இருந்தது. சொன்னார் :

"கல்யாணம் செய்துக்கிற எந்தப் பெண்ணும் விவாகரத்தை நினைச்சுக்கிட்டுச் செய்துக்கறதில்லேப்பா! ஆயுசுக்கும் புருஷன் கூட அழகா குடித்தனம் நடத்தணும்கிற எதிர்பார்ப்போடதான் செய்துக்கறா. விட்டுக் கொடுத்து வாழத்தான் நினைக்கறா. அப்படியும் கடைசியில் விவாகரத்து வரைக்கும் போகணும்னா அவள் என்னவெல்லாம் மனவேதனைப்பட்டிருக்கணும்? விட்டுக் கொடுக்கறதை அன்புக்காகச் செய்யலாம். தீமைக்கு விட்டுக் கொடுக்கலாமா? விவாகரத்து செய்த பெண் ஒழுக்கங் கெட்டவளாய் இருப்பாள்னு உங்களைப் போன்ற இளையவர்கள் கூட நினைக்கறது ரொம்ப வருத்தமாயிருக்கு. கட்டின புருஷனும் உயிருக்குயிராய் நினைச்ச சிநேகிதியும் சேர்ந்து தனக்கு துரோகம் செய்யறது தெரியும் போது, அந்தத் திருமணத்திலேர்ந்து வெளியே வருகிற பெண் ஒழுக்கம்



கெட்டவளில்லை. ஒழுக்கத்துக்கு ரொம்ப உயர்வான மதிப்புக் கொடுக்கிறவள்."

சூரிய வெளிச்சம் மேலே விழுந்ததாலோ என்னவோ, சூழலி மேடம் அந்தக்கணம் பொன் போல் தகதகவென்று ஒளிர்ந்தாள். பேச்சு ஏதோ ஒரு சத்திய ஆழத்திலிருந்து வருவது போல் கணீரென்று ஒலித்தது. முகமும் தோற்றமும் காட்டிய கம்பீரத்தில் அவர் அடைந்திருந்த கசந்த அனுபவத்தின் நிழல் கூடத் தெரியவில்லை.

எங்கள் குனிந்த தலைகள் நிமிர முடிந்த போது சொன்னேன் :

"ஸாரி மேடம். எங்களுக்குத் தெரியாது... நீங்க எப்படி இன்னும் இத்தனை அமைதியாய், இத்தனை இயல்பாய் எல்லோரோடும் நட்போடு பழகிக்கிட்டு..."

மேடம் முகத்தில் புன்னகை எழுந்தது. "அந்தத் திருமணம் முடிஞ்சு போன அடுத்த கணமே அதை என் மனசிலேர்ந்து ஒதுக்கிட்டேன். கசந்த நினைவுகள் குப்பை மாதிரி. அதையெல்லாம் ஏன் மனசில் போட்டு அடைச்சுக்கணும்? வாழ்க்கையில் நல்ல விஷயங்கள் எத்தனையோ இல்லையா? அதையெல்லாம் இறுக்கமாய் நினைவில் முடி போட்டு வச்சுக்கலாமே! அப்போ மனசு பூந் தோட்டமாய் இருக்கும், குப்பைத் தொட்டியாய் இருக்காது."

அம்மா இறந்து கிடக்கிறாள். என் அம்மா. இனி வர மாட்டாள்.

பட்டுப் புடைவையும் பூமாலையுமாய் அம்மா படுத்திருக்கிறாள். நான் ஈர வேட்டியுடன் பிரமை கொண்டு நிற்கிறேன்.





இவர் தொடர்ந்த வழக்கு!

'ருடாலி' படத்தில் முக்கிய கதாபாத்திரமொன்றில் நடித்திருக்கிறார் ராக்கி. இவர் பம்பாய் ஹைகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார் : படத்தில் டிம்பிள் நடித்த கதாபாத்திரம் போலவே தன்னுடையதும் முக்கியமான கதாபாத்திரம் என்றும், ஆனால் இயக்குனர் தான் நடித்த பகுதிகளை மூன்றில் ஒரு பங்காக வெட்டிச் சிதைத்து, தன் கதாபாத்திரத்தையே உருத் தெரியாமல் செய்து, டிம்பிளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்துத் தனக்கு அநியாயம் செய்துவிட்டார் என்றும், எனவே அப்படத்தைத் தடை செய்ய வேண்டும் என்றும் வழக்கு.

ஆனால், பம்பாய் உயர் நீதிமன்றம் ராக்கியின் வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. 'படம் வெளியாவதற்கு முன்பே அவர் முறையிட்டிருக்க வேண்டும். இதுவரை ஏன் சும்மா இருந்தார்?' எனக் கேட்டு வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது!

ஆதாரம் : சண்டே
தகவல் : ஆலன்

என் அம்மா இனி வர மாட்டாள்.

நேற்றிரவு "செல்வம் கண்ணா, தூக்கம் வருது. படுத்துத் தூங்கப் போறேன். நீ படிச்சு முடிச்சப்புறம் ஞாபகமா பாலைக் குடிச்சிட்டுப் படுத்துக்க, என்ன?" என்று என் சுருட்டை முடியைக் கோதி, முதுகைத் தட்டிக் கொடுத்து விட்டு, வழக்கம் போல் படுக்கப் போனாள். சற்று சீக்கிரமே படுக்கப் போனதுதான் வித்தியாசம். சாதாரணமாய் நள்ளிரவு வரை கூட ஏதாவது தமிழ் அல்லது ஆங்கில இலக்கிய நூல் படித்துக் கொண்டிருப்பவள் நேற்றிரவு ஒன்பது மணிக்கே படுத்து விட்டாள். மாலையில் சில சிநேகிதிகள் வந்திருந்தார்கள். அவர்களை வரவேற்ற களைப்பாயிருக்குமென்று நினைத்தேன். வேறேதாவது அசௌகரியம் உடம்பில் தோன்றியதா? நோய் என்று படுத்தவளே இல்லை. அழவைக்கும் நோய்களெல்லாம் கிட்டே வருமுன்பே அவள் சிரிப்பைக் கண்டு சிரித்துக் கொண்டே விலகிவிடும். இப்போதும் அம்மாவின் முகத்தில் சிரிப்பு மாறவில்லை. ஆனால் இரவு படுத்தவள் காலையில் கண்விழிக்கவில்லை.

மாரடைப்பு என்று டாக்டர் மரணச் சான்றிதழ் எழுதினார். இன்னதென்று புரியாத போது வேறென்ன சொல்ல முடியும்?

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் உடனிருந்தவள் என் அம்மா. நான் குழந்தையாய் இருந்த போது, என் வலது கன்னத்தின் சிறு குழியை மெத்தென்று வருடிய விரல் அம்மாவுடையது. நேற்று வரை 'செல்வம் கண்ணா' என்று கனிவு ததும்ப அழைத்த குரல் அம்மாவுடையது. அன்பு என்ற தத்துவத்தை அவள் நிழலில் நான் அறிந்து கொண்டேன். அம்மா என் உலகம்.

பள்ளி ரிகார்டில் என் தகப்பனார் பெயர் அருணாசலம் என்று கொடுக்கப்பட்டிருந்தது. விவரம் தெரிந்த பருவத்தில் "அப்பா எங்கே?" என்று நான் கேட்ட போது, 'மதுரையில் இருக்கிறார்' என்றாள். சொந்தமாய் எலெக்ட்ரானிக் பொருட்கள் வியாபாரம் நடத்துகிறார் என்றாள். நான் இன்னும் வளர்ந்தபின், தங்களுக்கு விவாகரத்து ஆகிவிட்ட தகவலைச் சொன்னாள். அதற்கான காரணத்தைச் சொன்னாள்.

அந்த மனிதனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை கூட எனக்கு ஏற்படவில்லை. வண்டார்குழலி என்ற உன்னதமான உயிருக்குத் துரோகம் இழைக்கக்கூடியவன் என் அன்புக்கும் அக்கறைக்கும் பாத்திரமானவனல்ல.

அம்மாவே என் அப்பா, என் ஆசான். அழுக்குகளுக்கு மேலே மனசைத் தூக்கி நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற மகாமந்திரத்தைக் கற்பித்த ஆசான். இன்று இருபத்து மூன்று வயதில் காமர்ஸ் பட்டம் முடித்து விட்டு, ஒரு நல்ல கம்பெனியில் சி.ஏ. பயிற்சியின் இறுதிக் கட்டங்களில் இருக்கிறேனென்றால் எல்லாம் அம்மா தந்த ஊக்குவிப்பு. நாங்கள் நண்பர்கள். அம்மா 'பழந்தமிழ் இலக்கியத்தில் அழகியல் கூறுகள்' என்ற பொருளில் பிஎச்.டி. செய்த போது, அவள் ஆராய்ச்சிக் குறிப்புகளை நான் பல சமயம் தட்டெழுதிக் கொடுத்திருக்கிறேன். கண்ணைக்

கவித்துக் கொண்டு பாடுபடாதே என்று சொல்ல மாட்டாள். கண்ணைக் கவித்துக் கொண்டு பாடுபடுவதில் வெளிப்படும் என் அன்பைப் புரிந்து கொண்டு, அதற்கு மதிப்பளிக்கும் விதமாய் என் தோளை அணைத்துத் தட்டிக் கொடுப்பாள். ஆனால் நான் ஜுரம் என்று படுத்து விட்டால் அந்த சிநேகிதி முழுவதும் தாயாக மாறி, அல்லும் பகலும் என் பக்கம் விட்டு அகலாமல் கவலையுடன் கவனித்துக் கொள்வாள்.

அந்த அன்பு, தோழமை அனைத்தையும் கண்களுக்குள் வைத்து மூடி, எடுத்துக் கொண்டு எங்கே போய் விட்டாள் என் அம்மா?

என் நெற்றியில் சரிந்த தலைமுடியை அநிச்சையாய்ப் பின்னே தள்ளி விட்டுக் கொண்டேன்.

என் கண்களை யாரோ துடைத்து விட்ட போதுதான், நான் அழுது கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

அவள் காலமான செய்திக் குறிப்பை நாளிதழில் படித்தவுடன் அந்தச் சடலத்தை யாவது ஒருமுறை பார்க்க வேண்டும் என்று ஏன் மனசு அடித்துக் கொண்டது? தொழில் சம்பந்தமாய்ச் சென்னையில் ஒருவரை அவசரமாய்ப் பார்க்க வேண்டுமென்று ரஞ்சனியிடம் பொய் சொல்லி விட்டு, ஏன் மதுரையிலிருந்து பறந்து வந்திருக்கிறேன்?

டாக்டர் எம். ஆர். வண்டார்குழலி. சென்னைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியை. அவளேதான். முன்பு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணி செய்தவள்தானே? மேலே மேலே முன்னுக்கு வந்து, டாக்டர் பட்டம் வரை எட்டக்கூடிய அநாயாச அறிவு படைத்தவள்தான். என் மனைவியை எனக்குத் தெரியாதா?

மனைவியல்ல. என்னிடமிருந்து மணவிலக்குப் பெற்று விட்டவள். அந்த இனிஷியல்களில் ஏ ஃபார் அருணாசலம் கிடையாது. அவள் மதுரை ராமநாதன் வண்டார்குழலி. ராமநாதனின் மகள். யாருடைய மனைவியும் இல்லை.

அவளை ஏமாற்றிய போது, சுகமாய் இருந்ததா? அவள் ஆருயிர்த் தோழி மீனாவை வசமாக்கிக் கொண்ட போது வெற்றியுணர்வு தோன்றியதா? எத்தனை பெண்கள் வசப்படுகிறார்கள் என்பதை வைத்துத்தான் ஓர் ஆண் தன் வெற்றியைக் கணக்கிடுகிறானா? குழலி அதைப் பொறுத்துக் கொள்ள மறுத்தாள். குப்பையைப் பெருக்கித் தள்ளுவது போல் என்னை விவாகரத்து செய்தாள்.

அதன்பின் நாளடைவில் எனக்கு ரஞ்சனியின் நட்புக் கிடைத்தது. அவள் ஐந்து நட்சத்திர சங்கிலித் தொடர் ஓட்டல்களின் சொந்

தக்காரருக்கு ஒரே வாரிசு. இதை விளையாட்டாய் முடிந்து போக விடக் கூடாது என்று தீர்மானித்தேன். அவளை நான் மணந்து கொள்ளப் போவதை அறிந்த போது மீனா வெகுண்டாள்.

"குழலியை ஏமாத்தினீங்க. இப்ப என்னையுமா?"

"உன்னைக் கல்யாணம் செய்துக்கறேன்னு நான் எப்பவானும் சொன்னேனா?"

"இன்னும் ஆறு மாசத்தில் எனக்கொரு குழந்தை பிறந்தால் அதுக்கு அப்பா யார்?"

"இதை நீ என்னோடு பழகறதுக்கு முந்தி யோசிச்சிருக்கணும்."

அவள் சிறிது நேரம் என்னை உற்றுப் பார்த்தாள்.

"நட்புக்கு துரோகம் செஞ்ச எனக்கு இது நல்லா வேண்டியதுதான்."

ஆனால் ஆண்டுகள் ஓட ஓட, வயது ஏற ஏற, உள்ளே ஏதோ ஒன்று உயிர் பெற்று எழுந்து உட்கார்ந்து, 'நான்தாண்டா உன் மனச்சாட்சி' என்று கொத்த ஆரம்பித்தது.

அதனால்தான் இன்று இங்கே பறந்து வந்திருக்கிறேனா? என்னை ஒரு புழுவாய் நோக்கிய பார்வை, இப்போது மூடிக் கிடக்கும் என்ற தைரியத்தில் வந்திருக்கிறேனா? உயிரற்ற சடலத்தைப் பார்ப்பதில் என்ன சாதிக்க முடியும் என்று எண்ணி வந்திருக்கிறேன்? மன்னிப்புக் கேட்கவா? அதற்கு இனி என்ன அர்த்தம்? மன்னிப்புக் கேட்பதென்றால் மீனாவிடமும் கேட்டிருக்க வேண்டாமா? இருபத்தோராண்டுகள் முன் மீனா மூளை கான்ஸர் வந்து இறந்த போது, அவள் உடலைப் பார்க்கக் கூட நான் போகவில்லை. அதை நினைத்து இன்றும் துடிக்கிறேன். அடேயப்பா, இருபத்தோராண்டுகளில்தான் மனச்சாட்சிக்கு எத்தனை வளர்ச்சி!

பிற்பகல் வெயில் தீவிரமாய்த் தகித்தது. குழலியின் வீட்டு வெளி வராந்தாவில் தயங்கி நின்றிருந்தேன். பறைகொட்டும் ஓசை உரத்து வந்தது. பூப்பல்லக்கு தயாராய் இருந்தது. விரைவில் உடலைத் தூக்கி விடுவார்கள். நல்ல கூட்டம். எவ்வளவு 'பாப்புலர்' அவள்! கலகலவென்று பழகி நண்பர்களை ஈர்க்கும் இனிய சுபாவம்.

உள்ளே போய்ச் சடலத்தைப் பார்க்கலாமா? 'நீ யார்?' என்று யாராவது கேட்டால்? ஆனால் இழவுக் கூட்டத்தில் அறிமுகமா கேட்கப் போகிறார்கள்?

உள்ளே சென்றேன். அவள் தரையில் நீட்டிக் கிடந்தாள். மூப்புத் தோன்றியிராத ஐம்பத்திரண்டு வயது யுவதி. மாலையும் கழுத்துமாக, நான் அவளை மணந்த தினம் போல...

எண்ணங்களும் நினைவுகளும் ஒருங்கே கழுத்தை நெரிக்கும் மூச்சுத் திணறலோடு மனம் கனக்க நின்றபோது -

"நீங்க யாரு?"

உதறிக் கொண்டு விழிப்புற்றேன். எதிரே ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி.

"நான்... நான் அவங்க ஊர்க்காரன். தற்செயலாய் விஷயத்தைக் கேட்டு வந்தேன்... அவங்களுக்கு என்ன உடம்பு?"

"உடம்புக்கு ஒண்ணுமில்லை. நேரம் வந்திடிச்சு. வேறென்ன சொல்றது?"

அந்தம்மாள் கண்கள் கலங்கியிருந்தன. சக ஆசிரியையாய் இருக்கலாம்.

"இப்போ... யார் கொள்ளி வைக்கப் போறாங்க?" நான் வைக்கிறேன் என்று கூற நா துடித்தது. இதையாவது அவளுக்கு நான் செய்ய முடிந்தால்!

"அவங்க மகன் செல்வம்தான் இருக்கானே எல்லாம் செய்ய."

"மகனா!"

திக்கென்று அதிர்ந்தேன். குழலிக்கு மகன் ஏது? எங்களுக்குக் குழந்தைகள் கிடையாது. என்னிடமிருந்து விவாகரத்து கோரிய சமயத்திலும் அவள் கருவுற்றிருக்கவில்லை. இரண்டாம் திருமணம் செய்து கொண்டிருப்பாளா?

"குழலிக்கு... மகனா!"

"இருபத்தோரு வருஷம் முந்தி மதுரையிலேர்ந்து இங்கே வந்து குடியேறின போது, கையில் ரெண்டு வயசுக் குழந்தையோடுதான் வந்தாங்களாம். குழலி மேடம் சொல்லியிருக்காங்க."

பிரமை பிடித்தாற்போல் நின்று கொண்டிருந்தேன். மெல்ல மெல்லத்தான் அந்த உடலைத் தாண்டி அறையின் மற்ற அம்சங்கள் மூளையில் பதிந்தன.

பூமாலையும் பட்டுச் சேலையுமாய் உறங்குபவளின் தலைமாட்டில் உடைத்த தேங்காய், ஏற்றிய விளக்கு. அருகில் ஈர வேட்டியுடன் நிற்கும் இளைஞன். அவனுக்கு என் முனைப்பான தாடைகள். என் சுருட்டை முடி. அவ்வப்போது முடியைப் பின்பக்கமாய்த் தள்ளிவிட்டுக் கொள்ளும் என் பழக்கம். இறந்த முகத்தைப் பார்த்து ஏதோ செல்ல

"அந்த ஆள் கின்னஸ் புக்ல பேரு வரணும்னு ரொம்ப ஓவரா நடத்துக்கிறார்..."

"என்ன செய்யறார்?"

"தன்னைத்தானே செருப்பால அடிக்கக்கிறார்!"

- நீடூ பாம்பேஜான்



மான நினைவில் கண்ணீருக்கிடையே லேசாய்ப் புன்னகை செய்த போது, வலது கன்னத்தில் விழுகிற மீனாவின் அழகிய சின்னக் குழி.

ரஞ்சனியை மணந்த அடுத்த ஆண்டு ஏதோ ஒரு குறுகுறுப்பில் மீனாவைத் தேடிப் போய்க் கேட்ட போது -

"முந்தி 'ஆறு மாசத்தில் குழந்தை பிறந்தால்' அப்படின்னியே மீனா, அது உண்மையா?"

அவள் என்னைப் புழுவாய்ப் பார்த்தாள். குழலியின் கண்களிலிருந்த அதே பார்வை.

"அதைப் பத்தி உனக்கென்ன?"

"தெரிஞ்சுக்கலாமேன்னுதான். என் குழந்தையில்லையா?"

"திடீர் ஞானோதயம்!"

"சொல்லேன், ப்ளீஸ்!"

"ஆமாம். பிறந்துது."

"அப்புறம்?"

"அநாதை ஆசிரமத்தில் விட்டுட்டேன்."

"ஏன்?"

"பின்னே? உன் குழந்தைன்னா உன் ரஞ்சனி ஏத்துப்பாளா? இல்லே, நான்தான் வச்சு வளர்க்க முடியுமா?" அவள் குரல் தாழ்ந்தது. "என்னமோ தெரியலே, கொஞ்ச காலமாய் எனக்கு அடிக்கடி பயங்கர தலை நோவு வருது. அப்பப்போ மயக்கம் போட்டு விழறேன். யார் கதி எப்படியோ..."

"சரி சரி, எந்த அநாதை ஆசிரமம்?"

"யு வில் நெவர் ஃபைண்ட் அவுட்!" என்று அவள் சிரித்தாள். முன்பெல்லாம் என்னை மயக்கியிருந்த வலது கன்னத்துக் குழி சாட்டையாய் விழுந்தது.

அந்த இளைஞனை மறுபடியும் பார்த்தேன். மீனா தன் குழந்தையை உண்மையில் எங்கே விட்டாள் என்று புரிந்தது. நாங்கள் செய்த துரோகத்தை ஒதுக்கி விட்டு, மீனாவின்பால் இருந்த இரக்கத்தால் அந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்ளக் குழலியால் முடிந்திருக்கிறது. அதை ஏற்றுக் கொண்ட பிறகும் மீனா இறக்கும் காலம் வரை இவளும் மதுரையிலேயே இருந்திருக்கிறாள் என்பது இப்போது தெரிகிறது. நோயுற்ற தோழிக்குக் கடைசிவரை தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வதற்குத்தான் என்பதில் ஐயமில்லை.

அன்னப் பறவை பாலிலுள்ள நீரை ஒதுக்கி விட்டுப் பாலை மட்டும் பருகுமாம்.

சிறிது நேரம் குழலிக்கு முன் தலைகுனிந்தவாறு நின்றேன். பிறகு இன்னொரு முறை அவள் மகனை நெஞ்சார நோக்கினேன். மௌனமாய் வெளியேறினேன்.

சாவு வீட்டிலிருந்து திரும்பும்போது, யாரிடமும் போய் வருகிறேன் என்று சொல்லிக் கொள்ளக் கூடாது.



ராஜமுத்திரை

தீவிரவாதிகளை ஒழிக்கும் சி.பி.ஐ. ஆபீஸர்தான் ஹீரோ என்பது ஒரு வரிச் சுருக்கம். ஒழிப்பதற்கு சென்ட்டிமென்ட்டலாக ஒரு காரணம் வேண்டுமென்பதால் அப்பா, அம்மா, குழந்தையைக் கொன்றவர்களைப் பழிவாங்கும் நிர்ப்பந்தம்.

படம் ஆர்.கே. செல்வமணியுடையது என்பதால் காட்சிகளில் படுபிரும்மாண்டம். 70 எம்.எம். போதாது. 140 எம்.எம்.என்று புதுசாக ஏதேனும் வந்தால் தேவலை.

தில்லி திஹாரிலிருந்து தப்பிக்கும் தீவாதிகள், மெட்ராஸுக்கு (ஓடிவேவா!) வந்துவிட, சி.பி.ஐ. அருண்பாண்டியன் நெப்போலியனுடன் சேர்ந்து துரத்தோ துரத்தோ துரத்தோ துரத்தோ துரத்துகிறார், பாருங்கள். அலுக்கவில்லை.

காரணம், அவ்வப்போது நேரும் அதிர்ச்சித் திருப்பங்கள். உதாரணம்- அடைக்கலம் கொடுத்த முஸ்லிம் மீனவர் குடும்பத்திற்கு தீவாதி புனித் இஸார், ட்ரான்ஸிஸ்டர் பாம் பரிசளிப்பது. எதிர்பாராத திடுக். அவ்வண்ணமே அந்த கிளைமேக்ஸ் பரபரப்பு.

குண்டுகளும் சண்டைகளும் அடிக்கடி வெடிப்பதால், ரிலாக்ஸேஷனுக்கு வினிதா அலையஸ் ஏவாள். நடிக்க வேண்டாமா மேடம்? போதாக்குறைக்கு ஒரு பாட்டில் சில்க்.

பிரேமானந்தாவை பரமானந்தாவாக்கி (மன்சூர்) செமத்தியாக உதை தின்ன வைத்திருக்கிறார்கள். போலிச் சாமியார்களைச் சாடும் வசனங்களை செங்கல் சூளையில் உட்கார்ந்து எழுதியிருக்கிறார்கள். (யாருங்க?) தியேட்டரில் பிரத்யேகமாகச் சில விஸில்கள் கேட்கின்றன.

சென்ட்டிமென்ட்டலாகக் கிளைமேக்ஸில் 'டச்' பண்ணும் நெப்போலியனுக்கு இந்தப்படம் நல்ல பிரேக். காதலிக்க மட்டும் வேண்டாமே சார்!

இளையராஜா இருக்கிறார். 'இன்ன பிறரும் இருக்கிறார்கள்.

ஒருத்தரை மட்டும் ஸ்பெஷலாகப் பாராட்டியாக வேண்டும். ஒளிப்பதிவாளர் பன்னீர்செல்வம். சமீபகாலத்தில் இத்தனை லாகவமாக, புதுமையாக, நவீனமாகக் கேமராவைக் கையாளுவதில் தன்னிகரில்லாதவராகத் தெரிகிறார். ஸ்பெஷல் எஃபக்ட்களும், கம்ப்யூட்டர் இசையும் தரமுடியாத 'த்ரில்' உணர்வுகளைத் தமது மாறுபட்ட 'லைட்டிங்' மூலமே கொண்டு வருகிறார். 'சேஸிங்' காட்சிகளில் அருண்பாண்டியனல்ல; பன்னீரே ஹீரோவாகிறார்.

— பா. ராகவன்

பார்த்திபன்

4. வழிப்பறி

சக்கரவர்த்தி கம்பீரமான பட்டத்து யானை மீது ஆரோகணித்து வந்தார். அவர் நெடுங்காலத்துக்குப் பிறகு மாமல்லபுரத்துக்கு வந்தபடியாலும், முன்னறிவிப்பு இல்லாமல் எதிர்பாராத விதமாக வந்தபடியாலும், நகரவாசிகள் பட்டத்து யானையைச் சூழ்ந்து கொண்டு அளவில்லா ஆரவாரங்களைச் செய்தார்கள்.

இந்த ஆரவாரம் காதில் விழுந்ததும், மாரப்பபூபதி குதிரையைச் செலுத்திக் கொண்டு அவசரமாக அங்கிருந்து நழுவிச் சென்றான். தேவசேனன் வீதி ஓரமாக ஒதுங்கி நின்றான். அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. சக்கரவர்த்தியைத் தான் பார்க்கக் கூடாதென்று அவன் பல்லைக் கடித்துக் கொண்டு வேறு திசையை நோக்கி நின்றான். ஆனால் பட்டத்து யானை அவன் நின்ற இடத்துக்கு நேராக வீதியில் சென்றபோது அவனுடைய உறுதி குலைந்தது. சோழ வம்சத்தின் பரம வைரியானாலும், உலகெல்லாம் புகழ் பரப்பிய வீராதி வீரரல்லவா சக்கரவர்த்தி? அவனை அறியாமலே அவனுடைய பார்வை அவர் மீது சென்றது. அச்சமயத்தில் சக்கரவர்த்தியும் அவன் நின்ற பக்கமாகத் தம்முடைய கண்ணோட்டத்தைச் செலுத்தினார். அந்தக் கண்ணோட்டத்தின் போது இரத்தின வியாபாரியின் முகமும் ஒரு விநாடி நேரம் அவருடைய பார்வைக்கு இலக்காயிற்று. ஆனால், அப்படிப் பார்க்கும் போது அவருடைய கண்களில் தினையளவேனும் மாறுதல் காணப்படவில்லை. கண்ணிமைகள் சிறிது மேலே போகக் கூட இல்லை. அவனுடைய முகத்தைத் தாண்டிக் கொண்டு அவருடைய பார்வை அப்பால் சென்றுவிட்டது.

பட்டத்து யானையும் மேலே சென்றது. இரத்தின வியாபாரி பெரும் ஆபத்திலிருந்து தப்பியவன் போல் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். ஜனக்கூட்டம் எல்லாம் போகும் வரைக்கும் சற்று நேரம் அங்கேயே நின்று அவன் யோசனை செய்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் பெருங்குழப்பம் உண்டாயிற்று. முக்கியமாய் மாரப்ப பூபதியை அங்கே சந்தித்ததை எண்ணியபோது நெஞ்சம் துணுக்குற்றது. சித்தப்பாதான் இப்போது சோழ நாட்டுச் சேனாதிபதியாமே! தன்னிடம் ஏன் அவ்விதம் பேசினார்? ஒருவேளை அடையாளங் கண்டு கொண்டிருப்பாரோ? அந்தப் பெண் உண்மையில் சக்கரவர்த்தியின் குமாரிதானா? அப்படியானால் தன்னிடம் எதற்காகப் பெயரை மாற்றிக் கூறினாள்! அரண்மனைக்கு வரும்படி ஏன் வற்புறுத்திச் சொன்னாள்? நாலு புறத்திலும் தன்னை அபாயங்கள் சூழ்ந்திருப்பதாகத் தேவசேனனுக்குத் தோன்றியது. இனிமேல் மாமல்லபுரத்தில் இருந்தால் விபரீதங்கள் நேரலாம் என்று நினைத்தான். மேலும், அருள்மொழித் தேவியைப் பற்றி மாரப்ப பூபதி மர்மமாகச் சொன்னதை நினைத்த போது அவனுடைய நெஞ்சு துடித்தது. முதலில் உறையூருக்குப் போய் அன்னையைப் பார்க்க வேண்டும். மற்றக் காரியங்கள் எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

மாமல்லபுரத்தில் ஒரு குதிரையை வாங்கிக் கொண்டு உறையூருக்குப் போகலாம் என்ற உத்தேசம் விக்கிரமனுக்கு இருந்தது. அந்த உத்தேசத்தை இப்போது கைவிட்டான். குதிரை வாங்குவதற்குப் பிரயத்தனம் செய்தால் அதனால் என்ன விளையுமோ, என்னமோ? மாரப்பன் மறுபடியும் தன்னைப் பார்த்து விட்டால், அவரிடமிருந்து தப்புவது கஷ்டமாகலாம். நல்ல வேளையாக அந்தச் சமயத்திலே சக்கரவர்த்தி வீதியிலே வந்தார்! அருள்மொழியைப் பற்றி மாரப்பன் ஏதோ சொன்னதும் தான் பதறிவிட்டது விக்கிரமனுக்கு ஞாபகம் வந்தது. ஒருவேளை தன்மேல் சந்தேகம் கொண்டு உண்மையைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் அப்படி வஞ்சகமாகப் பேசினாரோ? இன்னும் ஒரு வினாடிப் பொழுது சக்கரவர்த்தி வராதிருந்தால் சித்தப்பா

கனவு

அமரர் கல்கி

தன்னைக் கண்டுபிடித்திருப்பார்! கண்டு பிடித்து என்ன செய்திருப்பாரோ? - மாரப்ப பூபதிதான் சோழ நாட்டுச் சேனாதிபதி என்பது மறுபடியும் விக்கிரமனுக்கு நினைவு வந்த போது அவனை என்னவோ செய்தது. மாமல்லபுரத்துக்கு அவர் எதற்காக வந்திருக்கிறார்? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்? எதுவாயிருந்தாலும் அவர் இப்போது இங்கே இருப்பது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. அவர் இங்கு இருக்கும்போதே, தான் உறையூருக்குப் போய் அன்னையைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிட வேண்டும். இன்றைக்கே இவ்விடமிருந்து கிளம்பிவிட வேண்டும். வழியிலே எங்கே யாவது குதிரை கிடைத்தால் வாங்கிக் கொள்ளலாம்.

இவ்விதம் தீர்மானம் செய்து கொண்டு விக்கிரமன் - அவனுடைய உண்மைப் பெயராலேயே இனி நாம் அழைக்கலாம். தான் தங்கியிருந்த சத்திரத்தை நோக்கி விரைந்து சென்றான். போகும்போது முன்னும் பின்னும் அடிக்கடி பார்த்துக் கொண்டான். குதிரைச் சத்தம் கேட்டால் உடனே கூட்டத்தில் மறைந்து கொண்டான். இவ்விதம் சென்று சத்திரத்தை அடைந்ததும், அங்கு வழிப் பிரயாணத்திற்காகத் தான் சேகரித்து வைத்திருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு குள்ளனையும் மூட்டைகளைச் சுமந்து வருவதற்காக அழைத்துக் கொண்டு கிளம்பினான். தான் சத்திரத்துக்குள்ளே சென்றிருந்த போது, குள்ளன் வெளியில் காத்திருந்த ஒரு மனிதனுடன் சமிக்ஞை மூலம் ஏதோ பேசியதை அவன் கவனிக்கக் கூட இல்லை.

விக்கிரமன் குள்ளனுடன் மாமல்லபுரத்தை விட்டுக் கிளம்பிய போது அஸ்தமிக்க ஜாமப் பொழுது இருக்கும். நகர வாசலைக் கடந்து, அவன் வெளியே ராஜபாட்டையில் நடக்க ஆரம்பித்த சமயம், மாலைக் கதிரவனின் கிரணங்கள் பசும் பொன் நிறத்தை அடைந்திருந்தன.

அந்தக் காலத்தில் மாமல்லபுரத்திலிருந்து காஞ்சி நகருக்கும், காஞ்சியிலிருந்து உறையூருக்கும் ராஜபாட்டைகள் சென்றன. மாமல்லபுரத்திலிருந்து காஞ்சி செல்லும் பாதையானது எப்போதும் ஜனங்களின் போக்குவரவினால் ஜே ஜே என்று இருக்கும். குதிரைகள் மீதும் யானைகள் மீதும் பல்லக்குகளிலும் ஜனங்கள் போய்க் கொண்டே இருப்பார்கள். அந்த ராஜ பாதை நெடுகிலும் ஒன்றுக்கொன்று வெகு சமீபத்தில் ஊர்கள் உண்டு. கோவில்களும், மடாலயங்களும், சத்திரங்களும், தண்ணீர்ப் பந்தல்களும், பல விதக் கடைகளும், பாடசாலைகளும் நெடுகிலும் காணப்படும். இதனாலெல்லாம் வெளி நாடுகளிலிருந்து புதிதாக வருகிறவர்களுக்கு மாமல்லபுரத்திலிருந்து காஞ்சி வரையில் ஒரு பெரிய நகரந்தானோ என்று தோன்றும்.

இத்தகைய ராஜபாட்டையிலிருந்து இடையிடையே பிரிந்து சென்ற குறுக்குப் பாதைகளும் ஆங்காங்கு இருந்தன. இந்தக் குறுக்குப் பாதையில் ஒன்று மாமல்லபுரத்துக்குக் கொஞ்ச தூரத்துக்கப்பால் பிரிந்து அடர்ந்த காடுகளின் வழியாகச் சென்றது. மாமல்லபுரத்திலிருந்து நேரே உறையூருக்குப் போக விரும்புவோர் இந்தக் குறுக்குப் பாதை வழியாகப் போனால் காஞ்சிக்குக் கொஞ்ச தூரம் தெற்கே உறையூர் ராஜபாட்டையை அடையலாம். குறுக்கு வழியில் செல்வதால் மூன்று காததூரம் அவர்களுக்கு நடை மீதமாகும்.

ஆனாலும், அந்தக் காட்டுப் பாதை வழியாக ஜனங்கள் அதிகமாகப் போவதில்லை. முக்கியமாக, இரவில் யாருமே போகமாட்டார்கள். அந்தப் பாதையில் சில இடங்களில் துஷ்ட மிருகங்களின் தொல்லை அதிகமாயிருந்தது. இதுமட்டுமல்லாமல், பிரசித்தமான பத்திரகாளி கோயில் ஒன்றும் அந்த வழியில் இருந்தது. சக்கரவர்த்தியின் கட்டளைக்கு மாறாக இந்தப் பத்திரகாளி கோவிலில் 'சாக்தர்' 'கபாலிகர்' முதலியோர் சில சமயம் நரபலி கொடுப்பது வழக்கம் என்ற வதந்தி இருந்தபடியால், இரவு நேரத்தில் அந்தப் பாதை வழியாகப் போக எப்பேர்ப்பட்ட வீரர்களும் தயங்குவார்கள்.

இதையெல்லாம் அறிந்திராத விக்கிரமன் குள்ளனால்

வழி காட்டப்பட்டவனாய், சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் அந்தக் குறுக்குச் காட்டுப் பாதை பிரியும் இடத்துக்கு வந்து சேர்ந்தான். குள்ளன் அந்தப் பாதை வழியாகப் போகலாமென்று சமிக்ஞையால் சொன்னபோது, விக்கிரமன் முதலில் கொஞ்சம் தயங்கினான். பிறகு, 'பயம் என்ன?' என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அந்தக் குறுக்குப் பாதையில் இறங்கினான். உறையூருக்குச் சீக்கிரத்தில் போய் அன்னையைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வமானது அவனுடைய மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள உதவியாயிருந்தது. அதோடு இன்னொரு காரணமும் சேர்ந்தது. அந்த முச்சந்திக்குச் சற்றுத் தூரத்தில் குறுக்குப் பாதையில் நாலு பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததை விக்கிரமன் பார்த்தான். அவன் குறுக்குப் பாதையில் இறங்கியவுடனே மேற்சொன்ன நால்வரும் எழுந்திருந்து விறுவிறுவென்று மேலே நடக்கத் தொடங்கினார்கள். தான் கொஞ்சம் சீக்கிரமாக நடந்தால் அவர்களோடு சேர்ந்து கொள்ளலாம் என்றும், வழித் துணையாயிருக்குமென்றும் விக்கிரமன் எண்ணியவனாய் அந்தப் பாதையில் வேகமாக நடக்கலானான். ஆனால் குள்ளன் வழக்கத்தைக் காட்டிலும் கொஞ்சம் மெதுவாகவே நடந்தபடியால், விக்கிரமனுடைய எண்ணம் நிறைவேறுவதாயில்லை.

அந்தப் பாதையில் போகப் போக இருபுறங்களிலும் காடு அடர்த்தியாகிக் கொண்டு வந்தது. முன்னிருட்டுக்,காலமாதலால், நாலாபுறத்திலிருந்தும் இருள் சூழ்ந்து கொண்டு வந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் நன்றாய் இருட்டிவிட்டது. ஆனால் வானம் துல்லியமாயிருந்தபடியால், வழி கண்டுபிடித்து நடப்பதற்கு அவசியமான வெளிச்சத்தை விண்மீன்கள் அளித்தன. மற்றபடி பாதையின் இருபுறமும் மரங்கள் அடர்ந்திருந்தபடியால் ஒரே அந்தகாரமயமாயிருந்தது. அந்தக் கனாந்தகாரத்தில், அந்த வனாந்தரப் பிரதேசத்தில் எண்ணில் அடங்காத மின்மினிகள் பிரகாசித்துக் கொண்டிருந்த காட்சியானது, வனதேவதைகள் தங்களுடைய மாயாஜால சக்தியினால் தீபாலங்காரம் செய்தது போலத் தோன்றியது.

நேரம் ஆக ஆக, விக்கிரமனுடைய தீரம் மிகுந்த உள்ளத்தில் கூடச் சிறிது பறைபறைப்பு உண்டாகத் தொடங்கியது. காட்டில் சில சமயம் சலசலப்புச்



சத்தம் உண்டாகும்; துஷ்ட மிருகங்களின் குரல் ஒலியும் ஆந்தைகளின் அருவருப்பான கூவலும் கேட்கும். இந்தக் காட்டுப் பாதை இப்படியே எவ்வளவு தூரம் வரை போகும், இரவில் எங்கே தங்கலாம் என்னும் விஷயங்களை அந்த ஊமைக் குள்ளனிடம் விக்கிரமன் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினான். ஆனால் இருள் காரணமாகக் குள்ளனுடன் சமிக்ஞை மூலம் சம்பாஷணை நடத்துவது எளிதாக இல்லை.

இருட்டி சுமார் ஒரு ஜாமப் பொழுது ஆகியிருக்கும். விக்கிரமன் அப்பால் போக இஷ்டப்படவில்லை. இருண்ட அந்த வனப் பிரதேசத்தில் தன்னைத் திடீரென்று தாக்கும் பொருட்டு அபாயங்கள் பல மறைந்து காத்திருப்பதாக அவனுடைய இருதய அந்தரங்கத்தில் ஏதோ ஒரு குரல் சொல்லிக் கொண்டே இருந்தது. திரும்பி ராஜபாட்டைக்கே போய்விடலாமா என்ற எண்ணம் உண்டாயிற்று. போகப் போக இந்த எண்ணம் ரொம்பவும் வலுப்பட்டது. மேலே நடக்க அவனுடைய கால்கள் மறுத்தன. குள்ளனுடைய தோளைத் தட்டி நிறுத்தித் தானும் நின்றான்.

அவன் நின்ற அதே சமயத்தில் எங்கேயோ வெகுதூரத்தில் 'டக் டக்', 'டக் டக்' என்று குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது.

குள்ளன் அதைக் கூர்ந்து கவனிப்பதைப் பார்த்ததும், விக்கிரமனுக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவே இல்லை. இவன் செவிடனாய் இருந்தால் அவ்வளவு லேசான சத்தம் எப்படி இவனுக்குக் கேட்டது?

உடனே விக்கிரமன் தன் அரையில் மேலங்கியினால் மறைக்கப்பட்டுக் கட்டித் தொங்கிய உடைவாளைப் பளிச்சென்று கையில் எடுத்தான். அந்தக் காரிருளில், நெய் தடவித் தீட்டப்பட்டிருந்த கத்தியானது பளபளவென்று மின்னிற்று. விக்கிரமன் குள்ளனுடைய தலையிலிருந்த பரட்டை மயிரை ஒரு கையினால் பற்றிக் கத்தியை ஓங்கி, "அடேய்! உண்மையைச் சொல்லு! நீ நிஜமாகச் செவிடன்தானா? உனக்குக் காது கேட்பதில்லையா? உண்மையைச் சொல்லாவிட்டால் இங்கேயே இந்த க்ஷணமே இந்த வாளுக்குப் பலியாவாய்!" என்றான்.





குள்ளன் உரத்த குரலில் சிரித்தான். 'கக் கக், கக் கக்' என்ற ஒலியை எழுப்பிய அந்தச் சிரிப்பின் பயங்கரமானது, விக்கிரமனுடைய உடம்பின் இரத்தத்தை உறைந்து போகும்படி செய்தது. இதனால் விக்கிரமன் ஒரு கணம் திகைத்து நின்றபோது, குள்ளன் அவனுடைய பிடியிலிருந்து திமிறிக் கொண்டு விடுபட்டு, ஒரு பத்தடி தூரம் பாய்ந்து சென்றான். அங்கு நின்றபடி இரண்டு கையையும் வாயினருகில் குவித்துக் கொண்டு மிகக் கோரமான நீடித்த சத்தத்தை உண்டாக்கினான். மனிதக் குரலுமல்லாமல், மிருகங்களின் குரலுமில்லாமல், கேட்பதற்குச் சகிக்க முடியாத அருவருப்பை உண்டாக்குவதாயிருந்த அந்தச் சத்தத்தைத் தூர இருந்து கேட்பவர்கள், 'பேய் பிசாசுகள் ஊளையிடுகின்றன' என்று எண்ணிப் பீதி அடைந்தார்களானால், அதில் ஆச்சரியம் அடைவதற்கு இடம் இராது.

அந்தச் சத்தத்தைக் கேட்ட போது விக்கிரமனுடைய உடம்பு ஒரு நடுக்கம் நடுங்கிற்று. ஆனாலும் உடனே அவன் சமாளித்துக் கொண்டு, அந்த க்ஷணமே அக்குள்ளனை வெட்டிக் கொன்று விடுவது என்ற தீர்மானத்துடன் பாய்ந்து சென்றான். அதே சமயத்தில் பாதையின் ஒரு பக்கத்திலிருந்த மரங்களின் மறைவிலிருந்து நாலு பேர் பாய்ந்து ஓடிவந்தார்கள். அவர்களுடைய கைகளில் கத்திகளைக் கண்டதும் விக்கிரமனுக்கு நெஞ்சில் பழையபடி துணிவும், தைரியமும் பிறந்தன. இருட்டினாலும், தனிமையினாலும், குள்ளனுடைய பயங்கரக் கூவலினாலும், மனிதர் உலகுக்குப் புறம்பான பேய் உலகத்துக்கு வந்திருக்கிறோமோ என்று எண்ணி, மனத்தில் திகில் அடைந்திருந்த விக்கிரமனுக்குக் கத்திகளைக் கண்டவுடன், இது மனித உலகத்தைச் சேர்ந்த காரியந்தான் என்ற நிச்சயம் ஏற்பட்டது. எனவே, பீதியும் போய் விட்டது. உடனே தன் வாளை எடுத்துச் சுழற்ற ஆரம்பித்தான். வந்த நால்வரும் விக்கிரமனை ஏக காலத்தில் தாக்கத் தொடங்கினார்கள். விக்கிரமன் சக்ராகாரமாகச் சுழன்று அவர்களுடன் போரிட்டான். அவனுடைய கத்தியின் முதல் வீச்சிலேயே ஒருவன் படுகாயம் பட்டுக் கீழே விழுந்தான். இன்னொருவனுடைய கத்தி அடிபட்டுத் தூரப் போய் விழுந்த போது குள்ளன் மேலே விழுந்தது. அவன் 'வீல்' என்று கத்திக் கொண்டு தரையில் சாய்ந்தான். கத்திச் சண்டையில் விக்கிரமன் சாதாரண மனிதனல்ல என்று தெரிந்து கொண்ட மற்ற இருவரும் மிகவும் எச்சரிக்கையுடன் அவனுடைய கத்தி வீச்சுக்குள் வராமல் தூர நின்றே சண்டையிட்டார்கள்.

அருள்வாக்கு



'நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும்' என்று நினைப்பது உத்தமமான எண்ணம். ஆனால் எண்ணம் உத்தமமாயிருந்து விட்டால் போதுமா? நாம் டாம்பீகமாக வாழ்க்கை நடத்திக் கொண்டு மற்றவர்களும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப் பட்டால் அது நடக்குமா? அப்படியே நடந்து அமெரிக்கா மாதிரி எல்லாரும் 'லக்ஷுரிய ஸாக' வாழ முடிந்தால் அது நல்லதுதானா? லௌகிகமான ஸௌக்கியங்கள் ஜாஸ்தியாக ஆக ஆத்மாபிவிருத்திக்கே வழியில்லாமல் தானே ஆகியிருக்கிறது? எத்தனை போட்டாலும் த்ருப்தியில்லாமல் கபளீகரம் பண்ணுகிற நெருப்பு மாதிரிதான் இந்த ஆசை என்பது. அது எவ்வளவு ஸௌகரியம் இருந்தாலும் த்ருப்திப்படாமல் இன்னும் புதிக புதிசாக ஸௌக்ய ஸாதனங்களைத் தேடிக் கொண்டுதான் இருக்கும். அத்ருப்தி, குற்றங்கள் இத்யாதியைத்தான் அமெரிக்காவில் பார்க்கிறோம். ஸௌக்ய ஸாதனங்கள் என்று நினைக்கிறவைகளை விட்டால்தான் சாந்தி கிடைக்கும் என்று அங்கே புத்திசாலிகளாக இருக்கப்பட்டவர்கள் புரிந்து கொண்டுதான் த்யானம், யோகம், பஜனை என்று கிளம்பியிருக்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அவர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்ததிலிருந்து யாரையோ அவர்கள் எதிர்பார்த்தது போலத் தோன்றியது. அதற்குத் தகுந்தாற்போல் குதிரைக் காலடிச் சத்தம் அதிவிரைவாக நெருங்கி வந்து கொண்டிருந்தது. வெகு சீக்கிரத்தில் மங்கலாகத் தெரிந்தது. விக்கிரமனுடன் போரிட்டவர்களில் ஒருவன் "எஜமானே! சீக்கிரம்!" என்று கத்தினான். 'குதிரையின் மேல் வருகிறவன் இவர்களுடைய எஜமானன் போலும்! நம்முடைய முடிவு நெருங்கிவிட்டது' என்று எண்ணினான் விக்கிரமன். ஏற்கெனவே அவன் சண்டையில் களைப்புற்று வந்தான். எனினும் அந்த இரண்டு பேரையும் எப்படியாவது சமாளிக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் குதிரையின் மேல் புதிதாக வந்த மூன்றாவது மனிதனோடும் எப்படிச் சண்டையிட்டுச் சமாளிக்க முடியும்?

விக்கிரமனது உள்ளத்தில் "அன்னையைப் பார்க்காமல் போகிறோமே!" என்ற எண்ணம் உதித்தது. பல்லக்கிலிருந்து கனிவு ததும்பிய கண்களுடன் தன்னைப் பார்த்துப் பேசிய பெண்ணின் நினைவும் வந்தது. உடனே, பட்டத்து யானைமேல் வந்த சக்கரவர்த்தியின் முகம் அவன் மனக்கண்ணின் முன் தோன்றியது. "நரசிம்ம மகா சக்கரவர்த்தியின் ஆட்சியா இவ்வளவு லட்சணமாயிருக்கிறது! பல்லவ சாம்ராஜ்யத்தில் வழிப்பறியும் கொள்ளையுமா?" என்று நினைத்தான். "இப்படிப்பட்ட சக்கரவர்த்தியா நமது சோழ நாட்டை ஆளுகிறார்?" என்ற எண்ணத்தினால் உண்டான ஆத்திரத்துடன் கத்தியை ஓங்கி வீசினான். இருவரில் ஒருவன் வீழ்ந்தான்.

அதே சமயத்தில் குதிரை மீது வந்த வீரன் தன்னுடைய கத்தியை இன்னொருவன் மீது செலுத்த அவனும் மாண்டு வீழ்ந்தான்.

விக்கிரமனுக்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. அவ்வீரன் தன் மீது வீச வேண்டிய வாளைத்தான் தவறுதலாய் அவன் மீது செலுத்தி விட்டானோ என்று நினைப்பதற்கு இல்லை. ஏனெனில் தான் மேலங்கி அணிந்திருந்தபடியாலும் அவர்கள் வெறும் உடம்பினராயிருந்த படியாலும் எளிதில் அடையாளம் கண்டுபிடிக்கக் கூடியதாயிருந்தது. அப்படியானால் இந்த வீரன் யார்! இவர்களால் எதிர்பார்க்கப்பட்டவன் இல்லையா?

அச்சமயம் குதிரை மேலிருந்து கீழே குதித்த அவ்வீரன், "ஐயா! நீர் யார்? இந்த இருட்டில் தனி வழியே வந்த காரணம் என்ன?" என்று வினவினான்.

(தொடரும்)

பெண்ணெனும் போதிமரம்...

நிர்மலா பாஸ்கர்

"தம்பி..."

பதற்றமும், அவசரமுமாய் வாசலில் குரல் கேட்கவும் நிமிர்ந்தேன்.

மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தேன் அப்போது. ஸ்கேலை அதன் மேலே வைத்து விட்டு வாசலுக்கு வந்தேன்.

முருகனின் அம்மா நின்று கொண்டிருந்தாள். கண்களில் நீர். முகத்தில் சோகம். புரிந்து விட்டது எனக்கு.

"உள்ளே வாங்கம்மா" என்றேன் முருகனைப் பற்றிய யோசனையுடன்.

"தம்பி, நம்ம முருகனை போலீஸ் புடிச்சிக்கிட்டுப் போயிருச்சு" என்றாள் தழுதழுப்பான குரலில்.

"போலீசா?" என்றேன் அதிர்ச்சியுடன்.

கொஞ்சம் தாதா வேலை பண்ணுவான் ஊருக்குள். ஆனால் இதுவரை போலீஸ் வரைக்கும் அவன் புகழ் போனதில்லையே...!

"நீதான் ஏதாவது செய்யணும்" என்றாள் நம்பிக்கை மிகுந்த குரலில்.

"சரி, நீங்க வீட்டுக்குப் போங்கம்மா. நான் ஸ்டேஷனுக்குப் போய் விசாரிக்கறேன்" என்று சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினேன்.

முருகனும், நானும் ஒரு காலத்தில் பள்ளித் தோழர்கள். நான் மேலே படித்து, வெளியூர் கல்லூரியில் சேர்ந்து தேர்வு பெற்று, படித்த பள்ளியிலேயே இப்போது வாத்தியாராகி விட்டேன்.

முருகனுக்குப் படிப்பு ஏறவில்லை. அம்மா வளர்த்த பிள்ளை. அப்பா சிறு வயதிலேயே போய் விட்டார். கொஞ்சம் பணமும், வசதியும் அப்போது இருந்தது. போதாதா? மாப்பிள்ளை குணங்கள் எல்லாம் சேர்ந்து விட்டன.

அம்மாவின் பாசத்தால் வயசுக்கு மீறிய வளர்ச்சி உடம்பில். கோயில் காளை மாதிரியே திரிய ஆரம்பித்தான். வெட்டிச் சண்டைகளுக்கும், சவடால்களுக்கும் தலைமை தாங்க ஆரம்பித்தான்.

பக்கத்து டவுனில் புதுப்படம் ரிலீசானால் போதும். பிளாக்கில் டிக்கெட் வாங்கியாவது பார்த்து விடுவான். கூடவே ஜால்ராக் கூட்டமாய் இரண்டு, மூன்று பேர். டெரிகாட் சட்டை என்ன, மல் வேட்டி என்ன, செண்ட் என்ன என்று சொத்தைக் கரைத்தான்.

இப்போது பெருங்காய டப்பாவான வாழ்க்கை. கையில் காசு வடிந்ததும் ஊரிலிருந்த கொஞ்ச நஞ்ச மதிப்பும் போய் விட்டது.

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் ரைட்டர் நின்று கொண்டிருந்தார்.

"வாங்க வாத்தியார் தம்பி" என்று வரவேற்றார்.

கிராமங்களில்தான் இன்னும் ஸ்கூல் வாத்தியார்களுக்கு அதே மதிப்பு இருக்கிறது.

"எங்கே இந்தப் பக்கம்?" என்றார் தொப்பியைக் கையில் எடுத்தபடி.

"நம்ம முருகன் விஷயமாய்த்தான்..."

"ஓ! அந்த ரவுடிப்பயலைப் பார்க்க வந்தீங்களா?"

"ஆமாம். என்ன தப்பு செஞ்சான்?"

"டெண்ட் கொட்டகையிலே தகராறு. அதான் தியேட்டர் ஓனர் புகார் கொடுத்துட்டாரு."

"எஃப்.ஐ.ஆர். எழுதிட்டீங்களா?"

"இல்லை. நல்லா வாழ்ந்த குடும்பத்துப் பையன்னு கேள்வி. ரெண்டு தட்டு தட்டி விட்டுடலாம்னு வைச்சிருக்கேன்."

"ஐயையோ. அதெல்லாம் வேண்டாம். நான் புத்தி சொல்றேன்" என்றேன் அவசரமாய்.

"நீங்க எப்படி அவனுக்கு வக்காலத்து?"

"அவன் அம்மா இல்லேன்னா இன்னிக்கு நான் வாத்தியாராகவே ஆயிருக்க முடியாது. எங்க குடும்பத்துக்கு அவங்களாலே அவ்வளவு உதவி. முருகனும் என்னோட படிச்சவன்தான்."

யோசித்தார் தலையைக் கோதியபடி.



''இயேட்டர்காரரிடம் மன்னிப்பு கேட்கச் சொல்லிடறேன் இவனை'' என்றேன்.

''சரி, சரி, நீங்க வந்ததுனாலே விடறேன். இன்னொரு முறை இந்த மாதிரி ஆகாம பார்த்துக்குங்க'' என்று உள்ளே நடந்தார். தொடர்ந்தேன்.

"எலேய், வாடா இங்கே" என்று அவனை அதட்டினார்.

"வாத்யாரே, வுந்துட்டியா இங்கியும்" என்றான் முருகன் சிரித்தபடி.

என்னை அவன் இப்போதெல்லாம் அழைப்பது அப்படித்தான்.

அவனைக் கூட்டிக் கொண்டு வெளியே வந்தேன்.

''என்ன முருகா இது? உனக்கு எத்தனை முறை சொல்றது? உனக்கும் முப்பது வயசாச்சு. புத்தி சொல்ற வயசா இது?'' என்றேன் கண்டிப்புடன்.

''கோவிச்சுக்காத வாத்யாரே. உன்னையும், அம்மாவையும் விட்டா எனக்கு யாரு இருக்காங்க!'' என் றான் கையைப் பிடித்தபடி.

அந்தக் குரலில், என் நட்பை அவன் எத்தனை தூரம் மதிக்கிறான் என்று புரிந்தது.

"முருகா, என்ன நடந்தது டூரிங் டாக்கீசில்?'' என்றேன் கொஞ்சம் சாந்தமாய்.

"பின்னே என்னப்பா, டிக்கெட்டுப் போக மீதி பத்துகாக, இருபது காசையெல்லாம் தர மாட்டேங்கறான். அஞ்சு பைசா சம்பாதிக்கறதுக்கு சனங்க வெயிலிலும், மழையிலும் காயுதுங்க களத்து மேட்டுல. இவன் என்னடான்னா கூண்டுக்குள்ளே உட்கார்ந்துக்கிட்டு கஷ்டப்படாம சனங்க துட்டை கொள்ளையடிக்கிறான்."

"நீ யாரு இதைக் கேட்க?''

''பாவம் சனங்க. மனசுக்குள்ளேயே பொருமிக்கிட்டு டிக்கெட்டை வாங்கிக்கிட்டுப் போறதைப் பார்த்தேன். சுர்ருனு ஏறிக்கிச்சு எனக்கு. அதான் அந்த டிக்கெட் கொடுக்கற பயலை ரெண்டு தட்டு தட்டலாம்னு போனேன்."

"குடிச்சிருந்தியா?''

"அது... அதுக்கும், இதுக்கும் சம்பந்தமில்லை வாத்யாரே. நியாயத்தை குடிகாரன் கேட்கக் கூடாதா?'' என்றான்.

அவன் கூறியதன் நியாயத்தை உணர்ந்தாலும், "இதோ பாரு, தினசரி பகலில் வீட்டுலயே தங்கு. சாயந்திரம் என் வீட்டுக்கு வந்துடு. ராத்திரி படுக்கை இனி என் வீட்டுலே தான். கண்ட நேரத்துல கண்ட இடங்களில் சுத்தறதை விட்டுடு, என்ன?'' என்றேன்.

பெருமாள் மாடு மாதிரி தலையாட்டினான் பலமாய்.

அடுத்த ஒரு வாரம் சென்னையில் ஒரு விசேஷ பயிற்சி வகுப்புக்கு என்னை தலைமையாசிரியர் திடீரென போகச் சொல்லி விட்டார்.

முருகனிடம் பல தடவை புத்தி சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

சென்னையின் பரபரப்பில் ஒரு வாரம் ஓடி விட்டது குடைராட்டின சுழற்றலின் வேகத்துடன்.

அதிகாலை நாலரை மணி பஸ்சில் ஊர் திரும்பினேன். பேருந்து நிலையத்தில் நாயர் கடை திறந்திருந்தது.

"வாங்க வாத்யார் தம்பி. பட்டணம் விட்டுச்சா. டீ. போடவா?" என்று வரவேற்றார்.

தலையசைப்புடன் பெஞ்சில் அமர்ந்தேன்.

'சர்... சர்...' என்று லாகவமாய் தாளம் பிசகாத ஒலியில் நாயர் டீயை ஆற்றி நீட்டினார்.

சர்க்கரை தூக்கலான டீ.

"உங்க தோஸ்த்துக்கு கல்யாணம் ஆயிடுச்சே.. தெரியுமா?" என்றார் திடுதிப்பென.

"யாருக்கு?" என்றேன் விளங்காமல்.

"அந்த ஊர் சுற்றிப்பய முருகனுக்குத்தான்" என்றதும் ஆச்சரியமாய்ப் பார்த்தேன்.

"உண்மையாகவா?"

"இதுல எதுக்குப் பொய்? நம்ம பஞ்சவர்ணம் பொண்ணு விஜியைத்தான் கட்டிக்கிட்டான்" என்றதும் எனக்கு மேலும் வியப்பு.

அந்தப் பெண் பாவம், வயதாகியும், திருமணமே கூடி வராமல் இருந்தது. ஒருமுறை நிச்சயதார்த்தம் கூட நடந்தது. ஆனால் பையனை அடுத்த நாளே லாரி அடித்து விட்டது. அதனால் துரதிர்ஷ்டக்காரி என்று ஊரே சபித்தது. வேறு எந்த ஆணும் அவளைத் திருமணம் செய்து கொள்ள முன் வரவில்லை.

காலில் இறக்கை கட்டியது போல வேகமாய் நடந்தேன் முருகன் வீடு நோக்கி.

"வா தம்பி" என்று வரவேற்றாள் அவன் அம்மா. அதற்குள் வாசல் தெளித்து பளிச்சென கோலம் போடப்பட்டிருந்ததை கவனித்தேன்.

முருகன் கொல்லைப்புறத்திலிருந்து வந்தான். என்னைக் கண்டதும் வெட்கப் பட்டான்.

"என்னடா, புது மாப்பிள்ளை!" என்று முதுகில் அறைந்தேன்.

"போ வாத்யாரே" என்று நெளிந்தான் சங்கோஜமாய்.

இருவரும் வாசல் திண்ணையில் வந்து அமர்ந்தோம்.

காப்பியுடன் விஜி வந்தாள். என்னை நோக்கிக் கைகுவித்தாள். புதுமணப் பெண்ணின் பூரிப்பு விலகாத முகம்.

"என்ன முருகா திடீர்னு... நான், உன் கல்யாண சாப்பாட்டை சாப்பிடக் கூடாதுன்னு திட்டமா?" என்றேன் பொய்க் கோபமாய்.

"உனக்கில்லாத சாப்பாடா?" என்றான் முகத்தில் சந்தோஷம் மிளிர.

"சொல்லு. எப்படி திடீர்னு?" என்று தூண்டினேன்.

"போன புதன் கிழமை ஊர்க் கோடியிலே இருக்கற கிணத்தங்கரையிலே ஓரமா உட்கார்ந்திருந்தேன். நீ வேற ஊர்ல இல்லியா? அதனால... கையிலே... பாட்டிலோட..." என்றான் சங்கடமாய்.

"பரவாயில்லை சொல்லு."

"திடீர்னு சத்தம் தொப்புனு. ஓடிப் போய் பார்த்தா இந்தப் பொண்ணு கிணத்துக்குள்ளே. நானும் தண்ணிக்குள்ளே குதிச்சுக் காப்பாத்தினேன்."

"அப்புறம்?"

"ஒரே அழுகை சாகணும்னு. இதுக்குக் கல்யாணமாகாத கவலையிலே இது அம்மா படுத்த படுக்கையாயிட்டாளாம். ஊரோட கேலிப் பேச்சையும் தாங்க முடியலியாம் இவளாலே."

"ஓகோ!"

"அப்பத்தான் யோசிச்சேன். பிரயோஜனமில்லாத பயல்னு ஊரே என்னைச் சொல்லுது. அம்மாவும் கால்கட்டு போடணும்னு ஆசைப்படுது. ரெண்டையும் யோசனை பண்ணி இது கழுத்துல, அன்னிக்கே கோவில்ல வைச்சு தாலி கட்டிட்டேன். நேரே அம்மா காலில் வந்து விழுந்தேன்."

"அப்படிப் போடு" என்றேன் பிரமிப்பாய்.

"அம்மாவுக்கும் சந்தோஷமாயிடுச்சுன்னு புரிஞ்சது. நான் செஞ்சது சரிதானே வாத்யாரே?" என்றவனின் கைகளைப் பற்றினேன் பெருமையுடன்.

எத்தனை அரிய காரியம் இது? எனக்குக் கூட இத்தனை பரந்த மனசு வருமா? சந்தேகம்தான்.

"வாத்யாரே, ஒரு பொட்டிக் கடை மாதிரி வைக்கப் பொழைக்கலாம்னு பார்க்கறேன். என்னவோ திடீர்னு பெரிய மனுஷன் ஆயிட்ட மாதிரி தோணுது" என்று வெள்ளையாய்ச் சிரித்தான்.

பேட்டை அழகி என்பதில் என்ன பெருமை?

மிஸ் உலக அழகி, மிஸ் இந்தியா போதாதென்று மிஸ் தி.நகராகவும் மிஸ்.ராகா'95 ஆகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சமீப காலமாகச் சென்னை நகரில் பலராலும் பேசப்பட்டு வரும் தருணாவிடம் முகம் சுளிக்க வைக்கக் கூடிய சில கேள்விகள் கேட்டோம். புன்னகைப் பூ உதிர்க்கும் மெழுகு பொம்மையாய் அழகி அளித்த அமுத மொழிகள்:

"பேட்டைக்குப் பேட்டை தெருவுக்குத் தெரு, ஃபிளாட்டுக்கு ஃபிளாட் அழகிப் போட்டிகள் அதிகரிப்பதும் - அதில் வெற்றி பெறுவதிலும் என்ன பெருமை இருக்கிறது? ஒரு மிஸ் இந்தியா, மிஸ் உலகம் இப்படி....."

"வெயிட், வெயிட், வெயிட்! அழகிப் போட்டிகள் நடத்துவதில் என்ன தப்பு? இந்த மேற்கத்திய கலாசாரம், பம்பாய் வரைதான் இதுநாள் வரை இருந்தது. இப்போது மெட்ராஸ் வந்திருக்கிறது. ஒரு ஜாலிதானே? வெற்றி பெறுவது அத்தனை சுலபமில்லை தெரியுமா? நடை, உடை, பாவனையிலிருந்து எடை, இடை, தோரணை வரை எத்தனை விஷயங்களில் கான்ஸன்ட்ரேட் பண்ண வேண்டியிருக்கிறது! இது ஒரு சவால் இல்லையா? இந்த மிஸ் தி.நகர் போட்டிக்காக நான் எத்தனை எக்ஸர்ஸைஸ் பண்ணி உடம்பை ட்ரிம் ஆக்கியிருக்கிறேன்



தெரியுமா? (த்லொ, த்லொ!) மிஸ் இந்தியா, மிஸ் யூனிவர்ஸ் எல்லாம் அடுத்தடுத்த கட்டங்கள்தானே?''

''பேட்டையில் சிறந்த அழகி என்கிற ஒரே தகுதியில் ஒரு பிரமுகராகி விடுவது ஒரு லாபம் தானே?''

''ஐயோ! அழகு மட்டும் போதாது ஐயா! இறுதிச் சுற்றில் புத்திசாலித்தனம் காட்டணுமே! கேள்வி கேட்டு திணறடித்து விடுகிறார்கள்!''

''அ, கப்ஸா! வெகு சாதாரண கேள்விகள். எல்.கே.ஜித்தனமான பதில்கள். அடுத்த ஜென்மத்தில் யாராய்ப் பிறக்க விரும்புகிறீர்கள் என்பதெல்லாம் ஒரு கேள்வியா?''

''ஒரு விஷயம் தெரிந்து கொள்ளுங்கள். ஆயிரம் பேர் மத்தியில் மைக் பிடித்து, தயங்காமல், கேட்டவுடன் தடுமாறாமல் பதில் சொல்வதே பெரிய கஷ்டம். சந்தேகமெனில் முயற்சித்துப் பாருங்கள். (வாரே வா!) தவிர என்னளவில் எப்படிப்பட்ட, எத்துறை சம்பந்தமான கேள்விகளுக்கும் நான் தயார்! வேண்டுமானால் கேட்டுப் பாருங்களேன்!'' (தருமி!)

''மாடலிங், சினிமாத் துறைக்கு நுழைய ஒரு சந்தர்ப்பம் என்பது தவிர அழகிப் போட்டிகளால் என்ன லாபம்?''

''அதுவே லாபம் தானே! அஃப் கோர்ஸ், நான் ஏற்கெனவே மாடலிங் செய்து கொண்டுதான் இருக்கிறேன். (லலிதா ஜுவல்லரி காலண்டரில் ஜொலி ஜொலிக்!) தவிர இது மாதிரி போட்டிகளில் கலந்து கொள்கிற அனுபவம் தன்னம்பிக்கை தருகிறது. அது பெரிய விஷயமில்லையா?''

''லேட்டஸ்ட் பேட்டை அழகிக்கு சினிமா சான்ஸ்....?''

''வருகிறது. ஆனால் எனக்கு வேண்டாம்ப்பா! (அடடா!) படிக்க ஆசை இருக்கு. ப்ரொஃபஷனல் கோர்ஸஸ்.... மேனேஜ்மெண்ட் ஸ்டடீஸ்....''

ஹூம்!

வெள்ளித்திரை ஒரு கனவுக்கன்னியை இழக்கிறது.

— மௌஷ்மி

படம் : கேமரா திருஞானம்



வித்தியாசமான பஃபே!

ஹாங்காங்கில் உள்ள ''இந்தியன் உட்லண்ட்ஸ்'' உணவு விடுதியில், ஒவ்வொரு காந்தி ஜயந்தியின் போதும் யார் வேண்டுமானாலும் சென்று பஃபே முறையில் பரப்பப்பட்டுள்ள உணவு வகைகளில் விரும்பியதை, விரும்பிய அளவு சாப்பிடலாம். சாப்பிட்ட பின்பு, அவர்களால் முடிந்ததை நன்கொடையாக உண்டியலில் வழங்கலாம். வசதியில்லாதவர்கள் குறைந்த தொகை செலுத்தும் போது மனம் நோகாமல் இருப்பதற்காக, இத்தகையதொரு ஏற்பாடு.

அன்று உணவுக்காகச் செலவாகும் மொத்த தொகையையும் விடுதி நிர்வாகமே ஏற்றுக் கொள்கிறது. வசூலாகும் மொத்த தொகையும் நன்கொடையென தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த ஒன்பது வருடங்களில் இவ்வாறு பன்னிரெண்டு லட்சம் நிதி திரட்டி வழங்கியுள்ளார்கள். சென்ற வருடம் சேர்ந்த ரூபாய் மூன்று லட்சம், மகாராஷ்டிரா பூகம்ப நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டிலிருந்து சென்று இந்த உணவு விடுதியை நடத்திக் கொண்டிருக்கும் இதன் இயக்குனர் திரு. உசிர்.

ஹிந்து - மே.ர. ஜகந்நாதன்.

''டைரக்டர் லவ் சீன்ல எல்லாம் படு இயற்கையா எடுக்கிறாரே...''

''சும்மாவா? டைரக்டர் பீச்சுல சுண்டல் வித்தவராச்சே...''

— எஸ்.எஸ். பூங்கதிர்.



மணிக்கொடி

ஜோதிர்லதா கிரிஜா

— 55 —

சாண்டர்ஸ் கொலை வழக்கில் தூக்கிலிடப்படுவதற்கு இருந்த இளைஞர்கள் விஷயத்தில் தலையிட்டுத் தமது செல்வாக்கால் அவர்களது தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி இடைவிடாது வற்புறுத்தியது. வன்முறையில் தமக்கு நம்பிக்கை இல்லாத போதிலும், காங்கிரசிலும், கம்யூனிஸ்ட் கட்சியிலும் இளைஞர்கள் அணிகளிலிருந்து புறப்பட்ட கோரிக்கைக்குச் செவி சாய்க்கக் காந்தியடிகள் முன் வந்து வைசிராய்க்கு வேண்டுகோள் விடுத்தார். வெறும் பேச்சோடு நில்லாமல், 'இவ்விளைஞர்களின் உயிர்கள் பறிக்கப்படாதிருந்தால், நான் மகிழ்ச்சியடைவேன்' என்று காந்தி கடிதமும் எழுதினார்.

அனைவரும் நம்பிக்கையோடு காத்திருந்த போது, 'பகத்சிங் வழக்கில் தீர்ப்பளிக்க வேண்டியது பஞ்சாப் மாகாண அரசாங்கமே' என்று வைசிராய் தெரிவித்து, ஆனாலும் தாம் சிபாரிசு செய்வதாகச் சொன்னதும் 'இது வெறும் கண்துடைப்பே' என்பது புரிந்து போயிற்று. முன்னறிவிப்பு இன்றிச் சில மணி நேரம் முன்னதாகவே பகத்சிங் தூக்கிலிடப்பட்டதும் வெளியாயிற்று.

பகத்சிங்கின் மரணத்தால் இந்தியா முழுவதும் கொந்தளித்தது. கடையடைப்பும் ஊர்வலங்களும் நாடு முழுவதும் நடந்தன.

ஒரு வாரங்கழித்து நடந்த கராச்சி காங்கிரஸில், பகத்சிங் மரணம் குறித்த அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது. ஆனால், காந்தியடிகள், 'வன்முறை எந்த வடிவத்தில் இருந்தாலும் அதை விரும்பவோ அங்கீகரிக்கவோ காங்கிரஸ் விரும்பாத போதிலும்' என்ற சொற்றொடர் அனுதாபத் தீர்மானத்தைத் தொடங்கும் சொற்களாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி அது ஏற்கப்படவும் செய்தார்.

தில்லித் தெருக்களில் கால்போன போக்கில் சுற்றிய பின் ரெயில் ஏறிய கங்காவும் புரட்சிக்கார நண்பன் சுந்தர்லால் நட்கர்னியும் சோர்ந்த முகங்களுடன் கல்கத்தா ஹௌரா நிலையம் வந்து சேர்ந்தனர். ஒரு சிற்றுண்டி விடுதியில் ரொட்டியும் தேநீரும் பருகிய பின் ஹாரிசன் வீதி வரை நடந்து, பின் டிராமில் ஏறி வெல்லெஸ்லி தெரு நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டு, அருகே இருந்த ஒரு பூங்காவையடைந்து ஒரு மர நிழலில் அமர்ந்தார்கள்.

"சே... எப்படிப்பட்ட இழப்பு! பகத் சிங் மாதிரி சில வீரர்கள் ராஜதானிக்கு ராஜதானி கிளம்பினால் போதுமே. இந்தியாவில் வெள்ளைக்காரன் இருந்ததற்கான சுவடுகள் கூட அழிந்துவிடும், இல்லையா?" என்றான் கங்கா.

"உண்மைதான். ஆனால் ஒரு கொலையைச் செய்து விட்டு இயக்கத்தின் முக்கியமான சில புள்ளிகள் தலைமறைவாக வேண்டிய கட்டாயம் விளைவதால், இயக்கமே செயலிழந்து போகிறது. அப்படித்தான் பல பயங்கரவாத இயக்கங்கள் முளைப்பதும் வீழ்வதுமாக இருக்கின்றன. ஒரு விஷயம் கவனித்தாயா கங்கா? காந்தியால் காஷ்மீரம் தொடங்கிக் கன்யாகுமரி வரையில் சட்ட மறுப்பு இயக்கமோ, உப்பு எடுக்கும் இயக்கமோ, கதர் இயக்கமோ, ஒத்துழையாமை இயக்கமோ எதுவானாலும் நடத்திவிட முடிகிறது. ஆனால் நம் பயங்கரவாதிகளால் - அதாவது தீவிரவாதிகளால் - அது இயலவில்லை, பார்த்தாயா?"

"நீ சொல்லுவது உண்மைதான், சுந்தர்லால். நான் அது பற்றி யோசித்ததே கிடையாது. பயங்கரவாதிகள் ஆங்காங்கு செயல்பட்டுப் பின் தலை மறைவாகி விடுகிறார்கள் என்பதைத் தவிர கணிசமான அளவில் அவர்களால் நாடு தழுவிய அளவில் எதையும் சாதிக்க முடியவில்லை என்பது உண்மைதான்."

"சில கொலைகளைச் செய்து சிறையில் வாடுவது தவிர மக்களின் இயக்கமாக மலரச் செய்ய முடிவதில்லை."



"நாம் ஒரு முறை காந்தியைச் சந்திக்க வேண்டுமே, சுந்தர்லால்?"

"எனக்கும் கூட ஆசைதான். பார்க்கலாம். இன்று நாம் பேசிக் கொண்டது நமக்குள். என்ன?"

"சத்தியமாக," என்றான் கங்கா.

ராமசாமியின் வகுப்பறையில் வழக்கம் போல அந்த ஞாயிற்றுக்கிழமையும் கூட்டம் நடந்து முடிந்ததும் மணவாளநாயுடுவும் ராமசாமியும் பேசிக் கொண்டே நடந்தார்கள்.

தெருமுனை வந்ததும், "நாயுடுகாரு, வீட்டுக்கு வந்து ஒரு வாய் காப்பி குடிச்சுட்டுப் போம்," என்று ராமசாமி உபசரிக்க, அதற்கென்றே காத்துக் கொண்டிருந்த மணவாள நாயுடு உற்சாகம் பொங்க அவரோடு நடக்கலானார்.

ராமசாமியின் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் இளைஞன் எழுந்து நின்றான். விசாலம் வெளிப்பட்டு வந்து, "என்னமோ கங்காதரன், கங்காதரன் கிறாம்ப்பா. தமிழ் பேசத் தெரியல்லே. நீ விசாரிச்சுட்டு எனக்கும் சொல்லு" என்றாள்.

"என் பெயர் ரங்கையா. கல்கத்தாவில் இருக்கும் கங்காவின் நண்பன். அவன் உங்களுக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பி இருக்கிறான். அதைக் கொடுத்துவிட்டுப் போகத்தான் வந்தேன்," என்றான் ஆங்கிலத்தில்.

"உள்ளே வா அப்பா."

"என்னடாப்பா, ராமசாமி? என்ன சொல்றான்?"

"கங்கா லெட்டர் குடுத்தனுப்பி இருக்கான், இந்தப் பிள்ளையாண்டான் கிட்ட. இவனுக்குக் காப்பி குடுத்தியோ?"

"இதோ, ஒரு நிமிஷத்துல போட்டு எடுத்துண்டு வறேன். கங்கா பத்திரமா இருக்கானாமா?"

எல்லோரும் உட்கார்ந்ததும், "கங்காவின் கடிதம்," என்று தன் கைப்பையினின்று ஓர் உறையை எடுத்து ராமசாமியிடம் கொடுத்தான்.

ராமசாமி அந்த உறையை ஆவலுடன் கிழிக்க முற்பட்ட கணத்தில் மூன்றாவது வீட்டுச் செல்லம்மா ஓட்டமும் நடையுமாக வந்து, "உங்களுக்கு ஃபோன் வந்திருக்கு. ராஜாராமய்யர் கூப்பிடறார். வந்து பேசறேளா?" என்றாள்.

உறையை அப்படியே அலமாரியில் வைத்து மூடிவிட்டு, "கொஞ்சம் இவனோடு பேசிக் கொண்டிருங்கள் நாயுடு காரு. நான் போய் என்னன்னு கேட்டுட்டு வந்துடறேன்," என்ற ராமசாமி விரைந்து எழுந்து செல்லம்மா வீடு நோக்கி நடந்தார்.

"கொஞ்சம் நீங்க உடனே இங்க வாங்கோ. ஒரு முக்கியமான விஷயம்...."

ராஜாராமனின் குரலில் தொனித்த துயரமும் தொய்வும் ராமசாமியை என்னவோ செய்தன. ஏதோ விபரீதம் என்று மட்டும் நிச்சயமாய்ப் புரிந்தது.

"இதோ வந்துட்டேன், சார். இப்பவே கிளம்பி வந்துடறேன்."

"அப்பா, ரங்கா, நீ கொஞ்சம் எனக்காக இங்கேயே இரு. எங்கள் வீட்டில் சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டும். உன்னிடம் நிறையப் பேச வேண்டும் நான். இவர் மிஸ்டர் மணவாள நாயுடு. என்னுடைய நண்பர். நாயுடுகாரு, இவரோடு பேசிக் கொண்டிருங்கள். இதோ வந்துவிட்டேன். மிஸ்டர் ராஜாராமன் அவசரமாய் என்னை வரச் சொல்லுகிறார். எதற்கென்று தெரியவில்லை. நான் வரட்டுமா?" விசாலத்திடமும் சொல்லிவிட்டு ராமசாமி விரைவாகக் கிளம்பிப் போனார்.

56

ராஜாராமன் கண்கள் கலங்கியிருந்தன. "ராமசாமி, காலார நடந்து பக்கத்துல இருக்கிற பார்க்குக்குப் போயிடலாம்," என்றார்.

பல்வேறு கேள்விகளும் சந்தேகங்களும் மனத்தில் எழுந்தாலும் அப்போதைக்குப் பொறுமை காட்டித்தானாக வேண்டும் என்று உணர்ந்த ராமசாமி, "சரி கிளம்புங்கோ" என்றார்.

ராஜாராமன் வீட்டுச் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டு வர, இருவரும் கிளம்பினர்.

கால்மணி நேர நடைக்குப் பிறகு பெரிய பூங்கா வந்தது. இருவரும் அதனுள் சென்று ஓர் ஓரத்துப் பெஞ்சியின் மீது உட்கார்ந்தார்கள்.

"சொல்லுங்கோ ராஜாராமன்! உங்க மனசுல என்ன கவலை?" என்றார் ராமசாமி.

"ஒரு கவலையா ரெண்டு கவலையா, ராமசாமி? முதல்ல பிள்ளையைப் பறிகுடுத்தேன். அப்புறம் பொண்டாட்டிக்குப் பைத்தியம் பிடிச்சு அவளையும் பறி குடுத்த நெலைமைதான். அப்புறம் சின்னப் பொண் கல்யாணம் ஆகாமயே குழந்தை பெத்து ஊராரோட ஏச்சுக்கும் பேச்சுக்கும் எங்க குடும்பமே ஆளாச்சு. அப்புறம் என்னோட மூத்த பொண்ணு. கலியாணமே பண்ணிக்க மாட்டேன்னுட்டா. உங்க மேல அவளுக்குத் தனி அபிமானம் இருந்ததைக் கவனிச்சுட்டுத்தான் அவ விஷயமா ஒரு நாள் உங்களை அப்ரோச் பண்ணினேன்....

"எனக்கு வாழ்க்கையில நேர்ந்த இந்தத் துயரங்கள்ளாம் போறாதுன்னு இப்ப புதுசா... இப்ப புதுசா இன்னொரு கஷ்டம் வந்திருக்கு. எம் பொண்ணுகளுக்குத் தெரியாம எப்படித்தான் நான் அதை மறைச்சு வெக்கப் போறேனா?"

"சொல்லுங்கோ, சார். என்ன கஷ்டம்?"

"இன்னிக்கு மத்தியானத் தபால்ல எனக்கு ஒரு லெட்டர் வந்தது...." மேலே தொடர முடியாமல் அவர் கண்ணீர் விடலானார்.

ராமசாமி அவர் கைகளைப் பிடித்துக் கொண்டார். "உங்க பேத்தியைப் பத்தின ஏதாவது... மோசமான செய்தியா, சார்?"

ராமசாமி அக்கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்தார்.

'அன்புள்ள நண்பரே,

நமஸ்கார். வெள்ளையரை எதிர்த்துப் போராடும் பணியில் உள்ள ரிபப்ளிகன் ஆர்மியின் தளபதிகளுள் ஒருவன் இதைத் தங்களுக்கு எழுதுகிறேன். தங்கள் பேத்தி பவித்ரா, அண்மையில் எங்கள் பெண் படையினருடன் சேர்ந்து, வெள்ளைக்காரர்களுடன் நிகழ்த்திய சிறு போரின் போது உயிரிழந்து வீர சொர்க்கம் அடைந்த செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எங்கள் படையில் அவள் சேர்ந்த இச் சிறு காலத்துள் இடைவிடாத, அக்கறையான பயிற்சியின் விளைவாகக் குறி பார்த்துச் சுடுவதில் மிகுந்த கெட்டிக்காரியாகவும் எங்களிடம் பல நாள் பயிற்சி பெற்ற பெண்களுக்கு ஈடான சுறுசுறுப்புக் கொண்டவளாகவும் செயல்பட்டதையறிந்து மிகுந்த தேசபக்தியுடைய தாங்கள் பெரு

மைப்படுவீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். தங்கள் குழந்தைகளை இவ்வாறு தேசப் பணியில் அர்ப்பணிக்கும் தங்களைப் போன்றவர்களைப் பாரதமாதா என்றும் வாழ்த்துவாள். இந்தியா சுதந்திரம் அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதைப் பவித்ரா போன்ற பெண்கள் எங்களுக்கு உணர்த்தி வருகின்றனர். இப் பேரிழப்பைத் தாங்கும் சக்தியைத் தாங்கள் பெற நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

....

கையெழுத்திட்டிருந்தவரின் பெயர் படிக்க முடியாதபடி கிறுக்கலாக இருந்தது. ராமசாமி இரு முறை அதைப் படித்துவிட்டுக் கண்கலங்கியபடி அவரிடம் திருப்பிக் கொடுத்தார்.

“அவ - என்னோட ஒய்ப் பாமா - பாக்கியசாலி, மிஸ்டர் ராமசாமி. அவ பாட்டுக்கு எதுவுமே உணரமுடியாத நெலைமையில பைத்தியக்கார ஆஸ்பத்திரியில உக்காந்துண்டிருக்கா. நாந்தான்.....” - ராஜாராமன் தலையைக் குனிந்து கொண்டு விம்மினார். ராமசாமி ஆறுதலாக அவர் முதுகைத் தடவிக் கொடுத்தார்.

சற்று நேரங்கழித்து,

“உங்களுக்கு இன்னொரு விஷயம் தெரியுமா?” என்று கேட்ட ராஜாராமன், கங்கா-பவித்ரா பற்றிய காதல் விவகாரத்தை முழுவதுமாய் அவருக்குச் சொன்னார். ராமசாமி அதிர்ந்து போனார். தமக்கை விசாலம் ஊகித்தபடியே ஆகி இருந்ததை எண்ணி வியப்பும் அடைந்தார். சில நொடிகளுக்கு அவருக்குப் பேச்சே வராது போயிற்று.

கங்கா கடிதம் கொடுத்தனுப்பிய இளைஞனை வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டுத் தாம் வந்ததை அதன் பின்னர் அவர் ராஜாராமனிடம் தெரிவித்தார்.

“அப்ப நாம கௌம்பலாம். இந்த லெட்டரைக் கிழிச்சுப் போட்டுடட்டுமா?”

“வேண்டாம், சார். கிழிக்காதீங்கோ. எங்கிட்ட குடுங்கோ. நான் பத்திரமா வெச்சிருக்கேன். உங்களுக்கு எப்ப தேவையோ அப்ப எடுத்துக்கலாம் நீங்க.”

ராஜாராமன் கொடுத்த கடிதத்தை வாங்கித் தம் சட்டைப்பையில் ராமசாமி பத்திரப்படுத்திக் கொண்டார். பிறகு அவரை அவரது வீட்டில் கொண்டுபோய் விட்ட பின் தம் வீடு திரும்பினார்.

“என்னடா, ராமசாமி? என்ன விஷயம்?” என்று அவர் வந்ததும் வராததுமாய் விசாலம் கவலையும் ஆவலுமாய் வினவினாள்.



“நேத்து உங்க கட்சிக்காரர் மாட்டிக்கிட்டாராமே, எப்படி?”

“கடைக்கு ஆஸிட் வாங்கப் போனவரைக் கடைக்காரர் எந்த ஆஸிட் வேணும்னு கேட்ட போது, ‘முகத்துல ஊத்தற ஆஸிட்’னு சொல்லி மாட்டிக்கிட்டார்!”

— ராதா வாசுதேவன்

“அவருக்கு உடம்பு சரி இல்லேக்கா. கொஞ்சம் அதைரியப் படறார். அதான் போய்த் தைரியம் சொல்லிட்டு வந்தேன்,” என்ற ராமசாமி, ராஜாராமனின் குடும்பம் பற்றி ரங்கையாவுக்குச் சொன்னார்.

மணவாள நாயுடு, “சரி, நீர் கங்காவோட லெட்டரைப் படியும். நான் வரட்டுமா?” என்று ஊஞ்சலிலிருந்து இறங்கினார்.

“இரும் ஓய்! என்ன அவசரம்? ரங்கையாவோட சேர்ந்து நம்மாத்துல சாப்பிடும் இன்னிக்கு” என்ற ராமசாமி, பிறகு அவளுடன் கங்காவின் கடிதத்தைப் படித்தார்.

‘அன்புள்ள அப்பா அவர்களுக்கு,

கங்கா அநேக நமஸ்காரம், க்ஷேமம். க்ஷேமத்துக்கு எழுதவும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நான் விலாசமற்றவன். இக்கடிதம் கொண்டு வரும் ரங்கையாவும் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவன்தான். நாங்கள் இரகசியக் காப்புப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டவர்கள். எனவே எங்கள் இயக்கத்தின் பெயர், தலைவர் பெயர் போன்றவற்றை அவனிடம் கேட்டு அவனைத் தொல்லைப்படுத்த வேண்டாம். நான் பத்திரமாக இருக்கிறேன். சுதந்திர உணர்வைப் பொறுத்த மட்டில் வங்காளத்துக்கு இருக்கிற துடிப்பும் ஆர்வமும் வேறு எந்த ராஜதானிக்கும் இல்லை என்று தோன்றுகிறது. என்னைப் பற்றிக் கவலைப்படப் போகிறீர்களே என்பதற்காகத்தான் கடிதம் அனுப்புகிறேன். ரங்கையா எங்கள் இயக்கத்துக்கு மிக மிகப் புதியவன். அதனால் எங்களுக்குள் இன்னும் பழக்கமே ஆகவில்லை. நான் அவனைச் சந்திக்க வாய்த்ததே ஒரு வாரத்துக்கு முன்பு தான். பத்திரிகையில் தன் அம்மாவின் மரணம் பற்றிய விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அவன் கிளம்பி இருக்கிறான். எனவே அவனை உடனடியாக அனுப்பி விடுங்கள். தங்கச் சொல்லி வற்புறுத்த வேண்டாம். திருச்சியில் அம்மாவின் காரி



"என்னங்க! பையன் ஸ்கூல்ல இருந்து வந்ததிலிருந்து, சத்தமே வெளிய வராம வாயத் தெறந்து தெறந்து மூடுறான்!"

''பயப்படாதே! பையனை ''சேர்ந்திசை'' பாட ஸ்கூல்ல செலக்ட் பண்ணி பயிற்சி தராங்களாம் அதுதான்!''

— ந. பிலிப் செல்வமுத்து

யங்கள் முடிந்ததும் திரும்புவான். ஆனால் நாங்கள் சந்திக்க வாய்க்குமா வாய்க்காதா என்பதொன்றும் தெரியாது. நாங்கள் அவ்வப்போது சிதறிப் பிரிந்து கொண்டே இருப்பவர்கள். எனவே முறுக்கு, சீடை என்று கொடுத்தனுப்ப வேண்டாமென்று அத்தையிடம் சொல்லுங்கள். என் அன்பான அத்தைக்கு நமஸ்காரம். ரமணிக்கு என் ஆசீர்வாதம். மிஸ்டர் ராஜாராமன் வீட்டார் எல்லாரையும் கேட்டதாய்ச் சொல்லவும்.

உங்கள் அன்புள்ள, கங்காதரன்.'

கடிதத்தின் சாரத்தை அறிந்து கொண்டதும் விசாலம் அழுத அழுகையில் ஆனந்தக் கண்ணீரும் துயரக் கண்ணீரும் கலந்திருந்தது.

வெளியே போயிருந்த ரமணி அப்போது வீட்டுக்குத் திரும்பினான். ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்விக்கப்பட்டபின் ரமணி ரங்கையாவின் புரட்சி இயக்கம் பற்றி யறிய ஆசைப்பட்டான். அதன் பிறகு ரமணியின் கால் எவ்வாறு நொண்டியானது எனும் கதை ரங்கையாவுக்குச் சொல்லப்பட்டதும், ரங்கையா, "அடடா! அப்படியானால் பெஜவாடா ஸ்டேஷன் மாஸ்டரிடம் தங்கிப் போனது நீதானா? நான் அப்போது குடிவாடாவில் இருந்தேன். ஸ்டேஷன் மாஸ்டர் சத்தையா என் சொந்த அண்ணாதான்," என்றான் வியப்பாக. எல்லாருக்கும் ஒரு கதையின் சுவையான திருப்பத்தைக் கேட்டது போல் இருந்தது.

சாப்பாடு ஆனதும் ரங்கையா புறப்பட்டுப் போனான்.

அவன் போன பிறகு மணவாள நாயுடுவும் சற்று நேரத்தில் புறப்பட்டு விட, ராமசாமி தமது அறைக்குப் போய் அலமாரியில் ஒரு புத்தகத்துள் பவித்ரா பற்றிய கடிதத்தைத் தாற்காலிகமாக மறைத்து வைத்தார். அந்தப் பெண் இறந்தது ஒரு புறம் அவரை வேதனைப்படுத்த, அவளைக் கங்கா மணக்க ஆசைப்பட்டுப் பின் மனச்சாட்சியின் உறுத்தலால் அந்த எண்ணத்துக்கு விடை கொடுத்து அனுப்பினான் எனும் உண்மை மறுபுறம் வாட்டியது.

'என்ன இருந்தாலும் ராஜாராமனின் குடும்பத்துக்கு இத்தனை கஷ்டங்கள் வரக்கூடாது. கடவுளுக்குக் கண் இல்லைதான். இங்கு மட்டும் என்ன வாழ்ந்தது? குஞ்சம்மா முதலில் போனாள். கங்கா திரும்பிவருவான் என்ற நிச்சயம் இல்லை. ரமணி ஓடிப் போய்க் காலை உடைத்துக் கொண்டு வந்தான். விதி யாரைத்தான் விட்டது?'

சிரிப்பும் கும்மாளமுமாய் வீடு திரும்பிய அஞ்சனாவும் அமராவதியும் ராஜாராமனின் சோர்ந்த முகத்தைப் பார்த்து வியப்பும் திகிலும் உற்றனர். அவர்கள் திரும்பத் திரும்பக் கேட்ட கேள்விகள் எல்லாவற்றுக்கும் அவர் அளித்த பதில், 'மனசு எப்பவும் ஒரே மாதிரியே இருக்குமாம்மா?' என்பதுதான்.

சாப்பாட்டின் போது பாயசம் பரிமாறப்பட்டதும், "இன்னிக்கு என்னம்மா பாயசம்?" என்று கேட்ட அவரிடம், "நீங்களா நெனப்பு வெச்சிருக்கேளான்னு பாத்தோம்ப்பா. எப்படிப்பா மறந்தேள்? இன்னிக்கு நம்ம பவித்ராவுக்குப் பொறந்த நாளில்லையா?" என்று அமராவதி சிரிக்க, அவர் அப்படியே உடைந்து அழத் தொடங்கினார்.

"என்னப்பா?", "எதுக்குப்பா இப்ப அழறேள்?" என்று இரு பெண்களும் மாற்றி மாற்றிக் கேட்டதும், "இன்னிக்கு எழுந்ததுலேர்ந்தே மனசு சரியில்லேம்மா. பவித்ரா ஞாபகமாவே இருக்கு. கொழந்தை எப்படி இருக்காளோ, என்ன பண்றாளோ?" என்று கண்ணீருடன் அரற்றிய அவருக்குப் பேத்திக்குத் துணையாகப் போன தங்கத்தின் ஞாபகம் வந்தது. 'என்ன சுயநலக்காரன் நான். தங்கத்தைப் பற்றி மறந்தே போனேனே,' என்று தமக்குள் வெட்கமடைந்தார்.

"எனக்குக் கூட பவித்ராவைப் பத்தின் கெட்ட சொப்பனம் வந்ததுப்பா. ஒரு வேளை ஏதானும் கஷ்டத்துல இருக்காளோ?" என்றாள் அமராவதி.

'சேதியைச் சொல்லி விடலாமா?' என்று கணம் போல் எழுந்த எண்ணத்தை வெகு பாடுபட்டு ராஜாராமன் அடக்கிக் கொண்டார்.

(தொடரும்)

SATHIYA GOLDEN FARMS LIMITED

No. 26, School Road, Perambur, Madras - 600 011.
Regd No. 18-25L88 of 1994 phone : 5371858

யூனிட்	முதலீட்டு தொகை	முதலாண்டு பெறும் தொகை	2ம் ஆண்டு பெறும் தொகை	3ம் ஆண்டு பெறும் தொகை	4ம் ஆண்டு பெறும் தொகை	5ம் ஆண்டு பெறும் தொகை	மரங்களின் எண்ணிக்கை	கிடைக்கும் கன அடி	20 வருடங்களில் பெறும் தோராய தொகை
A	1000	200	200	200	400	1000	1	30	65,000
B	2000	400	400	400	800	2000	3	90	1,95,000
C	3000	600	600	600	1200	3000	5	150	3,25,000
D	4000	800	800	800	1600	4000	7	210	4,55,000
E	5000	1000	1000	1000	2000	5000	8	240	5,20,000


- உங்கள் வருங்கால வாரிசுகளின் வாழ்வு வளம் பெறச் செய்ய இதோ உங்களுக்கு ஓர் அறிய சந்தர்ப்பம்.
- ஆம் எங்கள் டீக் நிறுவனத்தில் முதலீடு செய்தால், தேக்கு மரம் வளர்வது போல் உங்கள் முதலீட்டுத் தொகையும் வளர்ந்து உங்கள் வாரிசுகளின் வாழ்வும் வளமுற வளர துணை புரிகிறது.
- பலதேக்கு நிறுவனங்கள் தோன்றி பலவிதமான வாக்குறிதிகளை அளித்தாலும், நாங்கள் நீங்கள் செய்யும் முதலீட்டுத் தொகையை 5 வருடங்களில் இரு மடங்காக அளிப்பதுடன், 20 ஆண்டுகளின் முடிவில் குறிப்பிட்ட யூனிட்டுகளுக்கு தகுந்தவாறு கன அடி மரமோ அல்லது அதன் மதிப்புக்குத் தகுந்த பணத்தையோ உறுதியுடன் அளிக்கிறோம்.
- எங்கள் பண்ணையில் விவசாய வல்லுனர்களால் நவீன விஞ்ஞான முறைப்படி மரங்கள் வளர்க்கப் படுகிறது.
- முழுத் தொகையை கட்டி முடித்த நாட்களிலிருந்து 20 ஆண்டுகள் கணக்கிடப்படுகிறது.
- இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் விவசாயத்தின் மூலம் கிடைப்பதால் வருமான வரி விலக்கும் உண்டு.
- தேக்கு மரத்தை நிறுவனமே 20 ஆண்டுகள் சொந்த பொருப்பில் வளர செய்து உங்கள் வசம் ஒப்படைக்கிறது.
- எதிர் காலத்தில் உங்கள் குழந்தைகள் உங்களை நன்றியோடு நினைக்க இன்றே அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கான ஏற்பாடுகளுக்கு வழிசெய்ய இன்றே எங்கள் நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளை வளமோடு வாழ வழி செய்யுங்கள்.

‘கொஞ்சம் ஏமாந்தால் இந்த அரசியல்வாதிகள், நம் மக்கள் எல்லோரையும் காந்தியாக்கி விடுவார்கள். ஆமாம்; இடுப்புக்கு வெறும் துண்டையும் கைக்கு ஒரு கோலையும் கொடுத்து, நம் மக்கள் எல்லோரையும் வீதிக்குக் கொண்டு வந்துவிடுவார்கள்!’

இப்படிச் சொல்வது வேறு யாருமல்ல; கர்நாடகத்தின் முன்னாள் முதல்வர் எம். வீரப்பமொய்லி. ‘போராட்டம்’ (கொட்ட) என்கிற தமது நாவலில்தான் இப்படிச் சொல்கிறார் அவர்.

கர்நாடகத்தில் மிகவும் பின்தங்கியிருக்கும் தேன்குருபர்கள் மற்றும் குறவர்களின் வாழ்க்கை அவலங்களைச் சினிமா போல் காட்டுகிறது நாவல். கூடவே, பின்தங்கியவர்களின் நலனுக்காகவே பாடுபட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்கிற நமது அரசியல்வாதிகளின் பொய் முகங்களையும் துணிச்சலாக அடையாளங் காட்டுகிறது!

மிகவும் பின்தங்கிய தேன்குருபர் இனத்தைச் சேர்ந்த மல்லய்யா, ஓர் அதிசயம் போல் ஐ.எஃப்.எஸ். பாஸ் செய்து, காட்டிலாகா அதிகாரியாகிறான். பதவியேற்ற



வீரப்ப மொய்லியின் ‘போராட்டம்!’

வுடனேயே, காடுகளிலிருந்து சந்தன மரங்களைக் கடத்தும் லாரி ஒன்றைப் பிடித்து கேஸ் எழுதுகிறான். அது, எம்.எல்.ஏ. அம்பரப்பாவின் லாரி. சும்மா இருப்பாரா அவர்? உடனடியாக மல்லய்யா சஸ்பெண்ட் செய்யப்படுகிறான்.

ஆயினும் அவன் அதுபற்றிக் கவலைப்படவில்லை. பின்தங்கிய மக்களின் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட அவன், சம்பந்தப்பட்ட மக்களுடனேயே சென்று தங்கி உழைக்கிறான். அவனுக்கு, சதாசிவ என்கிற பத்திரிகை நண்பனும் தீரஜ் என்கிற வக்கீல் நண்பனும் உறுதுணையாக இருக்கிறார்கள்.

பின்தங்கிய மக்களை வெறும் அடிமைகள் போல் நடத்தியே வோட்டு வேட்டையாடி வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் எம்.எல்.ஏ. அம்பரப்பா தொகுதிக்குள்தான் மக்களை விழிப்படையச் செய்து கொண்டிருக்கிறான் மல்லய்யா. மக்கள் அறிவு பெறுவதைப் பொறுப்பாரா எம்.எல்.ஏ.? எப்படியாவது மக்களின் கவனத்தை மல்லய்யாவிடமிருந்து திருப்பி, தம் பக்கம் கொண்டுவர நினைக்கிறார். தீவைப்பு, கொலை என்று தமது எல்லாவிதமான ‘அரசியல்’ ஆயுதங்களையும் பிரயோகிக்கிறார்... இவற்றையெல்லாம் எதிர்த்து நின்று போராடி, இறுதியில் எப்படி மல்லய்யா வெற்றி பெறுகிறான் என்பதுதான் கதை.

மல்லய்யாவின் நியாயமான போராட்டத்திற்கு எம்.எல்.ஏ. முதல் முதலமைச்சர் வரை முட்டுக்கட்டைகள் போடுகிறபோது, மல்லய்யாவைச் சந்திக்கும் எதிர்க் கட்சித் தலைவர் என்ன செய்கிறார்? “நீங்கள் பேசாமல் எங்கள் கட்சியில் சேர்ந்து விடுங்கள்; ஆளுங் கட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தலாம்!” என்று மல்லய்யாவின் செல்வாக்கைத் தமது கட்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறாரே தவிர, அந்தப் பின்



காதல் சிரிப்பு! பிடியுங்கள் பரிசு!

பவ ஆண்டு முடிந்து யுவ பிறக்கப் போகிறது. யுவ என்றதுமே இளமை எட்டிப் பார்க்கும்; இளமைக் கால காதல் நினைவுகள் மலரும்! இன்றைய வாலிபப் பருவத்தினர் பற்றியோ கேட்கவே வேண்டாம்! நீங்கள் காதலித்த போது அல்லது இன்று காதலித்துக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட நகைச்சுவை அனுபவம் ஒன்றேனும் நிச்சயம் இருக்கும். "காதல் சிரிப்பு" என்று தலைப்புத் தந்து, அதை ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள். கல்கி புத்தாண்டு சிறப்பிதழை ஒரு ஜாலி சிறப்பிதழாக உருமாற்றுங்கள்!

பிரசுரமாகும் ஒவ்வொரு ஹஹ்ஹஹ்ஹா சம்பவத்துக்கும் ரூ.100/- பரிசு.

முடிவு தேதி : **22.3.95**

அடுத்த இதழில்...

- **ராக்கெட்டில் பறக்கும் இந்தியப் பெண்!**

தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்காக அவர் தமது கட்சியின் செல்வாக்கைப் பயன் படுத்த மறுக்கிறார்!


இதற்கிடையில் காதலையும் காட்டத் தவறவில்லை, மொய்லி. கல்லூரிக் காலங் களில் மல்லய்யாவின் புத்திசாலித்தனத்தைக் கண்டு காதலிக்க ஆரம்பிக்கிறாள் சக மாணவி சசிகலா. அவள் பெற்றோரும் அதற்குத் தடை சொல்லவில்லை. அவன் தனது ஜாதியைச் சொல்லியாக வேண்டிய ஒரு கட்டாயத்தில், "எனது பெயர் மல்லய்யா என்றிருந்தாலும் நான் தேன்குருபர் ஜாதி யைச் சேர்ந்தவன்தான்!" என்று கூறுகிற போது, அவன் தனது ஜாதிக்காரனாகத்தான் இருப்பான் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனதை, ரொம்பவும் நாசூக்காக வெளிக் காட்டி, வழியனுப்பி வைக்கிறார் சசிகலா வின் தந்தை. சசிகலாவும் அழுது அழுது முகம் வீங்கிப் போகிறாள். ஆனாலும் அது தனது காதலுக்குப் பெற்றோர் தடைபோடு கிறார்களே என்பதற்கான அழுகை அல்ல; அவன் தன் ஜாதிக்காரனாக இல்லாமல் போய்விட்டானே என்கிற அழுகை!


பீஞ்சலு - அவன் எந்த மக்களுக்காகப் போராடுகிறானோ அந்த மக்களுள் ஒருத்தி. "உண்மையான அன்பு பக்குவம் அடைவது, பொறுமையிலும் காத்திருப்பதிலும்தான்!" என்று மல்லய்யா சொன்னதற்கேற்ப, அவனுக்காகவே காத்துக் கொண்டிருக்கும் பெண்...


ஆகமொத்தம் ஒரு நல்ல நாவலைப் படித்த திருப்தி. இல்லையென்றால் தமிழ் மொழி பெயர்ப்புக்கான மோசமான அட்டைப்படத்தையும் பக்கத்துக்குப் பக்கம் மலிந்து கிடக்கும் அச்சுப் பிழைகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, நாவலை ஒரே மூச்சில் படிக்கத் தோன்றுமா!


- பிரின்ஸ்

போராட்டம் (கன்னட நாவல்),
ஆசிரியர் : எம். வீரப்பமொய்லி.
தமிழில் : தண். கி. வேங்கடாசலம்
வெளியீடு : அல்லயன்ஸ் கம்பெனி,
244, ராமகிருஷ்ண மடம் சாலை,
சென்னை - 600 004.
விலை ரூ. 90/-









மேக்சிமா-குரூப் நிறுவனங்கள்

MAXIMA

மேக்சிமா பெனிபிட் பண்ட் லிமிடெட்
மேக்சிமா கிரெடிட் லிங்க்ஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா சிட்ஸ் மெட்ராஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி

உங்கள் முதலீட்டிற்கு

25%

வட்டி+
1% ஊக்கத்தொகை
வழங்குகிறது

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக முதலீடு செய்யும் பொழுதே வழங்கப்படும்.

உங்கள் வருங்காலக் கனவுகளை நனவாக்கும் வளமான சேமிப்புத் திட்டங்கள்.

பிக்சட் டெபாசிட்	ஒவ்வொரு மாதம், காலாண்டு, அரையாண்டுகளில் வட்டி வழங்கப்படும்.	குறைந்தபட்ச முதலீடு ரூ.5,000/-
குமுலேட்டிவ் டெபாசிட்	45.60% P.A அதிக பட்ச வட்டியாக பெறுவீர்	ரூ.5,000/-
கோல்டன் டெபாசிட்	முதலீடு 3 வருடங்களில் இருமடங்காகும்	ரூ. 7,500/-

மேக்சிமா - உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு அளிக்கக் கூடியது.

காலம்	வட்டி
12 மாதங்கள்	26.80 %
24 மாதங்கள்	30.40 %
36 மாதங்கள்	32.66 %
48 மாதங்கள்	39.67 %
60 மாதங்கள்	45.60 %

மேலும் விவரங்களுக்கு
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி
பதிவு அலுவலகம் : 1, வேதாந்த தேசிகர் தெரு, லஸ் பஜார் அருகில், மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : 4941849, Fax : 044-4347655. தந்தி : MAXFIN
தலைமை அலுவலகம் : 146, எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 600 018. தொலைபேசி : 456950 / 458549 / 452559
கார்ப்பரேட் அலுவலகம் : 'ஜெயம் பில்டிங்' AA-147, 3வது அவின்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040 தொலைபேசி : 6280468

Aparna

கிளை அலுவலகங்கள் : -

K.R. பில்டிங் 124-A, லேட்டிஸ்பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை - 600 020 தொ.பே. 415511

'ராஜ ராஜேஸ்வரி டவர்' 567-568, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர்-641 018. தொ.பே. 231938

மேக்சிமா - அதிகபட்ச நம்பிக்கைக்குரியது.


மொரார்ஜி

"ஐயகோ, பாரத தேசமே!" என்று நாம் எல்லோருமே ஒரு குரல் அழுது கொண்டிருக்கும் போது, நம்பிக்கையுடன் பேசும் ஓர் ஆன்மாவும் இங்கே இருக்கிறது என்றால் அது செஞ்சுரி போட்ட மொரார்ஜி தேசாய் தான்.

"இந்தியாவின் எதிர்காலம் ஒளிமயமானது; இந்தியாவின் பலத்தை உலகம் உணரும்" என்று ஆசீர்வாதம் பண்ணுகிறார்.

ஆசி கூற தகுதி உண்டு மொரார்ஜி தேசாய்க்கு. அதற்கு வயது மட்டும் காரணமல்ல; வாழ்க்கையும்தான். ஓர் உதாரணம் :

1957-ல் பம்பாய் மாகாண அரசின் வருவாய்த் துறை அமைச்சராக இருந்த போது தியாகிகள் பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்தினார். ஏராளமானவர் இந்தத் திட்டத்தால் பயன்பெற்றபோதிலும் ஒருவர் மட்டும் மனு செய்யவில்லை. அது மொரார்ஜிதேசாய்தான்! தியாகத்துக்குக் கூலி பெற்றால் அது தியாகமாகாது என்றும் தாம் அமைச்சராக இருந்து கொணர்ந்த ஒரு சலுகையால் தாமே பயனடையக் கூடாது என்றும் அவர் உறுதியாக இருந்தார்.







தெரு விளக்கடியில் படித்து, வில்சன் கல்லூரியில் பட்டப் படிப்பு முடித்த மொரார்ஜியின் உத்யோக வாழ்க்கை அகமதாபாத் துணை கலெக்டராகத்தான் ஆரம்பமாகியது. 1930ல் பிரிட்டிஷ் அரசில் பணியாற்றுவது இந்தியனுக்கு இழுக்கு என்று கருதி ராஜினாமா செய்து விட்டு, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். பலமுறை சிறைவாசம் அனுபவித்தார்.

சூரத் மாவட்டம் பதேலி கிராமத்தில் ஒரு பள்ளி ஆசிரியரின் மூத்த புதல்வனாகப் பிறந்த மொரார்ஜிக்கு உடன்பிறந்தவர்கள் ஏழு பேர்! திருமணமான போது மொ. தேசாயின் வயது 15; மனைவி கஜ்ராபென் வயது 11. அந்த நாளில் இது சகஜம் என்றாலும் தந்தை தற்கொலை செய்து கொண்ட மூன்றாம் நாளே மொரார்ஜியின் திருமணம் நடந்தது ஆச்சர்யம்தான்!

நேரு அமைச்சரவையில் நிதி அமைச்சரான மொ. தேசாய், கடுமையான வரி விதிப்பு, கட்டாயச் சேமிப்பு போன்றவற்றைக் கையாண்டு காரசார விமர்சனங்களுக்கு உள்ளானார்.

இந்திரா காந்தி அமைச்சரவையில் துணைப் பிரதமராக இருந்து, வங்கிகளை அரசுடைமையாக்கும் விஷயத்தில் கருத்து மாறுபாடு காரணமாகப் பதவி இழந்தார்.

எமெர்ஜென்சிக்குப் பிறகு ஜனதா ஆட்சியில் பிரதமராகச் சில காலம் விளங்கிய மொ. தேசாய் நூறு வயதிலும் ஆரோக்கியமாகத் திகழ்கிறார் என்றால் காரணம் கட்டுப்பாடான வாழ்க்கை. அளவான உணவு, தேவையான தேகப் பயிற்சி; எளிமை, அடக்கம் முதலியன. இன்றும் நாளிதழ்கள் எல்லாவற்றையும் ஒரு நோட்டம் விட்டு முக்கிய செய்திகளை அலசுகிறார்.

மொரார்ஜி, மதுவிலக்கில் தீவிரப் பற்று உடையவர். "இந்தியா முழுதும் அமல்படுத்தப்பட வேண்டும்" என்று இன்றும் கருத்துத் தெரிவிக்கிறார். இவர் தங்கையிடம் ஒருவன் குடித்து விட்டுத் தகாத முறையில் நடந்து கொண்ட ஒரு சம்பவம் ஏற்படுத்திய ரணம், பற்பல ஆண்டுகள் சென்றும் ஆறவேயில்லை!

தொகுப்பு : **மௌலி**

32 நினைவலைகள்

LIFE IS LIKE A CAMERA.
FACE IT WITH A SMILE.

காமிராவில் ஃபோட்டோ எடுக்கும் போது மட்டும்தான் புன்னகை புரிய வேண்டுமென்பதில்லை. வாழ்க்கையே ஒரு காமிராதான்.

Face it with a smile.

இதுதான் அவளது குணசித்திரம். அவள் பெயர் சந்திரா.

உலகத்தில் வாழத் தெரிந்தவர்கள் இரண்டு வகை. தனது புத்திசாலித்தனத்தி னால் வாழ்பவர்கள். மற்றவர்களின் முட் டாள்தனத்தினால் வாழ்பவர்கள்.

இரண்டாவது வகையைச் சேர்ந்தவள் சந்திரா.

ஒரு கார் வந்து கொண்டிருக்கிறது. தெரு விலே நடந்து வந்து கொண்டிருக்கும் சந்திரா, கை கட்டை விரலைத் தூக்கிக் காட்டி காரில் lift கேட்கிறாள். டிரைவர் ஸ்தானத்தில் இருக் கும் அந்த நடுத்தர வயதுக்காரன் அவளை மேலும் கீழும் பார்க்கிறான். இவள் அதற்குப் பதிலாக ஒரு புன்சிரிப்பை அள்ளி வீச அவ னுக்கு வாயெல்லாம் பல்.

சந்திரா : பார்த்தது போதும் ஸார்! நீங்க எந்தப் பக்கம் போறீங்க?

அவன் : நீங்க எங்கே போகணும் சொல் லுங்க. கொண்டு விட்டுட்டுப் போறேன்.

('ஜஸ்ட் எ மினிட்' என்று கார்க்காரனிடம் சொல்லி விட்டு, உடன் வந்து கொண்டிருந்த தோழியின் பக்கம் விரைந்து வருகிறாள்.)

சந்திரா : வா, கவிதா! கார்லேயே ஆபீஸ் போயிடலாம்.

கவிதா : யாருடீ அவரு?

சந்திரா : எனக்குத் தெரியாது.

கவிதா : பின்னே உன்னைப் பார்த்து சிரிக்கிறாரே!

சந்திரா : பிணம் கூட பொம்பிளையைப் பாத்தா சிரிக்கும், ஷேப் நல்லாயிருந்தா!

(கவிதா காரில் வருவதற்கு மறுக்க, சந்திரா மட்டும் காரில் ஏறிப் போகிறாள்.)

அடுத்த காட்சி :

(சந்திராவும் கவிதாவும் லஞ்ச் நேரத்தில் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.)

கவிதா : ஏண்டி சந்திரா... முன்பின் தெரி யாத ஒருத்தனோட கார்ல வர்றியே... இது அசட்டு தைரியம் இல்லியா?

சந்திரா : நோ! இதெல்லாம்தான் சாமர்த் தியம். எனக்கு ஒரு புன்சிரிப்பு செலவு. அவ னுக்கு அரை லிட்டர் பெட்ரோல் செலவு. 'சர்'ருன்னு ஆபீசுக்கு வந்துட்டேன், ஃபடா ஃபட்! ஆனா நீ, காசையும் குடுத்து பஸ்ஸிலே ஏறியிருப்பே... 200 கண்கள் உன்னை அப் படியே விழுங்கியிருக்கும். 100 கைகள் அங்கே இங்கே உன் மேலே இடிச்சிருக்கும். படக் கூடாத இடத்துலே பல தோள்கள் உரசியிருக் கும். இதுலே எது பெட்டர்? Just a smile takes me many miles. ஃபடாஃபட்!

உங்களுக்குப் புரிந்திருக்கும்! சந்திரா என்கிற அந்தப் பெண்ணின் குணசித்திரம் தமிழ்த் திரைப்படங்களிலே காண முடியாத ஒரு நூதனமான குணசித்திரம்.

'அவள் ஒரு தொடர்கதை' கவிதாவின் ஆருயிர்த் தோழி.

உயிரோட்டமுள்ள இப்படிப்பட்ட ஒரு கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக ஒரு புதிய முகத்தை நான் தேடிக் கொண்டிருந்த நேரத் தில்தான் அவரை யாரோ அழைத்து வந்தார் கள்.

"பெயர் 'நீரஜா' " என்றார்.

"அசல் பேரு ஜெயலட்சுமி" என்றார்.

"அசல் பெயரே அழகாக இருக்கிறதே! இந்த 'ஜா'வெல்லாம் எதற்கு?" என்றேன்.

சிரித்துக் கொண்டார்.

"தெலுங்குப் பெண்" என்றார். "தந்தை திரைப்படத் துறையிலே ஒரு துணை டைரக்டர்" என்றார்.

"தமிழில் பேச முடியுமா?" என்று கேட் டேன்.

"தெலுங்கை விட தமிழில்தான் சுத்தமா கப் பேசுவேன்" என்றார்.

சில வசனங்களைக் கொடுத்துப் பேசச் சொன்னேன்.

கணீர் கணீர் என்று... ஆணி அறைந்தாற் போல்... அட்சர சுத்தமாக... கடைசி சிலபின் கள் (syllables) கொஞ்சம் கூடத் தேயாமல்...

ஜெயலட்சுமி சந்திராவாக ஆனார்.

படம் வெளிவந்து, அவர் நடித்திருந்த அந் தக் கதாபாத்திரத்திற்குத்தான் எத்துணை வர

வேற்பு? அந்தப் படத்திலே அவர் அடிக்கடி உபயோகப்படுத்தும் அந்த ஹிந்தி வார்த்தை அவரது பெயரோடு ஐக்கியமாகி ஜெயலட்சுமி, "ஃபடாஃபட் ஜெயலட்சுமி"யாக மாறினார்.

அழகிய சின்ன முகம். ஆனால் சின்னஞ்சிறு கண்கள். இவற்றுக்கு ஈடு கொடுப்பதைப் போல் அழகிய இனிமையான குரல். அந்தக் குரலில் அவர் செய்யும் ஏற்ற இறக்கங்களின் மூலம் பாத்திரத்தின் தனித் தன்மைகளை நமக்குப் பிரித்துக் காட்டும் அவரது அசாதாரண சாமர்த்தியம்.

அவள் ஒரு தொடர்கதை சந்திராவும் அவரது விதவைத் தாயாரும் இருவரும் ஒருவருக்கொருவர் தெரியாமலேயே ஒரே ஆண் மகனுடன் தொடர்பு கொண்டிருக்கும் அந்த உபகதை, பொதுவாக யாரையுமே முகம் சுளிக்க வைக்கும்.... அதிலும் 20 ஆண்டுகளுக்கு முன்னால்!

இப்படிப்பட்ட சம்பவக் கோர்வைகளைக் கையாள்வது என்பது கத்தி மேல் நடப்பதைப் போன்ற அனுபவம்.

இந்த அதீதக் கற்பனையிலிருந்து சற்றும் காயப்படாமல் சாமர்த்தியமாக தப்பித்து வெளியே வருவது இயக்குநருக்கு மட்டுமல்ல; அந்தக் கதாபாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகையருக்கும் ஒரு சவால்தான்.

இப்படிப்பட்ட சவால்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் எனது உதவியாளர்கள் அவ்வளவு சுலபத்தில் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

"இது anti sentiment! இதை ரசிகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்று ஒரு உதவியாளர் ஒற்றைக் காலில் நின்றார்.

SENTIMENT!

தமிழ்த் திரையுலகில் அடிக்கடி பேசப்படும் வார்த்தை இது. சரியான அர்த்தம் புரியாமலே பேசப்படும் ஒரு வார்த்தை.

ஒப்புக் கொள்ளப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட மனித உறவுக் கோட்பாடுகளையும் பண்புகளையும் sentiment என்று சொன்னால் இதற்கு எதிர்மறையாகச் செயல்படுபவை anti sentiment என்று கொள்ளலாம்.

ஒரு தாயும் மகளும் ஒருவனையே விரும்புவது என்பது சமுதாயத்தினால் வரையறுக்கப்



கே. பாலசந்தர்

பட்ட கோட்பாடுகளுக்கு எதிராக இருப்பதால், இப்படிப்பட்ட ஒழுக்கமுறை முரண்பாடுகளை திரைக் கதைகளிலே தவிர்க்கலாமே என்று ஒரு சாரார் வாதிப்பதுண்டு.

யதார்த்த ரீதியில் பார்க்கப் போனால் சில முரண்பாடுகளை நாம் வாழ்க்கையிலே சந்திக்கத்தானே செய்கிறோம். படைப்புகளிலே அவற்றை தவிர்த்துக் கொண்டு ஓடுவதில் சவால்கள் இல்லை!

Don't just avoid challenges! Over come them.

அதில்தான் நமது திறமையும், தனித்துவமும் இருக்கிறது என்று தர்க்கம் பண்ணுவேன். உலகத்திலுள்ள விதவிதமான பூக்கள் அத்தனையும் ஒரே அளவு, ஒரே வண்ணம், ஒரே வாசனையுடன் இருந்திருந்தால் இந்தப் பூமிக்குக் கவர்ச்சியே இல்லாமல் போயிருக்கும்.

அதே போலத்தான் குணசித்திரங்களும் திரைக்கதை காட்சிகளும்.

சில fast குணசித்திரங்களைக் கையாளும்

போது அவர்களது அடிப்படைத் தன்மைக் கேற்ப அந்த குணசித்திரத்திற்கு மிகப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்துத்தான் character round up பண்ண முடியும். அப்படிப்பட்ட shock treatment தான் இந்த உபகதையின் climax.

கதை சொல்லப்பட்ட விதத்தில் இந்த அதிர்ச்சியை ரசிகர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்பது நிரூபிக்கப்பட்டது.

அபூர்வ ராகங்கள்!

வேதாளம் சொல்லிய ஒரு புதிர்தான் அபூர்வ ராகங்களின் ஆதாரம்.

அந்தக் கதையின் கருவும் எனக்கு ஒரு சவாலாகத்தான் அமைந்தது. அபூர்வ ராகங்கள் வெகுவாகப் பாராட்டுக்களையும் ஜனாதிபதியின் விருதையும் பெற்றுத் தந்தது.

'சாத்தான் வேதம் ஓதுகிற மாதிரி' என்பது ஒரு பழமொழி.

வேதாளம் போட்ட புதிரைப் போல ஒரு சாத்தான் ஓதுகின்ற வேதத்திலும் ஒரு நல்ல challenging knot இருந்தால் அதையும் நான் திரைக்கதையாக்கத் தயார்! ஃபடாஃபட்!

BACK TO JAYALAKSHMI.

'முள்ளும் மலரும்' ஜெயலட்சுமியை எளிதில் மறந்து விட முடியுமா என்ன?

'அவள் ஒரு தொடர்கதை'க்குப் பிறகு அவர் என்னுடன் மீண்டும் பணி செய்கின்ற வாய்ப்புக் கிட்டியது. ஆனால் ஏதோ தவிர்க்க முடியாத காரணங்களினால் அந்த வாய்ப்பு கைநழுவிப் போய் விட்டது.

'முள்ளும் மலரும்' 100வது நாள் விழா மேடையில் அவரைச் சந்தித்தேன்.

"இன்னொரு முறை உங்கள் இயக்கத்தில் நான் நடித்து, என்னை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்" என்று தமது விருப்பத்தை என்னிடம் சொன்ன அவர், அதை நிறைவேற்றிக் கொள்ளாமலே...

'அவள் ஒரு தொடர்கதை'யில் அவரது தாயாருக்குக் கிடைத்த முடிவை நிஜ வாழ்க்கையில் இவர் தம்முடையதாக ஆக்கிக் கொண்டு விட்டாரே!

பாவம் ஜெயலட்சுமி!

அவரது வாழ்க்கையும் அவர் அடிக்கடி உபயோகித்த அந்த வார்த்தை போல் ஆகி விட்டதே! ஃபடாஃபட்!

பாவம்! பாதி நடிகைகளின் சொந்த வாழ்க்கை இப்படித்தான் சின்னாபின்னமாகிச் சிதறிப் போகிறது.

உணர்ச்சிகளை நீங்கள் கட்டுப்படுத்த முடியாமல் உங்களைக் கண்ணீர் விடச் செய்பவர்கள்... அவர்களே தங்களது உணர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சொந்த வாழ்க்கையில் அற்பாயுசில் பலியாகிறார்கள். இது என்ன சாபக்கேடோ... ஆண்டவனுக்கே வெளிச்சம்!

அன்று! மிகப் பிரபலமான கன்னட நடிகை கல்பனா. பின்னால் ஒரு ஷோபா! அதன் பின் ஒரு ஜெயலட்சுமி!

முதல் நடிகையைத் தவிர மற்ற இருவருமே தமிழில் என்னால் அறிமுகப்படுத்தப் பட்டவர்கள் என்று நினைத்துப் பார்க்கும் போது, should I blame myself?

எனது கையில் மோதிரம் எதுவும் இல்லாதபோதே 'குட்டுகின்ற ராசியான மோதிரக் கரம்' என்று சொல்கிறார்களே, அந்தக் கரத்தைக் குற்றம் சொல்வதா? அல்லது அவர்களைக் குட்டித் தீர்த்த விதியை நொந்து கொள்வதா?

இப்படி நடிகைகளில் மர்லீன் மன்ரோ முதல் ஜெயலட்சுமி வரை கணக்கெடுத்துப் பார்த்தால் எண்ணுவதற்கு விரல்கள் போதவில்லை.

ஓர் இழப்பு ஏற்படும் போது அது பெரிய tragedy ஆகிறது.

இப்படிப் பல இழப்புகளைச் சந்திக்க நேரும் போது, அது வெறும் புள்ளி விவரம் ஆகி விடுகிறதே!

LIFE IS A PARADOX.

(தொடரும்)

"அந்த பாங்க்ல லோன் போட்டு பசு மாடு வாங்கினவங்க யாரும் ஒழுங்கா கடனை அடைக்க மாட்டாங்கன்னு தோணுது."

"எப்படி...?"

"அந்த மானேஜர் அந்த கடனைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'கோ தானம்' னுதான் சொல்றார்!"

— சீர்காழி வி. ரேவதி





பாலம்

●● இறால் பண்ணை மற்றும் குஞ்சு பொரிப்பகம் அமைக்க நல்ல அனுபவம் உள்ளது. முதலீடு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

— ராஜன் ஸ்ரீனிவாஸ்,
கோல்டன் ஹார்வெஸ்ட்
337, அண்ணாசாலை,
சென்னை - 600 035

●● "ஆதித்தன் காதல்" என்ற, நான் எழுதிய சரித்திர நாவலின் பிரதி ஒன்று கொடுத்து உதவினால், மறுபதிப்பு வெளியானதும் இரு பிரதிகள் அனுப்பி வைக்கிறேன். அல்லது விலைக்கு வாங்கவும் தயார்.

— ஆர்வி,
22, ரங்கையா தோட்டம் தெரு, சென்னை - 600 004.

●● 13.1.95 - ல் மதுரையிலிருந்து திருவள்ளுவர் பஸ்ஸில் திருச்சி வழியாக விழுப்புரம் வரும் வழியில் ஒரு வி.ஐ.பி. ஸூட்கேஸ் காணாமல் போனது. தவறுதலாக யாரேனும் எடுத்துச் சென்றிருந்தால் திருப்பித் தந்து உதவவும்.

— எஸ். ரெங்கன்,
K-62/3, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102.

●● கடந்த பல ஆண்டுகளாக விழி இழந்த சகோதர சகோதரிகளுக்குப் பணியாற்றி வருகிறேன். மணமாகாத இவர்களில் பலருக்குத் தக்க வரன் தேடுகிறேன். மணம் புரிய விரும்புவோர் எழுதவும்.

— வி. ராஜசேகர்,
சமூக சேவை மையம், 12/11, மணவிபுதுநகர்,
சென்னை - 600 103.

●● வானொலியில் தேவையற்ற சப்தங்களைக் குறைக்கும் Hash Filter பற்றிய வரைபடம் உள்ளது. இதனைத் தயாரித்துத் தரும் ஆற்றல் உள்ளவர்கள் அணுகவும்.

— மு. தனகோபாலன்,
அரசினர் மருத்துவமனை, திருவாரூர் - 610 002.

●● போன்சாய் - பூந்தொட்டியில் மரங்கள் வளர்க்கும் முறை பற்றிய புத்தகம் யாரிடமாவது இருப்பின் விலைக்கு வாங்கிக் கொள்கிறேன்.

— எஸ். வேங்கடாசலம்,
15/1, கடலை கோயில் சந்து,
பாளையங்கோட்டை - 627 002.

●● 1936 - ல் வெளி வந்து கொடிருந்த "ஸங்கீத அபிமானி" என்ற மாதாந்திரப் பத்திரிகையை இலவசமாகவோ அல்லது விலைக்கோ கொடுக்க விரும்பும் அன்பர்கள் எழுதவும்.

— Mrs. Raji Ramanathan,
19311, 63rd Ave, N.E.,
Seattle, Washington
- 98155.

●● திரு தூரன் ஆசிரியராக இருந்து தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் வெளியிட்ட கலைக் களஞ்சியம் தொகுப்புகள் 1 முதல் 9 வரை விலைக்குத் தேவை.

— கே.எஸ். ராதா கிருஷ்ணன்,
12, நாலாவது குறுக்குத் தெரு,
இந்திராநகர்,
சென்னை - 600 020.

●● இரண்டு ஆண்டுகளாக முழங்கால் மூட்டு வலி. அங்குள்ள Lubrication, கெட்டிப்பட்டுப் போனதால் நடக்க சிரமம். ஏதேனும் முறையில் குணமானவர்கள் விவரம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

— எம்.வி. ஜயராமன்,
22, ஆலங்காத்தா பிள்ளைத் தெரு,
சென்னை - 600 005.

●● கோவையில் ஹிப்னாடிசம் கற்றுத் தரும் 'ஹிப்னோ' பள்ளியின் முகவரி தேவை.

— சகா. நாகராஜ்,
41, தெப்பக்குளம் வீதி,
பொள்ளாச்சி
- 642 001.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது.
— ஆசிரியர்.)

ஒரு நூறு காணும் ஒன்பதாண்டுச் சாதனை!

திருச்சி என்றதும் மலைக்கோட்டையுடன் பழமையான புனித லூர்தன்னை ஆலயமும் மனசுக்குள் நிமிர்ந்து நிற்கிறது.

பழமை என்றால் மார்ச்- 19, 1995ல் நூற்றாண்டைக் கொண்டாடும் அளவுக்குப் பழமை! கம்பீரமும் புனிதமும் நிறைந்தது லூர்தன்னை ஆலயம். தெற்கு பிரெஞ்ச் தேசத்தில் உள்ள லூர்து அன்னை ஆலயத்தின் மறுபதிப்பு.

அண்ணாந்து பார்த்தால் ஆச்சர்யம் தரும் உயரமுள்ள கூம்பு வடிவ ஆலய கோபுரம். அதன் முடிவில் சிலுவை. 219 அடி உயரம். அதில் ஏழு அடி உயரம் சிலுவை மட்டுமே.

உள்ளே நுழைந்ததும் இடது பக்கம் லூர்தன்னை கெபியும், வலது பக்கம் ஆண்டவர் தன் இருதயத்தைத் திறந்து காட்டும் திரு இருதய கெபியும் உள்ளன. (கெபி-சிலை அமைப்பு)

அடுத்து நம்மை உள்வாங்கிக் கொள்ளும் பெரிய ஹால். ப்ரேயர் ஹால். ஆங்காங்கே மண்டியிட்டு பிரார்த்தனை செய்யும் மக்கள். ஒரே நேரத்தில் 2500 பேர் பிரார்த்தனை செய்யலாம் இங்கு!

158 அடி நீளமும், 38 அடி அகலமும், 62 அடி உயரமும் (வென்டிலேட்டர் கூரை) உள்ள ஹாலென்றால் கற்பனையை விரித்துப் பாருங்கள்.

ஹாலின் இருபக்கமும் பக்கத்திற்கு ஐந்தாகப் புனிதர்களின் சிலைகளையும், வண்ண ஓவியக் கண்ணாடிகளையும் தரிசித்தபடி நடந்தால், முடிவில் தெரிவது பாதிரியார் அருளுரை சொல்லும் இடம். திருப்பலி செலுத்தும் இடம் (altar) என்றும் இதைக் குறிப்பிடுவார்கள்.

கடைசி விருந்து (Last Supper) ஓவியம் தீட்டப்பட்ட இந்த அமைப்புக்குப் பின்னால் இருப்பது பலிபீடம்.

நடுவில், ஏசுநாதர், அவர் இருபக்கமும் பக்கத்திற்கு இருவராய் புனிதர்கள். அதற்கும் மேலே கருணை பொழியும் அன்னையின் உருவச் சிலை.

செயின்ட் ஜோஸப்'ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆலயம் இது. கல்லூரி தனது 150வது ஆண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. கல்லூரிக்கும், ஆலயத்துக்கும் இப்போதைய தலைவர் (RECTOR) ரெவரெண்ட் ஃபாதர் லியோ தாகூர்.



• ஃபாதர் லியோ தாகூர்


இந்த ஆலயத்தின் வரலாறு என்ன? ஆலயத்தின் பங்கு குருக்கள் ஃபாதர் செல்வராஜ் அவர்களிடம் கேட்டோம்.

1890ல் கட்ட ஆரம்பிக்கப்பட்டு, 1903ல் முடிக்கப்பட்ட ஒன்பது வருட மனித சாதனை இந்த ஆலயம்.

வருடக்கணக்கு உதைக்கிறதே என்றால், ஆம்!

நடுவில் ஐந்து வருடங்கள் சில காரணங்களால் ஆலய வேலை தடைப்பட்டு மீண்டும் ஆரம்பித்து முடிந்ததாம்.

திருநெல்வேலிக்காரர்கள்



• ஆலயம்...

காலரை தூக்கி விட்டுக் கொள்ளலாம்.

உங்கள் ஊரைச் சேர்ந்த தனம் சவரிமுத்து என்ற மேஸ்திரியாரின் தனி ஒரு ஆள் மேற்பார்வையில் கட்டப்பட்ட பிரம்மாண்டம் இது!

இத்தனைக்கும் அவர் பட்டப்படிப்பெல்லாம் இல்லாத பாமரர்தான்.

ஃபாதர் F. CELLE என்ற பிரான்ஸ் தேசத்தவரின் வழிகாட்டுதல் மூலம் மேஸ்திரி இதைக் கட்டி முடித்தாராம்!

இதன் மற்றொரு சிறப்பு-இரும்பா மூச்! எங்குமே இரும்பை உபயோகிக்காமல் செங்கல்லால் கட்டி, சுண்ணாம்புக் காரையால் பூசப்பட்டு உயர்ந்து நிற்கும் வரலாற்றுப் பொக்கிஷம்!



• கருணை பொழியும் அன்னை

பலிபீடத்தின் கீழ்ப்புறம் ஒரு விசேஷம்.

எண்கோண பாதாள அறை. ஆறுபக்கங்களில் குருமார்களின் கல்லறை உள்ளது.

குருமார்களுக்கு மட்டுமே இங்கு துயில இடமுண்டு. விதி விலக்கு- மேஸ்திரி சவரிமுத்துவுக்கு மட்டும். 1921ல் அவர் உடல் இந்தக் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது!

ஆலயத்தின் பின்புறம் கண்ணுக்குக் குளிர்ச்சியான பொட்டானிகல் கார்டன்.

சாதாரண அளவை விட இருமடங்கு பெரிதாய்ப் பூக்கும் நாகலிங்க மரம். பூக்கள் மட்டுமே தரும் (காய்க்காத) கேரள மரம் ராயல் பால்ம்ஸ் (Royal palms) போன்ற விசேஷ மரங்களின் அணிவகுப்பு இந்தத் தோட்டத்தில் உள்ளது.

சுற்றிச் சுற்றி செல்லும் சுழல் படிக்கட்டு மூலம் ஆலயத்தின் மே...லே, கூரைப்பகுதிக்குச் சென்றால், ஆஹா!

தலை சுற்றல் நின்றதும், கண் முன்னே விரிந்து நாலாபக்கமும் பசுமை போர்த்திய திருச்சி மாநகரம்!

வருடிக் கொடுக்கும் காற்றை ரசித்தபடி தலையை உயர்த்தினால், அம்மா! எவ்வளவு பெரிய மணி!

தரையிலிருந்து 90அடி உயரத்திற்கு எப்படி இத்தனை கனமான மணியை எடுத்துச் சென்று, இங்கு பொருத்தியிருக்க முடியும்?

வியப்புடன் பார்த்தோம். நாலடி விட்டமும், ஏழடி உயரமும் இருக்குமா? மணி அடிக்க ஏதுவாய் கயிறு கீழ்நோக்கி நீண்ட பயணம் செல்கிறது.

ப்ரேயர் ஹாலின் மேற்கூரையிலும் கட்டடக்கலை நிபுணத்துவம் பளிச்சிடுகிறது!

யானையின் மேற்புறம் போல இருபக்க வளைவுகளாய் எட்டுப் பகுதிகள் கொண்ட சீலிங். நடுவில் ஒரு சாண் இடைவெளி. அதன் கீழே காரையால் ஆன மற்றொரு கூரை.

சர்ச்சின் வெளிப்புறம் இலவச ஆஸ்பத்திரி, வாசக சாலை, இளைஞர் மன்றம் போன்ற சமூக சேவை மையங்கள். எல்லாமே எல்லோருக்கும்! ஜாதி, மதம், மூச்! ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற ஒரே நிபந்தனை: நோயாளி ஏழையாய் இருக்க வேண்டும்!

பிரமிப்பை மனம் முழுதும் நிரப்பியபடி வெளியே வந்தபோது ஒன்று புரிந்தது. எல்லா மதமும் போதிப்பது அன்பை மட்டுமே!

திருச்சியிலிருந்து : **கிருஷ்ணா**

தகவல் சேகரிக்க உதவியவர்கள்:

தேற்றரவு, ஆரோக்கியசாமி

நீங்கள் கேட்டவை - தராசு

தொட்டில் குழந்தைகளுக்குக் காது குத்தியது பற்றி...?



● தி. ரங்கசாமி, கோவை - 25.

? தினமணி நாளேட்டின் நெற்றித் திலகத்தின் மாற்றம் எதைக் காட்டுகிறது?

! ஆசிரியர் மாறியிருப்பதையும், புதிய ஆசிரியர் மரபுகளை மீறாமலே புதுமைகள் செய்ய விரும்புவதையும்.

● மு. இரவிச்சந்திரன், சேலம்.

? ஜெ. ஆட்சியின் உண்மையான சாதனை என்ன?

! மாற்றுக் கட்சியினர் ஒருவர் பாக்கியின்றி இத்தனை ஊழல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்திய பிறகும் தாக்குப்பிடிப்பது.

● என். கார்த்திகேயன், சென்னை - 91.

? இந்த வருட அம்மா புகழ் விளம்பரங்களில் ஏதேனும் வித்தியாசம் தென்படுகிறதா?

! கன்னிமேரி விளம்பரம் ஒரு கலக்குக் கலக்கி விட்டதே, கவனிக்க வில்லையா!

● முருகேசன், தேனி.

? ஒவ்வொரு எம்.பிக்கும் ஒரு கம்ப்யூட்டர் வழங்க மத்திய அரசு முடிவு செய்திருப்பது பற்றி?

! மலிவு விலைக்குக் கிடைக்கும், முயன்று பாருங்கள்!

● ஆ.கு. கிருஷ்ணன், சென்னை - 39.

? சமீபத்தில் பார்த்து ரசித்தது?

! வருமான வரித் துறையினர் டீவியில் காட்டும் ஒரு படம். அதில், லட்சக்கணக்கில் வரி பாக்கி வைத்துள்ள கமலும், ரஜினியும் 'தேச முன்னேற்றத்துக்காக மக்கள் எல்லோரும் தவறாமல் வருமான வரி செலுத்த வேண்டும்' என்று உபதேசிப்பதை வெகுவாக ரசித்தேன். வருமான வரித் துறையினர் பலே கில்லாடிகள்தாம்!

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? ஜெயலலிதா தமது பிறந்த நாளுக்கு நிதி வசூல் செய்யக் கூடாது என்று கட்சிக்காரர்களுக்குக் கட்டளையிட்டிருப்பது...?

! அடிக்கிற மாதிரி அடிக்கிறேன்; அழுகிற மாதிரி அழு என்பது இதுதான்!

● வி. ரமேஷ், அலிவலம்.

? ராஜீவ் காந்தியின் கொலைக்கு தாங்கள்தாம் காரணம் என்று வி. புலிகளின் அதிகாரபூர்வ பேச்சாளர் பாலசிங்கம் ஒப்புக் கொண்டுள்ளது...?

! பிரபாகரனைக் கைது செய்து கொண்டு வர வேண்டும் என்ற சு. சுவாமியின் வாதத்துக்கு வலிமை சேர்க்கிறது.

● எஸ். நாரம்புநாதன், காஞ்சீபுரம்.

? மணிப்பூரில் யாருக்கும் மெஜாரிட்டி கிடைக்காதது எதைக் காட்டுகிறது?

! கட்சி பிளவுபட்டால் மாற்றுக் கட்சிக்குக் கொண்டாட்டம் என்பதைத்தான். மெஜாரிட்டி இல்லாது போனாலும் அதிக அளவில் எம்.எல்.ஏக்களைப் பெற்றுள்ள கட்சி என்ற அளவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்குமாறு கோரப்பட, அந்தக் கட்சியானது தன்னிடமிருந்து பிரிந்து போய் தேர்தலில் நின்று வென்றவர்களை திரும்பவும்

தன்னுடன் சேர்த்துக் கொள்ள முயற்சி மேற்கொள்கிறது. எக்கச்சக்கமாகப் பணம் விளையாடப் போவது உறுதி.

● **எம். இராஜேந்திரன், வால்குடி.**

? 'வர்த்தகத் தடைகள் அனைத்தும் நீக்கப்படும்' என ப. சிதம்பரம் கூறியது பற்றி?

! அதில் ஒன்றும் அதிசயமில்லை. ஆரம்பமாகி, வேகநடை போடும் புதிய பொருளாதாரக் கொள்கையின் தொடர்ச்சி தான். ஆனால், 'பணவீக்கம், அதனால் உண்டாகும் விலைவாசி உயர்வு – இதற்குப் பரிகாரம், அரசாங்கத்தின் உற்பத்திக்கு உத வாத ஊதாரிச் செலவினங்களைக் குறைப்பதுதான்' என்று ஒப்புக் கொண்ட சிதம்பரத்துக்கு வாயில் சர்க்கரை போடலாம். கூடவே, 'குறைக்கும் வழிதான் தெரியவில்லை; குறைக்க முடிய வில்லை' என்று கூறி நழுவுகிறாரே, அதுதான் ஜீரணிக்க முடியாது கசந்தும் வழிகிறது.

● **எம். இரத்தினவேல், பொன்மலை.**

? சன் டீ.வி.யில் அன்பரசு பேட்டி எப்படி?

! அது அதரப் பழசு; லேட்டஸ்ட், நார் நாராகக் கிழிபட்ட டாக்டர் ஸ்ரீதரன் எம்.பி. பேட்டி டாப்!

● **ஈ. எஸ். சம்பத் ராஜ், அரக்கோணம்.**

? தமிழிசைக்காக "கல்கி" ஏதோ போராட்டம் நடத் தினாராமே, என்னங்க அது?

! தமிழர்களைப் பெரும்பான்மை ரசிகர்களாகக் கொண்ட அரங்கங்களில் தமிழ்ப் பாடல்கள் மிகுதியாகப் பாடப் படவேண்டும் என்பதுதான் தமிழிசை இயக்கம். அதன் விளைவாக உருவானதுதான் தமிழிசைச் சங்கம். இது மற்ற மொழிப் பாடல்கள் மீது துவேஷத்தை வளர்க்கிற இயக்கம் அல்ல. தமிழிசைக்கு ஆதரவான இயக்கம் மட்டுமே. மேலும் விவரங்கள் தேவையெனில் பொன்னியின் புதல்வர் - "கல்கி" வாழ்க்கை வரலாறு படிக்கவும்.

● **த. குணசேகரன், கவுந்தப்பாடி.**

? தமிழக அரசியல் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

! குமரி அனந்தனின் லேட்டஸ்ட் குற்றச்சாட்டின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் சசிகலாவின் பினாமியாகச் செயல்படும் சிவா என்பவர் 1500 ஏக்கரை வளைத்துப் போட்டிருக்கிறார் என்றால், தமிழ் நாட்டையே நாளடைவில் ஜெ. விலைக்கு வாங்கி விடுகிற நிலையை நோக்கித்தான் தமிழக அரசியல் போய்க் கொண்டிருக்கிறது!

● **ஜி. இந்திரா, திருச்சி.**

? முதல்வரின் பிறந்த நாளையொட்டி இந்திரகுமாரி தொட்டில் குழந் தைகளுக்குக் காது குத்தியது பற்றி...

! தமிழர்கள் எல்லோரையுமே தொட்டில் குழந்தைகளாக எண்ணித்தான் காது குத்திக் கொண்டிருக்கிறார்கள்!

● **மனோஹர் இன்பராஜ், திருச்சி - 4.** ❑

? ரம்ஜான் விருந்து ஒன்றில் பிரதமரும் சோனியாவும் அருகருகே அமர்ந்திருக்கும் போட்டோவை நாளிதழ்களில் பார்த்தீர்களா?

! ஓ! மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ராவ் தவிப்பதை ரசித்தேன்.

● **கே. வேலுச்சாமி, சிறுநாயகன்பட்டி.**


? நியூஜிலாந்தில் இந்தியா மண்ணைக் கவ்வியது பற்றி...?

! கடைசி ஒரு மாட்ச் வெற்றி, மீசையில் மண் ஒட்டாமல் நிமிர வைத்திருக்கிறது என்பதோடு இன்னொரு ஆறுதல் : கிரிக் கெட்டில் லஞ்சம் தலைவிரித்து ஆடுவ தாக அடுக்கப்படும் குற்றச்சாட்டு களிடை யில், இந்திய அணி மீது அத்தகைய பழி நியூஜிலாந்து விஜயத்தில் சுமத்தப்பட வாய்ப்பில்லை அல்லவா!


• மெல்லவா? விழுங்கவா?


• காது குத்தல்...


• ... வருமான வரி!


• தேச முன்னேற்றத்துக்கு...

63

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
மனோஹர் இன்பராஜ்,
F 45/5 ரயில்வே காலனி.
பொன்மலை - 620 004.

வட்டமேஜை

'கல்கிடோரியல் டச்!'

♦ மேல்மட்டத் தலைவர்களையும், அவர்களின் வசீகர அறிக்கைகளையும் நம்பியிராமல், ஆற்றல் மிக்க அடிமட்டத் தொண்டர்களையே நம்பி, கட்சியை வளர்க்கப் புறப்பட்டிருக்கும் குமரிஅனந்தனைத் தலையங்கம் எழுதிப் பாராட்டியதற்கு ஒரு சபாஷ்.
கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

♦ தமிழிசைக்கு சுக்கிர தசை என தலைப்பிட்ட தலையங்கம் கண்டேன். நாடி நரம்பெல்லாம் இன்பம் பரவியது. முதல்வரை அதற்காகப் பாராட்டி, மற்ற இட்டங்களும் இது போல் செயலாக்கம் காண நாசூக்காக வலியுறுத்தியது, கல்கிடோரியல் டச்!
மதுரை - 16, எல். எம். மங்கை.

♦ ஜெ ஆட்சியில் ஆயிரம் குறைகள் இருந்தாலும் இப்போது ஒரு 'குட்டி' முடிவு எடுத்தால் போதும். கலபமாக மீண்டும் ஐந்து ஆண்டுகள் ஆளலாம். இப்போதைய அமைச்சர்கள் தத்தம் துறைகளைக் காட்டிலும் 'வசூல் துறை' ஒன்றையே அக்கறையோடு நிர்வாகம் செய்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும். ஒவ்வொரு துறைக்கும் என்றில்லாமல் - விஷயம் தெரிந்த, நாட்டு நலனில் அக்கறையுள்ள ஒருவரை Minister without portfolio என்று நியமித்து, அவர் பணியில் குறுக்கிடு இராது என்று உறுதியளித்து - 'தமிழிசைத் திட்டமா என்னாச்சு?' என்று கேட்க - 'மீண்டும் மதுரையில் தமிழ்ச் சங்கமா, என்னாச்சு?' என்று கேட்க - ஏற்பாடு செய்து விட்டால் போதும். ஆட்சியின் ஆயிரம் ஓட்டைகளில் ஐநூறாவது அடைபடும்.
திருச்சி - 2, என். பாலு.

♦ 'என்னவளே அடி என்னவளே' சிறுகதை படித்தேன். உரசல் இல்லாத, ஒட்டல் இல்லாத, ஒப்புக்குக் கூட தனிமையைக் காட்டாத, கன்னித்தனமான காதல், கரம் பார்த்து ஆரம்பித்த போது, உள்ளுக்குள் தென்றல் வீசுவது போல் உடல் சிலிர்ப்புகள். கைத்தலம் பற்றிட காதலித்தவன் அவனை காணச் செல்லும் போது, பட்டாக வெடித்தா பாவையின் கரம் பழுதாக வேண்டும்? ஆதங்கத்தை அப்பிக் கொண்டது மனது. அவனுக்காக அல்ல சூர்யாவிற்காக.
இலால்குடி, ஆங்கரை பைரவி.

♦ பாரத் ஓவர் சீஸ் வங்கியிலும், கொச்சி சி.பி.ஐ. அலுவலகத்திலும் ஹோமம் நடத்திய செய்தியைக் கல்கியில் படித்தேன். செங்கல்பட்டு ஸ்டேட் வங்கியில் 13.2.95-ல் வேத விற்பன்னரைக் கொண்டு வங்கியிலேயே மிகச் சிறப்பாக ஹோமம் நடத்தி முடித்தனர். புகை வெளியேறும் வரை காத்திருந்த கஸ்(ஷ்)டமர்களில் அடியேனும் ஒருவன்.
செங்கல்பட்டு, வி. மதுராந்தகன்.

♦ பழம்பெரும் கோயில்களிலுள்ள நகைகளைப் பாதுகாக்க கூட முடியாமல் பறிகொடுத்து விட்டு இப்பொழுது நானில்லை, நீயில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை. மாறாக, பாதுகாவலர்கள் வெறும் பாதுகாவலர்களாக மட்டுமின்றி பக்தர்களாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இதைத் தடுக்க முடியும்!
போத்தனூர், ஏ. செந்தில்.

♦ முன்னாள் இராணுவத்தினர், காவலர் என காவல் இருந்தும் சிலைகளும் நகைகளும் கொள்ளை போவது தொடர்கதையாகி விட்டது. செய்தி படிப்பதற்குள் திருவட்டார் கோயிலில் மீண்டும் நகைக் கொள்ளை. வேதனைப்படுவதை தவிர வேறு என்ன செய்வது?
மருங்கூர், கிருஷ்ணமூர்த்தி.

♦ கூலிக்கும், கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரவும் மட்டுமே என்றிருக்கும் தொழிலாளி வர்க்கத்தை, மறக்க முடியாத வகையில் மன சிம்மாசனத்தில் ஏற்றி வைத்த வையவன், முதலாளி - தொழிலாளி இடைவெளியைத் தகர்த்தெறிந்து இருவரிடையேயுள்ள பாசப் பிணைப்பையும், அழகாகச் சித்திரித்துள்ளார் தமது இடைவெளிகள் சிறுகதையில்!
நாகப்பட்டினம், நாகை சந்திரா.

♦ 'Madras by Night' கட்டுரை படித்தேன். இரவு முழுக்க நானே நேரில் சுற்றியது போல் இருந்தது. கட்டுரையில் விஷயம் மட்டுமில்லை; விஷமம் கூட இருந்தது!
சென்னை - 90,
ஆர். சண்முகசுந்தரம்.

♦ இரவு நேரத்தில் சென்னையைச் சுற்றிப் பார்க்க அறுபது வயசு ஆட்களை அனுப்பினா இப்படித்தான். ஹோட்டல் - கோவில் - மக்கடை - கொத்தவால் சாவடி... இந்த மாதிரி நேரத்துக்கெல்லாம் ஒரு இருபத்தைந்திலிருந்து முப்பத்தைந்துக்குள் உள்ள ஒருவரை அனுப்பிப் பாருங்க. அந்த நியூஸ்ல வர்ற டேஸ்டே தனி தாங்க!
பரமக்குடி, வே. ஈஸ்வரன்.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka